T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL. XLVI No. 2

March 22 1983

V211,31 N83

N83.46-2;1

136010

22—3—1983

உள்ளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 353—385 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) பெங்களூரில் கூடிய தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டுத் தீர்மானங்கள் .. .. .. | 385—387 |
| (ஆ) வெளியில் நடப்பனவற்றை அவையின் கவனத்திற்குக் கொண்டுவரும் முறை .. .. .. | 387—390 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை ஓட்டிச் சென்றவர் கருநாடக மாநிலத்தில் கொள்ளையரால் சுடப்பெற்றது .. .. | 390—406 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| பவானி சாகரில் மீன்பிடி தொழில் பா[illegible]கப்பட்டுள்ளதால் அப்பகுதி மீனவர்கள் கடனை ரத்து செய்தல் .. | 406—409 |
| 5. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி). | 409—470 |
| கோரிக்கை எண் 18—மருத்துவம் / கோரிக்கை எண் 19—பொது சுகாதாரம் —(தொடர்ச்சி) | |
| திரு. பி. முகமது இஸ்மாயில் .. | 409—411 |
| திரு. ரா. கிருஷ்ணன் ... .. | 412—416 |
| திரு. கே. எஸ். ஜி ஹாஜா ஷெரீப் .. | 416—426 |
| திரு. க. அன்பழகன் .. | 426—453 |
| மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் | 453—470 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 471 |

136010
600 008.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**செவ்வாய்க்கிழமை, 1983 மார்ச் 22.**

**பங்குனி 8, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலைநிற்பதுபோல, மிகப் பெரிதும் உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பைக்காரா மின்நிலையத்தின் பொன்விழா.

* **வினா எண். 496—திரு. கு. ரமணி :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் உள்ள பைக்காரா மின் நிலையத்தின் பொன்விழா கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தத் தேதியில் அது நடக்க உள்ளது?

(இ) பொன் விழாவையொட்டி பைக்காரா மின் திட்டத் தொழிலாளர்கள் மற்றுமுள்ள ஊழியர்களுக்கு வெகுமதியளிக்கும் திட்டம் ஏதாவது பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) பைக்காரா மின் நிலையத்தின் பொன்விழாவைக் கொண்டாட இன்னும் முடிவெடுக்கவில்லை.

(ஆ மற்றும் இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, பைக்காரா மின் நிலையம் ஆரம்பித்து இன்றைக்கு எவ்வளவோ விஸ்தரித்து, விரிவடைந்து இருக்கிறது. அதனுடைய பொன் விழா கொண்டாடுவதற்கு முடிவெடுக்கவில்லையென்று சொன்னால் கொண்டாடப் போகிறார்கள் என்றுதான் அர்த்தம். அதுதான் உள்ளூர

இருக்கக்கூடிய அர்த்தம். அப்படியானால் அந்தப் பொன் விழா கொண்டாடக்கூடிய அந்த நல்ல நிகழ்ச்சியை உருவாக்க, இந்த அளவுக்குப் பாத்திரமாக இருந்து உதவிசெய்த அனைத்து ஊழியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் மன நிறைவை ஏற்படுத்தும் முறையில் நல்லமுறையில் அந்த விழாவைக் கொண்டாட அமைச்சர் ஒரு திட்டத்தை முன்வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மின் திட்டம் 1932 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இயங்கி வருகிறது. பொன் விழாவுக்கு உரிய ஆண்டு 1982 ஆம் ஆண்டு. ஆகவே, விழா கொண்டாடுவதற்கு உரிய வாய்ப்பு இருக்கிறது. அரசு விழாக்கள் இப்பொழுது வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிற காரணத்தினால் இப்பொழுது விழாவை ஏற்பாடு செய்வதற்கில்லை. இந்த முடிவை மாற்றுகின்றபொழுது, இந்த விழாவைக் கொண்டாடலாம் என்று வருகிறபொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மற்ற விழாக்களை ஒத்திபோடுவது போன்ற விஷயம் அல்ல இது. இந்த விழா ஒரு சந்தோஷமான விழா. கொண்டாட வேண்டுமென்ற நோக்கத்தோடு மட்டும் கொண்டாடப்படுவது அல்ல. மின்சாரத் தட்டுப்பாடுதான் இன்றைக்குப் பிரதான விஷயம், சகல மக்களையும் பாதிக்கக்கூடியது. ஆகவே, மின்சாரத்தை நல்லமுறையிலே உற்பத்தி செய்து, அது வீணாகாமல், மக்களுடைய தேவைக்கு— மின்சாரத்தைப் பூரணமாக உற்பத்தி செய்து கொடுப்பதற்கும்— விநியோகிப்பதற்கும், பராமரிப்பதற்கும் பொறுப்பேற்கக்கூடிய தொழிலாளர்கள், ஊழியர்கள் அத்தனைபேரும் அன்றைக்கு ஒரு உறுதி எடுத்துக்கொண்டு, செய்யக்கூடிய நல்ல காரியமாக அது இருக்கும். அமைச்சர் அவர்களும் அந்த விழாவில் பங்கெடுத்துக் கொண்டு அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இதைச் செய்வார்களா? இதற்கும் மற்ற விழாக்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இதைச் செய்ய முன்வருவார்களா? இதை மறுபரிசீலனை செய்து ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காரணங்கள் எதுவாக இருந்தாலும் அரசைப் பொறுததவரையில் விழாக்கள் ஒரே வகைதான். ஆகையினாலே தற்போது இல்லை என்ற முடிவைத்தான் அரசு எடுத்திருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக, விழா இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கேள்வியிலே கூட அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வெகுமதி அளிக்கப்படுமா என்று வருகிறது. விழா இல்லாமலே, பணியாற்றிய அந்தத் தொழிலாளிகளுக்கு இந்தப் பொன்விழா ஆண்டில் அரசாங்கத்தின் சார்பாக வெகுமதி அளிப்பதற்காவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எது முதலில் என்பதுதான் பிரச்னை. அந்த மின் உற்பத்தி நிலையம் 50 ஆண்டுகளாகச் சிறந்த முறையில் இயங்கி இருக்கிறது என்பதற்காக ஒரு பொன்விழா. அதை வாய்ப்பாகக் கருதி வேண்டுமானால் பணியாற்றுகிறவர்களுக்கு நாம் ஏதோ பரிசோ, மற்றவைகளோ செய்யலாம். ஆகவே, முதலை விட்டுவிட்டு வட்டியை மட்டும் பிடித்துக்கொள்வது போல, விழாவை விட்டு விட்டு, தொழிலாளிகளுக்கு மட்டும் பரிசு கொடுப்பது எந்த வகையிலும் பொருத்தம் இல்லை.

### திருவிழாக்கள், திருமணங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் போன்றவைகட்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம்.

* வினா எண் 497—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிழாக்கள், திருமணங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் போன்ற விசேஷங்கட்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணத்தை இரட்டிப்பாக்கும் (Double charge) யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணத்தை இரட்டிப்பாக்குவது சம்பந்தமாக மின்சார வாரியத்தின் நிதி நிலைமைபற்றி ஆராய்ந்த திரு. பணிக்கர், ஐ. ஏ. எஸ். குழுவின் அறிக்கை வந்து விட்டதா? அதன் விவரம் யாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்கும் திரு. பணிக்கர் குழுவுக்கும் சம்பந்தம் இல்லை. இது திருவிழாக்கள், திருமணங்கள், பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் போன்ற விசேஷங்களுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணத்தை இரு மடங்காக்கலாமா என்பதைப்பற்றிய கேள்வி.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பொதுக் கூட்டம் நடத்துவதாக இருந்தால் சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்கள் தவிர, மற்ற இடங்களிலே மின்சாரத்திற்கான அனுமதி கொடுப்பதில்லை. ஆகவே, பொதுக் கூட்டங்களுக்கான மின்சாரம் வழங்குவதைப் பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்து உத்தரவு வழங்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் பற்றாக்குறை இருக்கக்கூடிய நேரம் இது. அதுவும் கடந்த சில நாட்களாக அந்தப் பற்றாக்குறை கவலைப்படத்தக்க அளவிலே நிலைமைகளை உருவாக்கியிருக்கிறது. இந்த நேரத்தில் ஒவ்வொரு யூனிட்டையும் உற்பத்திக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று நாம் எண்ண வேண்டுமே தவிர, பொதுக் கூட்டங்களுக்குப் பயன்படுத்துவதில் பொருள் இல்லை. இருந்தாலும், ஜெனரேட்டர் வைத்துப் பொதுக் கூட்டங்களை நடத்திக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது இல்லை என்று ஒரே வார்த்தையில் சொன்னார்கள். இப்பொழுது திருவிழாக்கள், திருமணங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகிய இவைகளையெல்லாம் ஜெனரேட்டர் வைத்து நடத்திக் கொள்ளலாம், மின்சாரத்தைக் கொடுப்பதில்லை என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். அப்படிச் செய்வதால் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும். ஆனால், நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், முன்னால் இருந்த மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், 100 யூனிட்டுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்துகின்றவர்களிடத்தில் அதிகமான கட்டணமும், அதற்கும் மேலே அதிகமாகப் பயன்படுத்துகின்றவர்களுக்குக் கட்டணம் குறைவாகவும் இருந்தது. இப்பொழுது ஒரே கட்டணமாக ஆக்கியிருக்கிறார்கள். இன்னும் சிக்கனப்படுத்த வேண்டுமென்றால், மின்சாரத்தை வெளியிலே அதிகமாகச் செலவழிக்காமல் இருக்கவேண்டுமென்றால் குறைந்த அளவிற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்குக் குறைந்த கட்டணத்தையும், அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு அதிகமான கட்டணத்தையும் விதிக்கின்ற அளவிற்கு படிப்படியாக உடரும் ஸ்லாப் சிஸ்டத்தைக் கொண்டு வருவதற்கான ஆலோசனை ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய ஆலோசனை ஒன்றை பணிக்கர் தலைமையில் அமைந்த ஒரு நபர் குழு அளித்திருக்கிறது. அது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விசேஷ நிகழ்ச்சிகளுக்குச் செலவழிக்கின்ற மின்சாரத்தைச் சேமிக்கும் அளவிற்கு, மின்சார வாரியத்தின் மூலமாகவே ஜெனரேட்டர்களை விலைக்கு வாங்கி அவைகளை வாடகைக்கு விடுவதன்மூலம் மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும் என்பதோடு, அதே நேரத்தில் வாரியத்துக்கும் வருமானத்தை அதிகமாக உருவாக்க முடியும். எனவே, இது போன்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இருக்கின்ற நிலையங்களில் முழு உற்பத்தியைச் செய்தால் அதுவே போதுமானது. அதுவல்லாமல் ஜெனரேட்டர்களை வேறு வாங்கி வைத்துக்கொண்டு மின்சார வாரியம் கஷ்டப்பட வேண்டுமா என்பதுதான் பிரச்னை.

## இராமேஸ்வரத்தைச் சுற்றியுள்ள தீவுகள்

* வினா எண் 498—திரு. ஏ. எம். சேதுராமன் மற்றும் திரு. த. இராமசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்தைச் சுற்றியுள்ள தீவுகள் எத்தனை?

(ஆ) அவை யாவை?

(இ) சுற்றுலாத் துறை மூலம் அவை மேம்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) முக்கியத் தீவுகள் ஏழு.

(ஆ) குருசடித் தீவு, நல்லதண்ணி தீவு, இராமன் இடை தீவு, சிங்களத் தீவு, பூமரிச்சர் தீவு, பெரிய கண்ட தீவு, நடுத் தீவு.

(இ) இவற்றை சுற்றுலாத் துறை மூலம் மேம்படுத்தும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

திரு ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஏழு தீவுகளில் ஏதாவது ஒன்றை பொதுமக்கள் அல்லது பயணிகள் சென்று பார்ப்பதற்குரிய அளவில் சுற்றுலாத்துறையின் மூலம் மேம்படுத்துகின்ற திட்டத்தை இனிமேலாவது பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே சுற்றுலாத் துறை மேம்படுத்துகின்ற அளவிற்கு இப்பொழுது அங்கே வசதிகள் இல்லை. இந்த இராமேஸ்வரம் பெருந்திட்டம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் அதிலே இந்த குருசடித் தீவு போன்ற ஒன்றிரண்டு தீவுகளை மேம்படுத்துவதுபற்றிப் பின்னாலேதான் பரிசீலிக்க இடலும்.

திரு செ. சிவசாமி : பேரவைத் தலைவரார்களே, குருசடித் தீவு போன்ற தீவுகளில் கடல் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலேயிருந்தும் அங்கே ஆராய்ச்சிக்காகப் பல கல்லூரி மாணவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் ஆராய்ச்சியாளர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த இடங்களையாவது தற்பொழுது சுற்றுலா மையமாக முதலில் ஆக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, அந்தக் குருசடித் தீவிலே, இப்பொழுது கடல் உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் அங்கே வந்து பயிற்சி பெற்று அல்லது ஆராய்ச்சி செய்து திரும்புகிறார்கள். அந்த அளவிற்குத்தான் இப்பொழுது அந்தத் தீவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இராமேஸ்வரத்தினுடைய மெயின் லேண்ட், முக்கியமான அந்த உள்நாட்டுத் தீவே இன்னும் விரிவுபடுத்தப்பட்டு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கிற பாழுது இந்தத் தீவிலே இப்பொழுது கவனம் செலுத்த இயலாது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''சிங்களத் தீவினிக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்'' என்று பாடிய பாரதியின் நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற நேரத்தில், நாம் கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்திருக்கிறோமே, அதைத் திரும்பப் பெறுவதற்கு தமிழக அரசு மத்திய அரசை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.





திரு. மு. அம்பிகாபதி : தீவு பற்றி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய தீவுகள் இருக்கின்றன. அந்தமான் தீவு இருக்கிறது, இங்கிலாந்தே தீவுதான். உறுப்பினரவர்கள் கேட்பது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது.

(முற்பகல் 9–10

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இராமேஸ்வரத்தைச் சுற்றியுள்ள தீவுகளின் பெயர்களைச் சொன்னார்கள். ராமர்தீவு என்று இருக்கிறது. அந்தத் தீவிலே அவர் அந்தக்காலத்தில் இலங்கையிலே ராவணனைப் பார்ப்பதற்குச் சென்றபோது தங்கியதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தீவுக்கு என்ன பெயர் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக விடையளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலன் அவர்கள் இராமாயணத்தை முழுமையாகப் படிக்கவேண்டும். அப்படிப் படித்திருந்தால், இந்தமாதிரி சந்தேகங்கள் எழாது.

### வனத்துறையின் மூலம் ரப்பர் பயிரிடப்படும் மாவட்டங்கள்

*வினா எண் 499—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்திஅறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனத்துறையின் மூலம் எந்தெந்த மாவட்டங்களில் ரப்பர் பயிரிடப்படுகிறது?

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு எத்தனை டன் ரப்பர் தயாரிக்கப் படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தமிழ்நாட்டில் வனத்துறையின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் பயிரிடப்பட்டு வருகிறது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு ரப்பர் எடுக்கப் படுகிறது:

| | | | | |
|---|---|---|---|---|
| 1977-78 ஆம் ஆண்டில் | — | 1,355 | டன்கள் | (டி. ஆர். ஸி.) |
| 1978-79 ஆம் ஆண்டில் | — | 1,516 | டன்கள் | ,, |
| 1979-80 ஆம் ஆண்டில் | — | 1,419 | டன்கள் | ,, |
| 1980-81 ஆம் ஆண்டில் | — | 1,876 | டன்கள் | ,, |
| 1981-82 ஆம் ஆண்டில் | — | 1,982 | டன்கள் | ,, |

**திரு. த. வேணுகோபால்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வனத்துறையின் மூலம் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில், ரப்பர் தோட்டங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். மற்ற மாவட்டங்களில் வனத்துறையின் மூலம் ரப்பர் தோட்டங்களை உருவாக்குவதற்கு என்ன சங்கடங்கள் இருக்கின்றன! ரப்பர் பயிரிட்டால், அங்கெல்லாம் வளராதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ரப்பர் ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையிலே, ஒரு குறிப்பிட்ட உயரத்திலேதான் வளர்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, கன்னியாகுமரி மாவட்டம்தான் இரண்டு பருவக்காற்று மழையையும் பெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் அந்த ஒரு மாவட்டத்தில்தான் ரப்பர் பயிரிடப் படுகிறது. தமிழகத்தில் வேறு மாவட்டங்களில் இப்படிப்பட்ட சீதோஷ்ண நிலை இல்லை.

**திரு. த. வேணுகோபால்** : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் இரண்டு பருவக்காற்று மழை பெய்கிற காரணத்தால் ரப்பர் அங்கு வளர்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் பருவமழை தவறிய காரணத்தால் இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட ரப்பர் உற்பத்தி குறைந்திருக்கிறதா அல்லது கூடி இருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் விளக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்கு இப்பொழுது என்னிடத்தில் விவரம் இல்லை. இந்த ஆண்டுபற்றிய விவரங்கள் இனிமேல் தான் கிடைக்கும். அன்றாடம் பெய்கிற மழையை வைத்து மாத்திரம் ரப்பர் உற்பத்தி நிர்ணயிக்கப்படுவதில்லை. ஏற்கனவே வளர்ந்திருக்கிற மரங்களிலிருந்துதான் ரப்பர் எடுக்கப்படுகிறது. இந்த மழை பாதிப்பினாலே, பெரிய அளவிற்கு அந்த உற்பத்தி பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்காது.



**திரு. கோவைத்தம்பி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ரப்பர் தோட்டங்களைக் கண்காணிக்க ஒரு வாரியத்தை அரசு அமைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். அந்த வாரியத்திற்கு முழு பொறுப்பும் அளிக்கப்பட்டிருக்கிறதா? ரப்பர் ஏற்றுமதி செய்ததன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு என்ன லாபம் கிடைக்கிறது ? கன்னியாகுமரி மாவட்டத்தில் இதை விஸ்தரிக்க அரசு முடிவு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : தலைவரவர்களே, இந்த ரப்பர் தோட்டங்களை நிர்வகிப்பதற்கு தனியான சுயாட்சி பெற்ற ஒரு கழகம் அமைப்பதற்கு இப்போது அரசு முடிவு செய்து ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதற்கான நிர்வாக அமைப்பு எப்படி அமையவேண்டும் என்ற விவரங்கள் எல்லாம் இனிமேல்தான் உருவாக்கப்படும். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனால், அரசுக்கு எவ்வளவு வருமானம் என்று உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு நேரிடையாக ஏற்றுமதி செய்வதில்லை. நாம் ஏலத்தின் மூலமாக இங்கே இருப்பவர்களுக்குத்தான் விற்பனை செய்கிறோம். தனியாகக் கேள்வி போட்டால், விரிவாக விடையளிக்க இயலும்.

**திரு ஹே. ஹேமச்சந்திரன்** ; தலைவரவர்களே, அமைச்சரவர்கள், கொடுத்த கணக்கிலிருந்து, ஒவ்வொரு வருடமும் ரப்பர் உற்பத்தி பெருகிக்கொண்டே வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அப்படி உற்பத்தி அதிகமாக எடுத்துக்கொடுத்த தொழிலாளிகளுக்கு சென்ற காலத்திலும், தற்போதும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு பிரத்யேக ஊதியமும் கொடுக்கப்படவில்லை என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு, சென்ற காலத்திற்கு அவர்களுக்கு ஏதேனும் பிரத்யேக ஊதியமோ அல்லது நன்கொடையோ, கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இன்று ஏலத்தில் விடப்பட்டுக் கொண்டிருக்கும் ரப்பர், அரசின் தேவைக்காகவே பயன்பட்டுக் கொண்டிருக்கிற முறையிலே பேருந்துகளுக்கும், மற்றும் தேவையான டயர் உற்பத்தி செய்வதற்கும் அல்லது தொழிற் சாலை நிறுவுவதற்கும் ஏதாவது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** ; மாண்புமிகு தலைவர் அவர்களே, உற்பத்தி அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறது என்கிற புள்ளிவிவரத்தை வைத்து அப்படி உற்பத்தியை அதிகரித்த தொழிலாளர்களுக்கு போனஸ் அல்லது வேறு தொகை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்

கிறார்கள். இந்த உற்பத்தி அதிகரித்துக்கொண்டு வருகிறது என்ற கணக்கு ஒருபுறம் இருந்தாலும், இன்னும் அதற்காக போடப்பட்ட மூலதனம் எடுக்கப்படவில்லை என்கிற நஷ்டக் கணக்கு இன்னொருபுறம் இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் தொழிலாளர்களுக்கு அப்படிப்பட்ட பிரச்சனை வருகிற போது அரசு நேரடியாக நடத்துகிற நிர்வாகத்திற்கு உட்பட்ட துறைகளிலிருந்து அத்தகைய விதிமுறைகள் நமக்கு இல்லை என்ற காரணத்தால் தொழிலாளர்களுக்கு இத்தகைய நிதி உதவியை செய்ய முடியவில்லை. இனிமேல் அதற்கு என்று தனியாக கழகம் அமைக்கப்பட இருக்கிற காரணத்தால் இப்பிரச்னைகளை அந்தக் கழகம் பரிசீலிக்கும்.

**ஜவ்வாது மலைப்பகுதியிலுள்ள பட்டா நிலங்களில் மரங்களை வெட்ட விதிக்கப்பட்டுள்ள தடை.**

*வினா எண் 500—திரு. இல. பலராமன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வனத்துறையின் மத்தியில் இருக்கும் (ஜவ்வாது மலைப் பகுதியில்) பட்டா நிலங்களில் உள்ள மரங்களை அப்புறப் படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) எவ்வளவு மரங்களை அப்புறப்படுத்த அனுமதி வழங்கப் பட்டது?

(இ) இதன் எடை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (அ, ஆ, மற்றும் இ): 6-8-1979 நாளிட்ட அரசாணை எண் 844ன்படி அப்பகுதியில் சுற்றுச் சூழ்நிலைகளைப் பாதுகாப்பதற்கும் மரங்கள் தவறான முறையில் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கும் பட்டா நிலங்களில் பச்சை மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா நிலங்களில் இருக்கக்கூடிய மரங்களை வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்றுஅமைச்சர்அவர்கள் கூறினார்கள், 5 ஏக்கருக்கு உட்பட்ட சிறிய விவசாயிகள் தங்களுடைய விளை நிலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி பயிர் செய்ய இது போன்ற மரங்களை அப்புறப்படுத்துவதற்கு ஆகிலும் ஒரு உத்தரவை வழங்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன். இந்த பட்டா நிலங்களில் காட்டு நிலங்களில் இருக்கக்கூடிய மரங்கள் சரியானபடி சர்வே செய்யப்படாமல் உள்ளதால், சில பிரச்சினைகள் வருகின்றன. எனவே அந்த பட்டா நிலங்களில் உள்ள மரங்களை சரியானபடி சர்வே செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே மட்டுமல்ல இந்தநாடு முழுவதுமே இருக்கின்ற பிரச்சினை யாருடைய நிலங்களில் மரங்களை வெட்டுவது என்பது அல்ல. மரங்களை வெட்டாமல் எப்படி பாதுகாப்பது என்பதுதான் பிரச்சினை. ஆகவே 5 ஏக்கருக்கு உள்ளே உள்ள பட்டாதாரர்கள் அல்லது 5 ஏக்கருக்கு அதிகமாக உள்ளவர்கள் என்ற பிரச்சினை கிடையாது. மரங்கள் பெரிய அளவிலே, நீண்ட காலமாக வளர்ந்து இருக்கிற வயதான மரங்களை வெட்டாமல் பாதுகாக்க வேண்டும் என்பது இன்றைக்கு இந்திய அரசினுடைய கடுமையான வேண்டுகோள். மாநில அரசு இதை கடுமையாக அமுல் நடத்திக் கொண்டிருக்கிறது. என்றாலும் வயதான முதிர்ந்த மரங்கள், செத்துப்போன மரங்கள் ஆகியவற்றை வெட்டலாம் என்பதற்கு விதிகள் இருக்கின்றன. அப்படி குறிப்பிட்டு அனுமதியைக் கேட்டால் அந்த வேண்டுகோளைப் பரிசீலிப்பதற்கு குழு இருக்கிறது. அந்தக்குழு பரிசீலித்து அந்த அனுமதியை வழங்கும்.

திரு. இல. பலராமன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்தக் குழுவில் வருவாய்த்துறை சேர்க்கப்பட்டிருக்கிறதா? வேறு யார் யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, ஒரு வனத்துறை அதிகாரி இன்னொரு வருவாய் துறை அதிகாரி மற்றும் இன்னொரு வேளாண்மைத் துறையைச் சேர்ந்த நில அரிப்பைக் கண்டுபிடிக்கின்ற அதிகாரி, ஆகிய இப்படிப்பட்டவர்களைக் கொண்ட குழுதான் இவைகளைப் பரிசிலிக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே ஜவ்வாது மலைப்பகுதியிலே உள்ள பச்சை மரங்களை வெட்டக் கூடாது என அரசு தடை போட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் ஜவ்வாது மலைப்பகுதியிலே பெரிய நிலச்சுவான்தார்கள் யாரும் இல்லை. எல்லாம் ஏழை எளியவர்கள். 2.3 ஏக்கர் வைத்திருப்பவர்கள் அவர்களுடைய குடும்பங்களிலே நடைபெறுகின்ற நல்ல காரியங்களுக்கு சில நேரங்களில் அவர்கள் இந்த மரத்தை வெட்டித்தான் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனால் இப்படிப்பட்ட தடையினால் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய மரங்களை வேண்டுமானால் அரசாங்கம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு ஏதாவது பொருளாதார உதவியை தேவைப்படுகின்ற போது அரசாங்கமே உதவி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் தங்களுடைய தேவைகளுக்கு அல்லது பிற தேவைகளுக்கு மரங்களை வெட்டி விற்பது என்பது தடுக்கப்படவேண்டிய ஒன்று என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. அப்படி எல்லோரும் அவரவருடைய தேவைக்கு மரங்களை வெட்டியதால்தான் இன்று மரங்கள் இல்லை. அந்த மரங்கள் இல்லாமல் இருப்பதால், காடுகள் அழிக்கப்பட்டு, இன்று மழை இல்லாமல், இயற்கையின் சொடுமையான தாக்குதலுக்கு நாம் உட்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மரங்களை அரசே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு வழங்குமா என்று கேட்டு இருக்கிறார்கள். அப்படி ஏதாவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அப்படி யாராவது விரும்புவார்களானால், அப்படி ஒரு அனுமதியைக் கோரி அல்லது அவர்களுடைய அப்படிப்பட்ட கருத்தை அரசுக்குத் தெரிவிப்பார்களானால், அரசு அந்தக் கருத்தைப் பரிசீலிக்கும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, சில பகுதிகளில் மரங்களை வெட்டும்போது 'செலக்டிவ் ஃபெல்லிங்' என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட சில மரங்களை வெட்டுவதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டு, அங்கே அதிகப்படியான மரங்களை வெட்டுவது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இப்போது மாண்புமிகு உறுப்பினர் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். வெட்ட அனுமதி அளித்தால் என்ன விளைவு ஏற்படுகிறது என்பதைத்தான் இப்போது நாம் கண்டு கொண்டு இருக்கின்றோம். ஆகவே, 'அந்த செலக்டிவ் ஃபெல்லிங்' அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட மரங்களை வெட்டுவதற்கான அனுமதியை வாங்கிவிட்டு, அதைத் தொடர்ந்து உள்ளே வேறு மரங்களை வெட்டுபவர்களை கடுமையாகக் கண்காணிக்கவும், அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அதை கிரிமினல் குற்றமாக ஆக்குவதற்கும் அரசு இப்போது சில விதிகளை உருவாக்கியிருக்கிறது.



திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கூறும்போது பல முதிர்ந்த மரங்களை
வெட்டுவதற்கு அரசு உத்தரவு கொடுக்கிறது என்று சொன்
னார்கள். அதே நேரத்திலே சில தனியார் தோட்டங்களிலே—
5 ஏக்கர் அல்லது ஆறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள தோட்டங்
களிலே—சவுக்கு மரங்கள் இருக்கின்றன. இந்த சவுக்கு மரங்
களை 10 ஆண்டுகளுக்குள் வெட்ட வேண்டும். 10 ஆண்டு
களுக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே, அந்த
மாதிரி சவுக்கு மரங்களை வெட்டுவதற்கு அரசு உடனே
உத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு,
அதற்கு அனுமதி பெறுவதற்கு கிட்டத்தட்ட ஒரு மாதம், 2
மாதம், 3 மாதம் ஆகிறது என்பதால், அதற்கான அனுமதியை
வழங்கும் அதிகாரத்தை அங்கேயுள்ள டி.எப்.ஓ.விடமோ அல்லது
ஆர்.டி.ஓ.விடமோ கொடுத்து, அத்தகைய மரங்களை வெட்டு
வதற்கான அனுமதியை அவர்களே வழங்கலாம் என்ற முறையில்
அந்த பவர்ஸை அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்க முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மரங்கள் வெட்டுவதைத் தடுப்பது என்கிற அந்த உணர்வு சொல்லப்படுகிறபோது எல்லா மரங்களுக்கும் என்று சொல்லப்படவில்லை. அந்த மரங்கள் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. 1. வெட்டு மரங்கள், 2. விறகுக்கான மரங்கள். 3. தொழிற்சாலைகளில் மூலப்பொருளாகப் பயன்படும் மரங்கள்.

இந்த வெட்டு மரங்கள் என்று சொல்லப்படுகிறபோது அந்த வகையில் வரும் மரங்கள் மிகப் பெரிய மரங்கள், கட்டிடங்களுக்கு உபயோகிக்கும் மரங்கள். அவைகளை வெட்டுவதில் தான் தீவிரமான கண்காணிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. விறகுக்கான மரங்கள் என்று அவைகளுக்காகவே வளர்க்கப்படுகின்ற மரங்கள் சவுக்கு போன்ற மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி கேட்கிறபோது உடனடியாக அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற நேரத்தில் ஒரு மாதம், இரண்டு மாதம் தாமதமாகிறது என்று சொன்னார்கள். 5—6 ஆண்டுகள் வளர்ந்து நிற்கும் மரங்களை வெட்டுவது ஓரிரு மாதங்கள் காலதாமதம் ஆவதால் ஒன்றும் கெட்டுப்போய்விடாது, அல்லது அழுகிப்போய் விடப்போவது இல்லை. மாண்புமிகு

உறுப்பினர் சொல்வதுபோல், ஆங்காங்கு இருக்கும் லோக்கல் அதிகாரிகளுக்கு அந்த அனுமதியை வழங்கும் அதிகாரத்தை அளித்துவிட்டால், என்ன தவறு நடக்கிறது என்று சொன்னால் அவர்கள் மேலேயுள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் அனுமதியை வழங்கி விடுகிறார்கள். அப்படிப்பட்ட புகார் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் எழுப்பப்பட்டு, பேசப்பட்டது. ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரத்தை ஆங்காங்கு இருக்கும் அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டால், எந்த பரத்திற்கு அவர்கள் அனுமதி வழங்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியாமல் போய் விடுகிறது.

## Village Courts

*Q. No. : 501

Thiru S. SEMMALAI Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(a) whether any decision has been taken to constitute Village Courts and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, கிராம நீதிமன்றங்கள் அமைக்க முடிவு எடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி முடிவு எடுக்கவில்லையென்றாலும், ஏழைகளுக்கு சிறு சிறு வழக்குகளில் எளிதான முறையில் நீதி கிடைக்கவும் நியாயம் வழங்கப்படவும் இதுபோன்ற சிறு சிறு நீதிமன்றங்கள் அமைப்பதன் அவசியத்தை அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். உதாரணமாக பத்து ரூபாய்க்குக் குறைவாக மதிப்புள்ள திருட்டு போன்ற சிறு சிறு வழக்குகளில் விசாரணை மறுப்பதற்கு போலீஸ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்படி மறுக்கப்படுகிற நிலையில் இதுபோன்ற வழக்குகளில் நீதி கிடைப்பதில்லை. எனவே பல்வேறு சீர்திருத்தங்களை தன் துறையில் செய்து வருகின்ற சட்டத் துறை அமைசசர் அவர்கள் இதுபோன்று கிராமங்களில் ஏற்படுகின்ற சிறு சிறு வழக்குகளை, சிறு சிறு சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு ஏதாவது வழி செய்ய இனியாவது ஆராய்வார்களா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை என்றுதான் சொன்னேன். அரசாங்கம் அதைப் பரிசீலிக்கவில்லை என்று சொல்லவில்லை. அரசாங்கம் அதை மிகவும் ஆழமாக தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. ஏற்கனவே இருக்கிற 1888-ம் ஆண்டு கிராம நீதி மன்றங்கள் சட்டத்தில் உள்ள முக்கியமான சிறப்புகளை— அதைப்போன்று மைய அரசு ஒரு குழுவை நியமித்திருக்கிறது திரு. பகவதி அவர்களையும் நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண ஐயர் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு நீதி நிர்வாகக்குழு இதை ஆய்ந்து வருகிறது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் அந்த ஆய்வறிக்கையை மைய அரசு மாநில அரசுக்கு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது வந்த பிறகு எந்தவிதத்தில் இந்த கிராம நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்று ஆய்ந்து குறிப்பாக கிராமங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், நலிந்த பிரிவினர் நீதிமன்றங்களுக்குச் செல்ல அவர்களுக்கு பணவசதி தடைக்கல்லாக இருப்பதால் வழக்குரைஞர்களைக் கூட சந்திக்க முடியாத அளவிற்கு அவர்கள் இருக்கிற காரணத்தால் அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்க என்ன செய்யலாம் என ஆய்ந்து விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, ஏற்கனவே கிராமங்களில் பணியாற்றி வந்த கிராம அதிகாரிகளுக்கு இந்த மாஜிஸ்ட்ரேட் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. இப்போது பணியாற்றி வருகிற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இது போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்றால் அவர்களுக்கு அப்படி வழங்குவதற்கான பரிசீலனை ஏதாவது இருக்கிறதா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இப்போதுள்ள வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர்களுக்கு அப்படிப்பட்ட அதிகாரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே கூறியது போல் கிராம நீதிமன்றங்களுக்காக தனியாக அதை நிறுவுகிற நிலையில் இந்தப்பிரச்னைகள் அநேகமாகத் தீர்ந்துவிடும் என்று அரசு நம்புகிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இப்படிப்பட்ட கிராம பஞ்சாயத்துக் கோர்ட்கள் என்று வைத்து ரூ. 50க்குட்பட்ட சிவில் வழக்குகளையெல்லாம் அங்கேயே விசாரித்து தீர்ப்பளிக்கலாம் என்ற அமைப்பு இருந்தது. இப்போது மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழு அறிக்கை வந்த பிறகு அதைப்பற்றிச்

[1983 மார்ச் 22

கவனிக்கலாம் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் வேண்டுவது என்னவெனில், ரூ. 100-க்கு குறைவாகவுள்ள சிறு சிறு வழக்குகளில், ரூ. 50 க்கு குறைவாக அபராதம் விதிக்கும் நிலையிலுள்ள வழக்குகளில் கிராமப் பஞ்சாயத்து அமைப்பு இருப்பதால் தனியாக கௌரவ மாஜிஸ்ட்ரேட்—நகரங்களில் உள்ளது போன்று கோர்ட்களை கிராமங்களிலும் அமைப்பதற்கு அரசு சிபார்சு செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிராம நீதிமன்றங்கள் அல்லது நியாயப் பஞ்சாயத்துக்கள் என்று அந்தக் குழு சொல்கிற அடிப்படையில் இவற்றை நிறுவி கிராமங்களில் உள்ள பிரச்னைகளைத் தீர்க்கலாம் என்று அரசாங்கம் கருதி வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த கிராம நீதிமன்றங்கள் பற்றிப் பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல்வேறு வழக்குகளில் ஈடுபட்டிருப்பவர்கள், 30%க்கு மேற்பட்டவர்கள் நிதிமன்றத்தில் முறையிடும்போது வாதியானாலும் சரி பிரதிவாதியானாலும் சரி அந்த வழக்குகளை பஞ்சாயத்தில் தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அதை பஞ்சாயத்து செய்ய ஆள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே மேலைநாடுகளில் உள்ளது போன்று ஆர்பிட்ரேஷன் நீதிமன்றங்களை இந்த மாநிலத்தில் கொண்டுவர அந்தப் பரிசீலனையோடு சேர்த்து அரசு பரிசீலிக்குமா?

THE HON. THIRU. C. PONNAIYAN: The proposed Villag: Panchayats or Village Courts will be having more or less the sam: arbitration work.

திரு. என். வி. என். சோமு: ஏற்கனவே சென்னையில் குற்றங்களைக் குறைப்பதற்காக நடமாடும் நீதிமன்றங்களை மீண்டும் அரசு கொண்டுவரப் போவதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே சோழர் ஆட்சிக்காலத்தில் ஐம்பெரும் குழு, எண்பேராயம் என்று கிராமங்களில் இருந்த அந்த அடிப்படையில் மைய அரசு குழுவோ அல்லது மாநில அரசு குழுவோ அதில் விரைந்து செயல்படுத்துமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: விரைந்து செயல்படும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், அந்த அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.



1983 மார்ச் 22]

## சென்னை உயர்நீதி மன்றம் என்பதனை பெயர் மாற்றம் செய்யும் திட்டம்

*வினா எண் 502—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில உயர்நீதிமன்றத்தின் பெயரான 'சென்னை உயர்நீதி மன்றம் என்பதை ''தமிழ்நாடு உயர்நீதிமன்றம்'' என்று பெயர் மாற்ற அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றம் என்ற பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயர் மாற்ற அரசாங்கம் பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 14—1—1969 அன்று நம் மாநிலத்தின பெயரை தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் மாற்றினார்கள். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்தக் காரியத்தைச் செய்கிறோம். இதிலே மைய அரசு அனுமதி வழங்க வேண்டியிருக்கிறதா? மைய அரசு அனுமதி என்றால் நீண்ட காலமாகும். எனவே மைய அரசுக்கு இதுபற்றி மாநில அரசு எழுதிவிட்டதா? எழுதியிருந்தால் உடனடியாக விரைவான நடவடிக்கை எடுத்து 1969லேயே மாற்றப்பட வேண்டிய இந்த பெயர் மாற்றம் காலதாமதமாகி இருக்கிறது என்பதையும் மைய அரசுக்குச் சுட்டிகாட்டி இந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று அரசாங்கம் மாற்றுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969ஆம் ஆண்டு சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டுகின்றபோது, சென்னை உயர் நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயர் மாற்றக்கூடிய திருத்தத்தைக் கொண்டுவரவில்லை. ஆனால், அரசியல் சட்டத்தின் 246 (1) வது பிரிவின்கீழ் மைய அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டு இருக்கின்ற காரணத்தினால், மைய அரசு இந்த பெயர் மாற்றத்தைச் செய்ய வேண்டும். எனவே, மைய அரசை இந்தப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்தி, இதுகுறித்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமுறை இதற்கு காலதாமதம் ஆவதற்குக் காரணம் சொல்லுகின்றபோது, பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலே இருப்பதாக காரணம் சொல்லப்பட்டது. ஆனால், இலட்சத்தீவு கேரளா மாநிலத்திலே இருந்தாலும், அங்கு அந்த மாநிலத்தின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே பெயர் மாற்றத்திற்கு எது தடையாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி தமிழகத்தோடு இணைந்திருப்பதாக சென்னை உயர்நீதி மன்றத்தால் முன்பு காரணம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது பாண்டிச்சேரி தமிழகத்தோடு இணைந்திருந்தபோதிலும், இதுகுறித்து மைய அரசுக்கு தமிழக அரசு அறிவித்து தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்ற வற்புறுத்தும்.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில், பாண்டிச்சேரி தமிழகத்தோடு இணைந்திருக்கின்றது என்ற நிலையில் பதிலளித்தார்கள். அது உண்மையுங்கூட. எனவே, அவர்கள் அனுமதியை ஒட்டு மொத்தமாகப் பெற்று மைய அரசுக்கு அனுப்ப வேண்டுமா அல்லது நாமே அனுப்பினால் செல்லுபடியாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மைய அரசைப் பொறுத்தவரைக்கும், தமிழக அரசு இந்தக் கருத்தை அறிவிக்காவிட்டாலும், பாண்டிச்சேரி மாநிலம் இதை அறிவிக்காவிட்டாலும், தன்னிச்சையாகக் கூட மைய அரசு இதைச் செய்ய முடியும். ஆனால், மைய அரசு இதைச் செய்யவேண்டும் என்று, தமிழ்நாட்டில் உயர்நீதி மன்றம் இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்ற பெயர் சூட்டவேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த அரசு மைய அரசை வற்புறுத்தும். மைய அரசும் மறுக்காமல், இதை நிறைவேற்றும் என்று நம்புகிறேன்,

**பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறைக் கைதிகளுக்கு தண்டனையைக் குறைக்கும் திட்டம்**

***வினா எண். 503**—**திரு. தி. கா. நல்லப்பன், திரு. ஏ. டி. கருப்பையா, திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழகச் சிறைகளில் இருக்கும் தூக்கு மற்றும் ஆயுள் தண்டனை கைதிகளுக்கு தண்டனை குறைப்பு செய்யப்படுமா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இல்லை.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் பெற்றபோதும் அதற்குப் பின்னால் காந்தி நூற்றாண்டு விழாவிலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோதும், சிறைச்சாலைகளிலே இருக்கின்ற கைதிகளுக்கு தண்டனை நாள் குறைப்பு செய்யப்பட்டது என்று தெரிய வருகிறது. ஆகவே, இந்த பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி, இம்மாதிரியான ஏற்பாடுகள் செய்வதற்கு மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர்கள் தந்தை பெரியார், மாண்புமிகு இராஜகோபாலாச்சாரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பிறந்த நாள் விழாக்களை முன்னிட்டு, மரண தண்டனையை ஆயுட் தண்டனையாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வந்தபோதுகூட, அவற்றை ஏற்காமல், தண்டனை குறைப்பு முன்பு வழங்கப்பட்டது. தற்போது 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை, பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி நிறைவேற்ற வேண்டுமென்று வந்திருக்கிறது. அரசு ஏற்கனவே இதைச் செய்து வருகிறது.

**திரு. ஏ. டி. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமனிதன் பாரதியாருடைய நூற்றாண்டு விழாவை நாமும் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இந்தியா முழுவதும் இந்த விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், உலகம் முழுவதும் இதைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த மாமனிதனின் நூற்றாண்டு விழாவையொட்டி, அந்த மாமனிதன் உலகத்திற்கே என்ன வேண்டுகோள் விடுத்தாரோ, உலகத்திலே உள்ள மனிதர்கள் விடுதலை பெற்று வாழ வேண்டும் என்ற உன்னத லட்சியத்தோடு பல கவிதைகளை உலகத்திற்கு வழங்கினார்கள். எனவே, அந்த விடுதலை வீரர் மாமனிதன் நூற்றாண்டு விழாவையொட்டி, சிறையிலே வாடிக் கொண்டிருக்கின்ற ஆயுட்கால கைதிகளுக்கு அல்லது தூக்குத் தண்டனை கைதிகளுக்கு குறைந்த பட்சம், தமிழக அரசு கருணை கூர்ந்து அவரது நினைவாக இந்தக் கைதிகளை விடுதலை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் ஏற்கனவே சொன்னேன்.

10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கிற கைதிகள் பற்றிய விவரங்களை அந்தந்த மாவட்ட அட்வைசரி போர்டு மூலம் கேட்டு, அவர்களுடைய ஆலோசனையை கேட்டு, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்து, கடந்த காலத்தில் இல்லாத அளவுக்கு மிக விரைவாகச் செயல்பட்டு வருகிற இந்த அரசு. இடையிலே சில கோரிக்கைகள் வந்த போதிலும் 13 ஆண்டு, 14 ஆண்டு ஆன பின்னாலும் விடுதலை செய்யவில்லை. அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்து, அவற்றின்மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாரதியார் நூற்றாண்டு விழாவில் தூக்குத் தண்டனை பெற்றவர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று ஏன் சொல்கிறார்கள் என்பது புரியவில்லை ஏதாவது அரசியல் காரணம் இருக்கிறதா? (குறுக்கீடு) இல்லையென்றால் தூக்குத் தண்டனை பெற்றவர்களை ஏன் விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும்? திரு. ஏ. டி. கருப்பையா அவர்களுடைய கேள்வியிலிருந்து நான் அப்படித்தான புரிந்து கொண்டேன். அரசியல் கைதிகள் என்றால் நீங்கள் கேட்பதில் கொஞ்சம் பொருள் இருக்கும். தூக்குத் தண்டனை பெற்றவர்களின் தண்டனையை குறைக்க வேண்டுமென்றால்அந்த கயிற்றின் அளவைத்தான் குறைக்க வேண்டியிருக்கும். (சிரிப்பு) கொடிய குற்றங்கள் செய்தவர்கள் தண்டனையையும் குறைக்க வேண்டுமென்று சொல்வது பொருத்தமாகத் தெரியவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது 10 ஆண்டுகளுக்கு அதிகமாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் அப்படிப்பட்டவர்கள் எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்? ஏற்கெனவே 10 ஆண்டுகள் சிறையில் இருந்து முடிந்தவுடன் ஆயுள் தண்டனை கைதிகளை போர்டில் வைத்து, விடுதலை செய்யும் பழக்கம் இருந்தது. ஆனால் 1978க்குப் பின்னால் சிறைத்தண்டனை பெற்றவர்களுக்கு அது பொருந்தாது. 14 ஆண்டுகள் சிறையில் இருந்து முடிந்த பிறகுதான் போர்டிலே வைத்து விடுதலை செய்யப்படுவார்கள் என்று இருக்கிறது. அதை மாற்றி, முன் போலவே செய்ய ஏற்பாடு செய்யப்படுமா? மத்திய சர்க்கார் தடங்கல் இதில் இருந்தால்கூட, அவர்களை வற்புறுத்தி, 10 ஆண் கள் சிறைத் தண்டனை கழிந்தவுடன் அவர்களை போர்டில் வைத்து விடுதலை செய்ய இந்த பாரதியார் நூற்றாண்டு விழாவை ஒட்டியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவரவர்களே. 10 ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருந்தவர்கள் எத்தனை பேர் கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்ற விவரம் தற்போது இல்லை. ஆனால் அந்த உத்தரவு இருக்கிறது. ஆதிகப்படியான வர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 1978 மது ஆண்டுக்கு முன்னால் தண்டனை பெற்றவர்களுக்குத்த ன் 10 ஆண்டு முடிந் தவுடன் போர்டில் வைத்து, விடுதலை செய்யும் ஏற்பாடு இருக் கிறது. உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்த அடிப்படையில் செய்து வருகிறோம். 1978-க்குப் பின்னால் தண்டனை பெற்றவர்களையும் 10 ஆண்டுகள் முடிந்து விட்டால் அட்வைசரி போர்டுக்கு அனுப்பி, ஆராய்ந்து விடுதலை செய்ய லாம் என்ற குறிப்பை டெல்லிக்கு அனுப்பினோம், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு ரா. உமாநாத்** : தலைவரவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருக்கக்கூடிய ஆயுள் கைதிகளை விடுதலை செய் கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும், எனக்குத் தெரிந்த வரைக்கும், 14 ஆண்டு, 16 ஆண்டு கம்பிளீட் செய்த கைதிகள் கூட சிறையில் இருக்கிறார்கள். 'எக்ஸ்ட்ரீம்லி அப்ஜக்ஷனபிள் கேசாக' இருக்கலாம். அப்படி இருந்தால் 16 ஆண்டுகள் கழித்து அவர்கள் வெளியே வந்தாலும், மீண்டும் அவர்களால் குழப்பம் வரும் என்று அரசாங்கம் கருதலாம். அதில் கூட அமைச்சரவர்கள் தாராளமாக இருந்திருக்கிறார்கள். அதையும் ஓவர் ரூல் செய்து சிலரை விடுதலை செய்திருக்கிறார்கள். இந்த எக்ஸ்ட்ரீம்லி அப்ஜக்ஷனபிள் கேசை கூட ஓவர்ரூல் பண்ணும் போது, போர்டில் வைத்து ஆராய்ந்து விடுதலை செய்வது என்பதில் டிலே ஆகும் என்பதால், 'ஜெனரல் ரூல்ஸ் பார் ஆல் கான்விக்ட்ஸ் ஆஃப்டர் 10 ஈயர்ஸ் 'என்று ஒரு விதியைப்போட்டு அதன்படி ஏன் விடுதலை செய்யக்கூடாது? அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(முற்பகல் 9.40)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்துக்கூட அரசு ஆராய்ந்தது. ஆனால், இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், ஒரு கைதி 7 பேர்களை, 8 பேர்களைக்கூட கொன்றுவிட்டு வந்திருப்பதால், அந்த ஊரே அவர்மீது பகைமை கொண்டு இருப்பதால், அவர் 10, 12 அல்லது 15 ஆண்டுகள் கழித்து வெளியே சென்றாலும் கூட, அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்கிற முறையிலே கூறினார்கள். நான் கூட ஒருவேளை அந்தச் செய்திகள் தவறாக இருக்கலாம் என்று திரும்பவும் அது குறித்து விசாரிக்கச் சொன்

னேன். சில இடங்களில் அப்படிப்பட்ட பிரச்னைகள் இருப்பது உண்மை. ஆகவேதான், 1 மாதம், 2 மாதம் இடைவெளியில் அல்லாமல், 15 தினங்களுக்கு ஒரு முறை அந்த அட்வைசரி போர்டு கூடி இது குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்று, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறிய ஆலோசனையின் அடிப்படையிலேயே, இரண்டு மாதங்களுக்கு முன்பு உத்தரவிட்டிருக்கிறோம்.

**நிலக்கோட்டையில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண் 504—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் நிலக்கோட்டையில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நிலக்கோட்டையில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனால், உயர் நீதிமன்ற நீதிபதிகளின் குழு, ஆய்விற்குப்பின், மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை வத்தலகுண்டில் அமைக்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளது. அதற்கிணங்க, வத்தலகுண்டில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பை உயர்நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளது. இது தொடர்பாக உயர்நீதி மன்றத்திடமிருந்து கேட்கப்பட்டுள்ள சில புள்ளி விவரங்கள் கிடைத்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் இருந்து சில குறிப்புகள் வெளியிடப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த குறிப்பு வந்தாலும் வராவிட்டாலும், எங்களுக்குத் தேவை அங்கே ஒரு நீதிமன்றம். ஆகவே, வத்தலகுண்டு பகுதியிலோ அல்லது நிலக்கோட்டைப் பகுதியிலோ அந்த கோர்ட்டை எங்களுக்கு அமைத்துத் தரவேண்டும். வரக்கூடிய ஏப்ரல் மாதத்திலேயே அதை அமைப்பதற்கான வழி வகைகளை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையிலேதான் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பார்களேயானால்



அப்போதுதான் பிரச்சினை. வத்தலகுண்டிலும் அமைக்கலாம் என்ற ஒரு வாய்ப்பு தந்து கேட்டிருப்பதால், உடனடியாக அது நிறைவேற்றப்படும்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டில் நீதிமன்றம் அமைத்துத் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மன்னார்குடியில் இருக்கிற எஸ். டி. எம். கோர்ட்டை 1 ஆம் தேதி முதல் பட்டுக்கோட்டைக்கு.... (மணியடிக்கப்பெற்றது).

**சிமெண்ட் பர்மிட் வழங்க கடைபிடிக்கப்படும் நடைமுறைகள்.**

*வினா எண். 505—**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு சிமெண்ட் பர்மிட் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) சிமெண்ட் பர்மிட் வழங்க கடைபிடிக்கப்படும் நடைமுறை என்ன?

(இ) கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் கடன் பெற்று, வீடு கட்டுபவர்களுக்கு இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் அத்தாட்சியின் பேரில் சிமெண்ட் பர்மிட் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** அவையின் முன் ஒரு விவர அறிக்கை **வைக்கப்பட்டுள்ளது.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அனுப்பிய நேரத்தில் இந்த லெவி சிமெண்டுக்கு பெர்மிட் வழங்கக்கூடிய அதிகாரம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு தற்போது, கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் போன்றோர்தான் இம்மாதிரியான பெர்மிட்டுகளை வழங்கலாம் என்ற முறையிலே அரசு ஒரு திருத்திய உத்திரவை பிறப்பித்து, அது நடைமுறையில் இன்றைய தினம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

---

**471-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

இம்மாதிரியான முறைகள் அனுசரிக்கப்படுவதன் காரணமாக சிமெண்ட் பெர்மிட் வாங்க வேண்டும் என்று விரும்பக் கூடிய சாதாரண ஏழை மக்கள் வாங்க முடியாமல் அவைகள் கால தாமதம் ஆகின்றன. ஆகவே, கோட்டாட்சித் தலைவர், கோட்ட வளர்ச்சி அலுவலர் ஆகியவர்களுடைய அலுவலகங்களுக்குச் சென்று சிமெண்ட் பெறுவதிலே ஏற்படக்கூடிய சிக்கல்களை தவிர்க்கக்கூடிய முறையிலே, முன்பு அமுலிலே இருந்தது போலவே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், அல்லது வட்டாட்சித் தலைவர் ஆகியவர்களுக்கு இந்த பெர்மிட் வழங்கக்கூடிய அதிகாரத்தை மாற்றி அமைத்துத் தரவேண்டும். அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல தடவை மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களாலே பி. டி. ஓ., தாசில்தார் அளவிலே அந்த உரிமை அல்லது பெர்மிட் வழங்குகிற அதிகாரம் இருந்த போது, பல இடங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. ஏழை எளிய மக்கள் சாதாரணமாக சிமெண்ட் பெர்மிட் பெற முடிய வில்லை என்பதைப் போன்ற பல வகையான குற்றச்சாட்டுகளை பல நேரங்களில் எடுத்துச் சொல்லப்பட்டதன் விளைவாகத்தான், அவர்களைவிட கொஞ்சம் உயர்ந்த நிலையில் இருக்கிற உயர் மட்ட அதிகாரங்களைக் கொண்ட அதிகாரிகளிடம் பெர்மிட் வழங்குகிற உரிமையை கொடுக்க அரசு நடவடிக்கை மேற் கொண்டது. எல்லா மக்களுக்கும் உரிய முறையில், நியாயமான வர்களுக்கு, நியாயமான வழியில் சிமெண்ட் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிலையை அரசு மேற்கொண்டது. இந்த முறை உருவாவதற்குக் காரணமே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்தாம். அவர்கள் அதை நல்ல முறையில்தான் செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே, அதை மீண்டும் தாசில்தார், பி. டி. ஓ. லெவலிலே மாற்றுகின்ற உத்தேசம் இல்லை.

**திரு. இரா. கருப்பையா :** தலைவர் அவர்களே, ஏற்கனவே சிமெண்ட் வழங்கப்பட்ட முறையிலே குறைபாடுகள், ஊழல்கள் நடைபெற்றதன் காரணத்தாலேதான் அம்மாதிரி அமைக்கப் பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த உயர்ந்த மட்ட அதிகாரிகள் கையிலே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக அவைகள் எல்லாம் நடப்பது இல்லை என்று யாரும் சொல்லவில்லை. அந்த நடவடிக்கைகள், ஊழல்கள், புகார்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.



ஆகவே, தவறு நடக்கின்றது என்பதாலேயே அதனை மாற்றுவது என்று சொல்வது சரியாக இருக்காது. ஆகவே பழைய முறையிலேயே கொடுக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்படுமா? அடுத்து கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்காகக் கடன் கொடுக் கப்படுகின்றது. அந்த வகையில் அவர்களுக்கு 4 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படுகின்றது. அதற்கு அப்ரூவ்ட் டைப் டிசைன் இருக்கின்றது. அந்த டிசைன் அடிப்படையில்தான் அவர்கள் வீடு கட்ட வேண்டும். அதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு சிமெண்ட் மூட்டைகள் வழங்க வேண்டும் என்ற வகையில் அதற்கு அங்கீ காரம் அளித்து அந்த அடிப்படையில் கடன் வழங்கக்கூடிய அனை வருக்கும் சிமெண்ட் ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு வழங்க ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும். ஆனால், இப்போது அவர்கள் மனுச் செய்து வாங்கவேண்டும் என்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் கேள்வியினைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவர் அவர்களே, அவர்கள் கடன் பெறக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு சிமெண்ட் கிடைப்பதில்லை. எனவே அவர்களுக்காக தனியாக சிமெண்ட் ஒதுக்கீடு செய்து அவர்கள் கடன் பெற்ற உடனே சிமெண்ட் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதிக்கு என்னுடைய பதிலை முதலில் சொல் கிறேன். அந்தப் பொறுப்பினை ஒப்படைப்பதைப் பொறுத்த வரையில் யாரையாவது நம்பித்தான் ஆக வேண்டும். டீ. டீ. ஓ. அல்லது ஆர். டீ. ஓ. அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகிய யாராக இருந்தாலும் சிலரிடம் ஊழல் இருக்கக்கூடும் என்பதற்காக, அந்தப் பொறுப்பினை யாரிடத்திலுமே கொடுக் காமல் இருக்க முடியாது. இருப்பினும் ஓரளவுக்கு நல்ல நிலைமை கள் ஏற்படும் என்ற வகையில் அதற்குரிய தன்மையில் இப்போது அந்தப் பொறுப்பினை டீ. டீ. ஓ. மற்றும் ஆர். டீ. ஓ. அவர் களுக்குக் கொடுத்து இருக்கிறோம். முன்பு இருந்த முறையில் தவறுகள் அதிகம் நடக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் கள் சுட்டிக் காட்டிய காரணத்தால் உயர்மட்ட அளவிலே அந்தப் பொறுப்பினை ஒப்படைக்க வேண்டும் என்ற வகையில் இவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்து ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் என்பதைப் பொறுத்தவரையில் அவர்கள் வீடு கட்டுவதற்கான தங்களுடைய வீட்டுத் திட்டத்தைக் கொடுக்கின்றபோது அப்ரூவ்ட் இன்ஜினியர் ப்ளானோடு கொடுக்க வேண்டும். ரூரல் ஹவுஸிங் டிபார்ட்மெண்டிலே கூட அதற்கான அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே கூட அந்த அப்ரூவலைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் வீடுகளைக் கட்டுகின்ற போது ஒரு வீடாகக் கட்டுவதில்லை. 40, 50 வீடு என்று சேர்த்துதான் கட்டுகிறார்கள். ஆகவே அவர்கள் எல்லோரும் சேர்ந்து மொத்தமாக அந்த டிபார்ட்மெண்ட் இன்ஜினியர் அல்லது அதற்காக அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளிடம் அப்ரூவலைப் பெற்று அதன் பின்னர் ஆர். டீ. ஓ. விடத்திலே செல்லலாம். அப்போது ஆர்.டீ.ஓ. மற்றும் டீ.டீ.ஓ. ஆகியோர் சிமெண்டை ஒதுக்குவார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு முறை இல்லை என்றால் யார் வேண்டுமானாலும் நான் வீடு கட்டுகிறேன் என்று சொல்லி சிமெண்டைப் பெற்றுக்கொண்டு தவறான வகையில் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகும். அதனால் தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியோடு வீடு கட்டுவதற்கான ப்ளானைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு வரையறையை வைத்திருக்கிறோம். அதைத் தளர்த்துகின்றபோது தவறுகள் நடக்கின்ற சூழ்நிலை ஏற்படும். எனவே அதைத் தளர்த்துவது நன்றாக இருக்காது. பொதுமக்களுக்கும் அதனால் நன்மை செய்ததாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது தவறுகள் நடக்காமல் இருப்பதற்காகத் தான் டீ.டீ.ஓ. அளவிலே அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் கிராமிய வீடு கட்டும் திட்டத்தினை பொறுத்த வரையில் வீடுகளைக் கட்டுவதற்காக 4,000 ரூபாய் சாங்ஷன் செய்து கொடுக்கப்படுகின்ற போது சிமெண்டுக்காக 500 ரூபாய், 800 ரூபாய் என்று அதிகாரிகளால் பிடித்தம் செய்யக் கூடிய நிலைமை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அப்படி அந்த ஆர்.டீ.ஓ., டீ.டீ.ஓ. போன்ற அதிகாரிகளுக்குக் கொடுத்தாலும் உடனடியாக சிமெண்ட் கிடைப்பதில்லை. எனவே சிமெண்ட் உடனடியாகக் கிடைப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே நான் ஏற்கனவே பதில் சொன்னேன். ரூரல் ஹவுஸிங் ஸ்கீமை, பொறுத்த வரையில் அவர்கள் தனித் தனியாக வீடுகளைக் கட்டுவதில்லை. 40, 50 வீடு என்று சேர்த்துத்தான் கட்டுகிறார்கள். அப்படிக் கட்டுவதன் காரணத்தால் அவர்கள் மொத்தமாக ரூரல்





ஹவுஸிங் ஸ்கீம் அதிகாரிகளிடமே அப்ரூவலைப் பெற்றுக் கொண்டு மொத்தமாக டீ.டீ.ஓ.-வுக்கு அப்ளை செய்யலாம். அந்த வீட்டின் அளவைப் பொறுத்த வரையில் இவ்வளவு சதுர அடி இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த அளவுடன் சம்பந்தப்பட்ட துறையிலே இருக்கின்ற அதிகாரிகளின் அப்ரூவலோடு அந்தப் ப்ளானைக் கொடுக்கின்றபோது அவர்களுக்கு சிமெண்ட் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால் எங்கேயாவது அவர்கள் பெறுகின்ற தொகையில் 500 ரூபாய் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது என்றால் அதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு அரசு சிமெண்டு இறக்குமதி செய்து சென்னையில் தனிப்பட்ட நபர்களுக்கு வீடு கட்டுவதற்கு மனுக்கள் பெற்றுக் கொடுக்கிறார்கள். கிராமப் புறங்களில் இப்போது சிமெண்டு அதிகமாக கிடைக்கவில்லை. இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற இதே முறையில் கோட்ட வளர்ச்சி அலுவலர் மூலமாக கிராமப்புற மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று இறக்குமதி செய்யப்படுகின்ற சிமெண்டை அவர்களுக்கு வினியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை.

**அரக்கோணத்திலுள்ள உருக்கு உருட்டாலையை விஸ்தரிக்கும் திட்டம்.**

***வினா எண் 506—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் உள்ள உருக்கு உருட்டாலையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் விஸ்தரிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ;** (அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத்துறையில் நிர்வகித்து வரும் அரக்கோணத்தில் உள்ள தமிழ்நாடு எஃகு ஆலைக்குருகில் புதிதாக ஒரு உருக்கு உருட்டாலை நிறுவப்பட்டு வருகிறது.

(ஆ) இப்புதிய உருக்கு உருட்டாலையை நிறுவுவதற்கு சுமார் ரூ. 7.07 கோடி அளவுக்கு திட்டச் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 25 ஆயிரம் டன் உற்பத்தி செய்கின்ற 6 மில்லி மீட்டர், 8 மில்லி மீட்டர் போன்ற சிறிய அளவு கம்பிகளை இந்த உருக்கு ஆலையில் உருவாக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி ; மாண்புகுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரக்கோணம் உருக்கு உருட்டாலையை ஆரம்பிக்கும்போது நிலத்தை கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்று சொல்லி நிலத்தை எடுத்துவிட்டு இன்னும் சில பேர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது. உருக்கு உருட்டாலையை விஸ்தரிக்கும்போது அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் உருக்கு உருட்டாலை ஆரம்பிக்கப்படவில்லை. அதற்குள் எப்படி வேலை கொடுப்பது. 1984-ம் ஆண்டு முதல் கட்டத்தில் இந்தப் பணிகள் வகுக்கப்பட்டு சிவில் கன்ஸ்டிரக்‌ஷன் இப்போது நடைபெறுகிறது—1984-ல் உற்பத்தி தொடங்கப்படும். வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது நிச்சயமாக நிலம் கொடுத்தவர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உருக்கு உருட்டாலை விஸ்தரிக்கப்படும்போது எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விஸ்தரிப்பு அல்ல. தனி ஆலை. ஏற்கனவே உருக்குப் பாளங்கள் செய்யப்படுகின்றது. இப்போது தனியாக ரோலிங் மில் டிட்கோ பொதுத் துறையின் மூலமாக சுமார் ரூ. 7.07 கோடி அளவுக்கு அந்த புதிய ஆலை துவங்கப்படும். இதனால் சுமார் 150 முதல் 200 பேர்களுக்கு நேரிடையாக வேலை வாய்ப்பு கிடைக்கும்.

திரு. தி. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் உருக்கு உருட்டாலை தற்போது இழப்பில் நடந்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே இதை உடனடியாக விஸ்தரித்து இந்த இழப்பை சரிக்கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். இது விஸ்தரிப்பு அல்ல, புதிய ஆலை. முதலிலே இருக்கிற ஆலையில் உருக்குப் பாளங்கள் தயாரிக்கப்படுகிறது. அதைப் பொறுத்த அளவில் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

## செம்பரம்பாக்கத்தில் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 507—திரு. மெ. ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பரம்பாக்கத்தில் இயந்திரச் செங்கல் சூளை அமைக்கும் திட்டத்தில் தற்போதைய திட்டத்தின்நிலை என்ன?

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (அ) செம்பரம்பாக்கத்தில் புதியதாக இயந்திரச் செங்கல் தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## உரிய காலத்திற்குப் பிறகும் கரும்பைப் பிழியும் சர்க்கரை ஆலைகளுக்கு எக்ஸைஸ் தீர்வையை தள்ளுபடி செய்யும் திட்டம்.

*வினா எண் 508—திரு. பெ. சு. திருவேங்கடம் ; மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பை உரிய காலத்திற்கு பிறகும் பிழியும் சர்க்கரை ஆலைகளுக்கு எக்ஸைஸ் தீர்வையை தள்ளுபடி செய்யப் போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) தமிழகத்தில் இச்சலுகையை பெற்ற ஆலைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (அ) ஆம்.

(ஆ). மற்றும் (இ) ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் 1982ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 30ஆம் தேதி வரையில் உற்பத்தி செய்யும் சர்க்கரை அதற்கு முந்தின

இதே காலத்திய முன்றாண்டு உற்பத்தியின் சராசரி உற்பத்தியை விட அதிகமாக இருந்தால் அவ்விதம் அதிகப்படியான உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் மீதான கலால் வரி வெளிச்சந்தை சர்க்கரைக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 40—ம், லெவிச் சர்க்கரைக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 24.50—ம் தள்ளுபடி சலுகையாகக்கிடைக்கும். இதனால் பயன் பெறும் ஆலைகள் 19.

திரு. பெ சு. திருவேங்கடம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகள் ஏராளமாக கரும்பு பயிரிட்டுவிட்டு அதை சர்க்கரை ஆலைகளில் எடுக்கவில்லை என்ற புகார் ஒரு பக்கம் இருக்கிறது. இந்த திட்டத்தின் கீழ் அதிகமாக 'அன்-ரிஜிஸ்டர்டு கேன்' பதிவு செய்யப்படாத கரும்புகளை விவசாயிகள் தர முன்வருகிறார்கள். அவைகளை அதிகமாக எடுத்து இந்த வரிச் சலுகையைப் பெற்று விவசாயிகளுக்கும் ஓரளவு லாபம் வருகின்ற இந்த பணியினை இந்த ஆண்டிலாவது செய்ய அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே, மைய அரசினுடைய கலால் வரிச் சலுகையை தமிழகத்திலே இருக்கிற 19 ஆலைகள் பெற்றிருக்கின்றன. 3 கோடியே 88 லட்சம் ரூபாய் இப்படிச் சலுகையாக நமக்கு கிடைத்திருக்கிறது. இரண்டே இரண்டு ஆலைகளைத் தவிர—ஒன்று மதுராந்தகம் மற்றொன்று சேலம் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் தவிர மற்ற எல்லா ஆலைகளும் இந்தச் சலுகையைப் பெறுகின்றன. இந்த இரண்டு ஆலைகளிலும் உற்பத்தி குறைவாக இருப்பதால் சலுகையைப் பெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று ரிஜிஸ்டர்டு கரும்புகளைப் பொறுத்த வரையில் பதிவு செய்த கரும்புகளை அரைக்க முடியாதவர்களாக பல ஆலைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட சீஸனுக்குப் பின்னாலே கரும்புகளை அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். பதிவு செய்யப்பட்ட கரும்புகள் அரவை சீசனுக்கு முன்னாலே முடிந்திருக்குமானால் பதிவுசெய்யப்படாமலே இருக்கின்ற கரும்புகள் அருகாமையிலேயே இருக்குமானால் அதையும் கூட அரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ சு. திருவேங்கடம் ; தலைவர் அவர்களே, பதிவு செய்யப்படாத கரும்புகள் ஏறக்குறைய ஒரு மாதம், இரண்டு மாதம் ஆலைகள் எடுத்துக்கொள்ளுமானால் விவசாயிகள் அதைத் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அப்படி இருக்கிற கரும்புகளை அந்த ஆலையினுடைய பருவ்காலத்தை நீடித்து எடுத்துக் கொள்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே, ஒரு சர்க்கரை ஆலை தன்னுடைய பணியை துவங்கி ஒரு அரைவை சீசன் முடிந்ததற்கு பின்னாலே இயந்திரங்கள் பழுதுபார்க்க, ரிப்பேர் செய்ய அடுத்த அரவை சீசனுக்கு ஆயத்தமாவதற்கு குறிப்பிட்ட காலம், 3, 4 மாத காலம் தேவைப்படுகிறது. அந்த நேரத்திலேயும் இயங்கிக் கொண்டிருந்தால் அடுத்த சீசனிலே அரைப்பதற்கு கஷ்டங்கள் வரும். எனவே குறிப்பிட்ட காலத்திலே ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கரும்புகள் முடிக்கப்பட்டு அதற்கு அருகாமையிலேயே அன்ரிஜிஸ்டர்டு கரும்புகள் இருக்குமானால் அதையும் எடுத்துக்கொள்கிறார்கள். ரிஜிஸ்டர் செய்யப்படாத கரும்புகளை ஆண்டு முழுவதும் எடுத்துக்கொண்டிருந்தால் இயந்திரங்களைப் பழுதுபார்க்கவோ அல்லது தேவைப்படுகிற 4, 5 மாதம் ரெஸ்ட் பீரியடோ இல்லையென்றால் அடுத்த அரவை சீசனில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கரும்புக்கும் பாதிப்பு உண்டாகும். எனவே முடிந்த வரைக்கும் உதவி செய்யவேண்டுமென்றுதான் இருக்கிறார்கள்.

மலைவாழ்மக்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பளிக்க கொல்லிமலையில் பழத்தோட்டம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 509—திரு. சி. சிவப்பிரகாசம் ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மலைவாழ் மக்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்க கொல்லிமலையில் பழத்தோட்டம் அமைக்க அரசு உத்தரவிட்டதா ?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சி. சிவப்பிரகாசம் ; தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள வேறு ஏதாவது மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளில் பழத்தோட்டம் அமைக்க அரசு உத்தேசித்து இருக்கிறதா ? இந்த பழத்தோட்டத்தின் மூலமாக எத்தனை மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே கல்ராயன்கருமாந்துறையில் 1037·26 ஏக்கர் பரப்பளவில் 45.9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பழப்பண்ணை அமைக்க 12—5—81-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பண்ணையை அங்கே அமைக்கிற பணி யில் மலைவாழ் பழங்குடியினர் அமர்த்த திட்டமிட்டவாறு பணி கள் அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக 300 பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் ; தலைவர் அவர்களே, தமிழகத்திலே மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய சேலம் மாவட்டத் திலே உள்ள கொல்லிமலைப் பகுதியிலே சுவையான பழங்கள் அதிகமாக விளையக்கூடிய சுற்றுச் சூழ்நிலை இருக்கிறது. அங்கே பழம் பதனிடும் தொழிற்கூடமொன்றை துவக்க அரசு முன்வருமா? அதோடு அடுத்த ஆண்டிலாவது கொல்லி மலையிலே பழத்தோட்டத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; தலைவர் அவர்களே, கொல்லிமலையில் பழப்பண்ணை அமைக்கப்படக்கூடிய திட்டம் பரிசீலனையில் இல்லையென்று ஏற்கனவே நான் தெரிவித்திருக் கிறேன். வருகிற ஆண்டிலே பரிசீலிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அது பரிசீலிக் கப்படும். அதைத்தவிர சேலம் மாவட்டத்திற்கு கொல்லி மலைப் பகுதியிலே பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 6.26 லட்சம் மதிப்பீட்டில் பழம் பதனிடும் பிரிவு ஒன்று அமைப் பதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

**3—10—1982ஆம் தேதி முடிய தமிழில் எம். ஏ. பட்டம் பெற்று வேலை தேடித்தரும் நிலையத்தில் பதிவு செய்துள்ளோர் எண்ணிக்கை.**

*வினா எண் 510—திரு எஸ். இராசாராமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

30-10-1982ஆம் தேதி முடிய தமிழில் எம். ஏ. பட்டம் பெற்று மாநிலத்திலுள்ள வேலைதேடித்தரும் நிலையத்தில் பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?





மாண்புமிகு திரு எம். விஜயசாரதி : வேலை வாய்ப்பகங்களில் 30-10-1982 முடிய முதுகலை (தமிழ்) பட்டதாரிகள் பதிவு செய்து பணிக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 1,768.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | .. | 918 |
| பெண்கள் | .. | 850 |

(முற்பகல் 10·00)

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டதாரிகள் பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? பல ஆண்டுகாலமாக, பதிவு செய்திருக்கும் அவர்களுக்கு வேலை கிடைக்கும் சந்தர்ப்பங்கள் கொடுக்கும் வகையில் எவ்விதமான இன்டர்வியூவும் அனுப்பப்படாமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதற்காகத் தனித் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தமிழில் எம். ஏ. படித்து மாநிலத்திலுள்ள வேலை தேடித்தரும் நிலையத்தில் பதிவு செய்தவர்களைப் பற்றிய கேள்வியாகும். உறுப்பினர் அவர்கள் ஒட்டுமொத்த மான பட்டதாரிகளைப்பற்றி கேள்வியை கேட்டிருக்கிறார்கள். தமிழ் படித்து முதுகலைப் பட்டம் பெற்று இருக்கிறவர்களுடைய தேவைகளைக் கருதி வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு பணி யில் அமர்த்துவதைக் குறித்து பரிந்துரை செய்திருக்கிறோம். இதிலே வேறு எந்த மாற்றத்தையும் செய்வதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

**(அ) பெங்களூரில் கூடிய தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டுத் தீர்மானங்கள்.**

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர் களே, சட்டமன்றக் கூட்டம் இப்போது நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னாலே பெங்களூரில் தென் மாநிலங்களைச் சேர்ந்த நான்கு முதலமைச்சர்கள் கூடிப் பேசியதாக செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான்கு மந்திரிகள் பேசினார்கள். உச்சி மாநாடு நடந்தது என்ற எல்லாவற்றையும் இப்போது விவாதிக்க முடியாது.

**திரு என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இப்போது சபை நடந்துகொண்டிருக்கிறது. முதலமைச்சர்கள் கூடி பேசி முடிவு செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்களுடைய கவனத்தை கவர்கிற பிரச்னையாக இருக்கிறதால், தமிழ் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கிற பிரச்னைகள் பேசப்பட்டிருக்கிறது என்று நம்பப் படுவதால், அங்கு என்ன பேசியிருக்கிறார்கள் என்பதை சபைக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். பலவிதமான பிரச்னைகள் பேசப்பட்டிருக்கின்றன. இதில் அரசாங்கத்தினுடைய பங்கு என்ன என்பது எங்களுக்குத் தெரிய வேண்டாமா ? ஒரு அறிக்கை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாநாடு நடந்தது, ஒப்புக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் போயிருந்தார்கள் அதையும் ஒப்புக்கொள்கிறேன். அதைக் கேட்கவேண்டிய முறைப் படி கேட்கவேண்டும்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே பாயின்டை பற்றி தான். முறைப்படி கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தீர்கள். இந்த அவையிலேயே நாம் பலதடவைகள் டிஸ்கஸ் செய்த மத்திய, மாநில உறவு, நிதியாதார பிரச்னை, விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணய பிரச்னை போன்றவைகள் சம்பந்தமாக அங்கே முதலமைச்சர்கள் கூடி பேசி முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆகவே சபை நடந்து கொண்டிருக்கிறபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் "டு பிஃபோர் வித் தி ஹவுஸ் மஸ்ட் ஆன் இஸ் ஒன் மேக் எஸ்டேட்மெண்ட்" என்ற வகையில் தான் இந்த பிரச்னையை கொண்டு வருகிறேன். இது அட்ஜெர்ன்மென்ட் பிரச்னை அல்ல. அவை நடந்துகொண்டிருக்கிறபோது முதலமைச்சர்கள் கூட்டத்தில் இந்த பிரச்னைகள் பற்றி இப்படி முடிவு எடுக்கப்பட்டது என்பதை பத்திரிகையிலே படியுங்கள் என்பது முறையாகாது ; அட்ஜெர்ன் மென்ட் மோஷனில் கொண்டுவரவேண்டுமென்று அவர்கள் சொல்வதும் நியாயமாகாது. கவர்ன்மென்டினுடைய அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்னையை ஒட்டி, பெங்களூரில் நடைபெற்ற தென்மாநிலங்களுடைய முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுத்த முடிவுகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிற காரணத்தால் அந்த மாநாட்டிலே எடுத்த முடிவுகள் இந்த அவைக்கு அறிக்கை வாயிலாக வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) வெளியில் நடப்பனவற்றை அவையின் கவனத்திற்கு கொண்டுவரும் முறை.

**திரு ஆர். டி. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ். எம்.எல்.ஏ., திரு கே.கே. தாமஸ் அவர்கள், பெரியாற்றிலிருந்து தமிழகத்திற்குப் பாசனத்திற்கும் குடிநீருக்கும் தண்ணீர் விடுவதை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று செய்தித்தாள்கள் மூலமாக, அறிக்கை விட்டிருக்கிறார்கள். இதனால் தமிழகத்திற்குப் பாதகமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, இது சம்பந்தமாக அரசு தக்க......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற மாநிலங்களிலிருந்து செய்தி வருவதைப் பற்றியெல்லாம் ஒன்று 54-வது விதியின்மூலமாக, அல்லது வேறுவிதியின் மூலமாகக் கொண்டுவர முயற்சி செய்யுங்கள்.

**திரு அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசினுடைய கவனத்திற்கு ஒரு பிரச்னையைக் கொண்டுவர விரும்புகிறேன். என்னிடத்திலே ஒரு புகைப் படம் கூட இருக்கிறது. ஆபாச தடைச் சட்டம் அமுலிலே இருக்கிறபொழுது, திருவல்லிக்கேணியிலே வயது வந்தவர்களுக்கு மட்டும் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டு, 'கருணாநிதி குடும்பம் ஒரு பிரேத பரிசோதனை' என்று போட்டிருக்கிறார்கள். போலீஸ் எப்படி அனுமதித்தது ? அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதையெல்லாம், சாயந்திரம் நீங்கள் இன்னொரு கூட்டம் போட்டு......

**திரு அ. ரகுமான்கான் :** சர்க்கார் அனுமதி கொடுக்குமா, சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா........

[1983 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம். மதுரையிலே........ (கூச்சல், குழப்பம்) கேள்வியாகப் போடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** போலீஸ் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகப் போடுங்கள். அப்புறம் பதில் வரும்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** நாங்கள் போடலாமா, அதேபோல

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றம் இதையெல்லாம் விவாதிப்பதில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** பதில் தேவை.

(முற்பகல் 10–10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்) (குறுக்கீடு) இந்த மாதிரி, திடீர், திடீரென்று ஒரு பிரச்னையை எழுப்ப நான் அனுமதிக்க முடியாது. திரு. ரகுமான்கானுக்கும் திரு பாபு ஜனார்த்தனத்துக்கும் எல்லோருக்குமே தெரியும், எந்த எந்த முறையிலே, எதை, எதைக் கொண்டு வருவது என்று.

* * * *

(கூச்சல்-குழப்பம்)

இவை எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. நான் இப்பொழுது சொல்கிறேன், இப்பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்னையை எழுப்பினார்கள். மற்ற மாநிலப் பிரச்னையைப் பற்றிக்கூட இங்கே எழுப்பினார்கள், அதை அனுமதிக்க முடியாது என்று சொல்லி விட்டேன். எனவே, இப்படிப்பட்டவைகளைச் சொல்லி உடனே பதில் சொல்லியாக வேண்டுமென்று சொல்வது எப்படி முறையாகும்?

**திரு. அ. ரகுமான்கான் :** அவை முன்னவரவர்கள் எவ்வளவு பெருந்தன்மையோடு பதில் சொல்ல எழுந்தார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 மார்ச் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறைந்தபட்சம் நாவலர் அவர்களையாவது பாராட்டியதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்; அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன் :** நியாயம் என்னவென்று சொல்லுங்கள். நாவலர் அவர்கள் பேச எழுந்தார்களே, அவர்களையாவது அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாவலர் அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் எடுத்த நிலை நியாயமானது என்று வாதாடுவதற்காகத்தான் நான் எழுந்தேன். வெளியிலே நடைபெறுகின்ற பிரச்னைகளைப்பற்றி இந்தச் சபையிலே கொண்டு வந்து அதற்கு இந்தச் சபையில் பதில் சொல்வது என்பது இயலாத ஒன்று. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டிய பிரச்னை வெளியிலே நடைபெற்ற அரசியல் ரீதியாக நடைபெற்ற ஒன்று. அப்படிப்பட்டவைகளை அரசியல் ரீதியாக வெளியிலே சந்திக்க வேண்டுமே தவிர அரசு அதற்காக பொறுப்பேற்றுக்கொண்டு இங்கே பதில் சொல்வதற்கு இயலாது. அரசு ஒரு பொறுப்பை ஏற்று நடத்த தவறிவிட்டது என்றால் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப்போன்று ஒரு குறிப்பிட்ட விதியின் கீழ் அவற்றைக் கொண்டு வரலாம் அல்லது போலீஸ் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் நடைபெறுகின்ற பொழுது இப்படிப்பட்ட பிரச்னைகளை எழுப்பலாம். அப்படிப்பட்ட முறைகளைக் கையாள வேண்டுமே தவிர, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப்போன்று திடீரென்று ஒரு பிரச்னையைக் கூறி பதில் சொல்ல வேண்டுமென்பது சரியல்ல என்று கூறி, இதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் கூறியதுதான் நியாயம் என்று குறிப்பிடுவதற்காகத்தான் எழுந்தேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்லாண்டுக்காலமாக இந்த அவையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து இந்த அவையின் பெருமையையும், புகழையும், மரபையும் காப்பாற்ற வேண்டும். அந்த வகையிலே சட்டத்திற்கு உட்பட்ட பிரச்னைகளை எழுப்பினால் அது சரியாக இருக்கும். எனவே, இதுகுறித்து மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பேசலாம்; அதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுக்கத் தவறுமேயானால் அதற்கு அரசு பதில் சொல்லும். இதற்கு இப்பொழுது பதில் சொல்வதிற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திருவள்ளுர் போக்குவரத்துக் கழக பேருந்தை ஓட்டிச் சென்றவர் கருநாடக மாநிலக் கொள்ளையரால் சுடப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னு ரங்கம், அ. இரகுமான்கான், செ. சிவசாமி, தி. கா. நல்லப்பன், மு. அப்பாதுரை, சோ. அழகர்சாமி, பெ. சு. திருவேங்கடம், பாபு ஜனார்த்தனன், டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன், ஜே. ஹேமச்சந்திரன், சு. பாலன், கெ. சொக்கலிங்கம், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, ரா. கிருஷ்ணன், குமரி அனந்தன், என். எஸ். வி. சித்தன், எல். இளையபெருமாள் ஆகியோர் ''மதுரையிலிருந்து பங்களூர் சென்ற திருவள்ளுர் போக்குவரத்துக் கழகப் பேருந்து பெங்களூருக்கு 20 கல் தொலைவில் உள்ள அத்திப்பள்ளி என்ற இடத்தில் 19-3-1983 விடியற்க லையில் போய்க்கொண்டு இருக்கும்போது 43 வயதுள்ள மாலிக் பாட்சா என்ற அப்பேருந்து ஓட்டுநர் சுட்டுக் கொல்லப்பட்டு, அதில் பயணம் செய்த பிரயாணி களிடம் துணிகரக் கொள்ளை நடைபெற்றுள்ளதால் சக பஸ் தொழிலாளர்கள் மத்தியிலும், பிரயாணிகள் மற்றும் பொது மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவா திக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, கடந்த 19-ஆம் தேதி அதிகாலை 4.30 மணி அளவில், மதுரையிலிருந்து பெங்களூருக்குப் புறப்பட்டுச் சென்ற திருவள்ளுவர் பேருந்தில், விடியற்காலை, திடீரென்று ஒருவர் எழுந்து நின்று தன்னுடைய கையிலிருந்த துப்பாக்கியை நீட்டி, அங்கே இருக்கின்ற ஓட்டுநரைச் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள் ; சுட்டுக் கொன்றதோடு மட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற ஒரு பெண்மணியிடமிருந்து 9 பவுன் தங்கச் சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டு, அந்தப் பேருந்து மரத்திலே மோதியதற்குப் பிற்பாடு கீழே இறங்கிச் சென்று இருக்கின்றான். டிரைவர் அந்த இடத் திலேயே மரணம் அடைந்திருக்கிறார். நடத்துநர் வந்து அந்தத் திருடனை அணுகுகின்றபோது, நடத்துநரையும் சுட்டுவிடுவதாக



பயமுறுத்தியிருக்கிறார். இந்தச் செய்கையானது எதிர்பாராத விதமாக நடந்து இருப்பினும், பேருந்திலே செல்லக்கூடிய பயணிகள் உயர் தப்பியிருக்கிறார்கள். மேலும் இந்தச் சம்ப வத்தைப் பொறுத்தவரை, பொது ஜனங்கள் மத்தியிலே ஒரு பீதியும், ஒரு கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளதோடு, பேருந்து நடத்திச்செல்கின்ற டிரைவர்களுக்கு உயிருக்கு பாதுகாப்பற்ற ஒரு நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அந்த டிரைவர் மாலிக் பாட்சா இறந்தபின்பு, அந்த இடத்திற்கு சம்பந்தப்பட்ட எம். டி. அதாவது நிர்வாக இயக்குநரோ அல்லது அடுத்து இருக்கக்கூடிய அதிகாரியோ செல்லவில்லை, அதற்குப் பதிலாக பி. ஆர். ஓ. அங்கு சென்றிருக்கிறார். அந்த பிரேதத்தைக் கொண்டுவந்த பிறகு, அந்த ஊர்வலத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கூட கலந்துகொண்டிருக்கிறார். இப்படி நடந்த சம்பவத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சரவர்கள் அங்கே சென்று, அவருடைய குடும்பத்திற்கு ரூ. 30,000-க்கும் மேற்பட்ட தொகையை, அந்தக் குடும்பம் நடத்துவதற்காக ஒதுக்கீடு செய்ததோடு, அந்தக் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு வேலை கொடுப்ப தாகச் சொல்லியிருக்கிறார். இருந்தாலும், இந்தச் சம்பவம், பேருந்தில் பயணம் செய்கின்றவர்களுக்கும், பேருந்தை ஓட்டிச் செல்கின்றவர்களுக்கும் ஒரு பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது. இந்தச் சம்பவம் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க இன்றைக்கு இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே மாலிக் பாட்சா என்ற ஓட்டுநர் திருவள்ளுர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஓட்டுநர், 19-ஆம் தேதி காலையிலே சுடப் பட்டார் என்ற செய்தி 20-ஆம் தேதி காலையிலே தமிழகம் மிகப் பெரிய அதிர்ச்சியோடு கேள்விப்பட்டது. இந்த இறந்த ஓட்டு நருடைய குடும்பத்திற்கு எங்களுடைய கட்சியினுடைய அனுதா பத்தை இந்த அவையின் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று அந்தக் குடும்பத்திற்கு ஆதரவற்று நிற்கும் அந்தக் குடும்பத்திற்கு அரசு ஒருசில பண உதவிகளைக் கொடுத்திருக்கிறது. இதையும் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இதையொட்டி ஒருசில கருத்துக்களை, போக்குவரத்துத் துறையினுடைய ஊழியர்களோடு நீண்டகாலத் தொடர் புடையவன் என்ற முறையிலே, ஒருசில கருத்துக்களைத் தெரிவிப் பதற்கு நான் இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால் இப்போது பல இடங்களில்

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு தொல்லை. அவர்கள் நிரந்தரமாக தாக்கப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அவர்களுக்கு போதுமான பாதுகாப்பை இந்த அரசாங்கம் கொடுக்கவில்லை என்று நான் மிக வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், விபத்துக்கள் ஏற்பட்டு அதனாலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு எந்த முறையிலே பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசும், போக்குவரத்துத்துறையும் எடுத்துக்கொள்ளவேண்டுமோ அந்தமுறையிலே எடுத்துக்கொள்ளவில்லை என்பதை நான் பல உதாரணங்களோடு சுட்டிக்காட்ட முடியும். ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். குற்றவாளிகளை சுட்டிக்காட்டினாலும் கூட காவல்துறையினர் போதுமான அளவிற்கு கவனித்து நடவடிக்கை எடுப்பதில்லை. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதும் இல்லை. பணம் வாங்கிக்கொண்டு அப்பாவிகள் மேல் கேசைப் போட்டுக்கொண்டு, தாக்கக்கூடியவர்களை, திருடக்கூடியவர்களை விட்டுவிடக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு காவல்துறையிலே இருக்கிறது. 1978-லே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே வந்ததற்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு ஓட்டுநர் கொளுத்தப்பட்டு இறந்துவிட்டார். அவர்கள் எரிக்கப்பட்டுவிட்டார் என்று சொல்வதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நேரத்திலே அந்தத் தொழிலாளிக்கு இந்த அரசாங்கம் ஒரு அனுதாபம் கூட தெரிவிக்கவில்லை என்று நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்த பிரச்னையை, எப்படி ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக, இதற்கு முன்பாக நடைபெற்ற பல்வேறு சம்பவங்களைப் பற்றி எல்லாம் எடுத்து, மானியக் கோரிக்கையிலே பேசுவதுபோல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவள்ளுவர் போக்குவரத்தைச் சேர்ந்த ஓட்டுநர் ஒருவர் பெங்களூருக்குப் போகிற வண்டியிலே சுட்டுக் கொல்லப்பட்டார். அதனால் அவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். எனவே இந்த பிரச்னையை ஒட்டி நீங்கள் பேசினால் நல்லது. உங்கள் மாவட்டப் பிரச்னைகளைக் கொண்டு வந்து இதில் பேசவேண்டாம்.



பேரவைத் தலைவர் அவர்களே
**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** இப்படிப்பட்ட நேரங்களிலே
நான் என்ன சொல்கிறேன் என்றால், எடுக்கவில்லை என்பதைச்
காவல்துறையினர் தகுந்த நடவடிக்கை சொல்கிறேன்.
சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நான் இதைச்

இப்போது எடுத்துக்கொள்ளப்
**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையை ஏன்
பட்டிருப்பது ஒத்திவைப்புத்தீர்மானம். விளக்கங்களைக்
ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்பதற்கான துறையினுடைய
கொடுத்தால் நல்லது. நீங்கள் போக்குவரத்துத் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.
மானியத்தின் மீது பேசுவதுபோல் பேசுங்கள்
அதனால்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டிப்
என்று சொல்கிறேன். (குறுக்கீடு).

தலைவர் அவர்களே, இதற்கு
**திரு. சோ. அழகர்சாமி :** சொல்லி, அதற்கு
முன்னால் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறார். வேறு
சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று
ஒன்றும் இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு
போக்குவரத்துத் தொழிலாளி தாக்கப்பட்டால், யாரும் அதைத்
தட்டிக்கேட்கும் நிலை இல்லை என்ற துரதிருஷ்டவசமான
சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
நீண்டநெடுங்காலமாக அந்த போக்குவரத்துத் துறை தொழிலாளர்
களோடு சம்பந்தப்பட்டவன் என்ற முறையில் இந்த நேரத்தில்
இந்த அவையில் அவற்றை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்று ஒரு
பேருந்தினை ஓட்டிச்சென்ற ஒருவர் சுடப்பட்டார் என்று
சொன்னால், அப்படி சுடுவதற்கான தைரியம் எப்படி வந்தது
என்று சொன்னால், போக்குவரத்துத் தொழிலாளி தாக்கப்
பட்டால் அரசு அவனுக்குப் போதுமான அளவிற்குப் பாதுகாப்புக்
கொடுக்காது, சரியான முறையில் நடவடிக்கை எடுக்காது என்ற
எண்ணம் குண்டர்கள் மத்தியிலும், அதேபோல் டெக்காயிட்ஸ்
இடையிலும் ஏற்பட்டதன் விளைவுதான் இப்படிப்பட்ட நிகழ்ச்சி
ஏற்பட்டதற்கான காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

நான் என்ன சொல்லவிரும்புகிறேன் என்றால், இன்றைக்கு
பெங்களூரில் நடந்த ஒரு விஷயம் தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சி அல்ல.
போதுமான அளவிற்கு போக்குவரத்துத் தொழிலாளிக்கு
என்னென்ன முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கொடுக்க
வேண்டுமோ அந்த நடவடிக்கைகளைச் செய்து கொடுப்பதற்கு
பதிலாக, ஒரு தொழிலாளி தாக்கப்பட்டு இறந்தார் என்று
சொல்லி, அந்த இறந்த தொழிலாளிக்கு அனுதாபம் தெரிவிக்கும்

மற்றொரு தொழிலாளியைத் தாக்கும் நிலைமையும், அவர்களுக்கு போனஸ் கொடுப்பதில்லை என்ற நிலையும், மற்ற நடவடிக்கை களை எடுப்பது என்கிற நிலைமையும், அந்த மாதிரி நேரங்களில் அரசாங்கம் அப்படி தவறு செய்தவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததன் காரணத்தால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு, இன்று போக்குவரத்துத் தொழிலாளிகள் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்குப் பரவலாகப்பேசப்படுவது என்னவென்று சொன்னால், நாம் இனி தைரியமாக எப்படி இரவு நேரங்களில் பேருந்துகளை ஓட்டிச் செல்லமுடியும்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்ற உணர்வு எங்களுக்கும் இருக்கிறது. பெங்களூர் அருகே நடைபெற்ற அந்தச் சம்பவம் ஒரு விரும்பத்தகாத சம்பவம். அதற்கு நாமும் வருத்தம் தெரிவித்து இருக்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஓட்டுனர்கள் எல்லாம் இரவு நேரங்களில் பேருந்துகளை ஓட்டுவதற்கு பயப்படுகிறார்கள் என்ற முறையில் பேசுவது அந்தத் தொழிலாளர் மத்தியில் ஒரு தைரியமற்ற நிலையை உருவாக்கக்கூடும். தற்போது அப்படிப்பட்ட நிலை இல்லை. இதிலே சுமுகமான நிலை ஏற்படவேண்டும் என்ற முறையிலும், எதிர்காலத்தில் பாதுகாப்பு ஏற்படுத்தவும் நாம் நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் போனஸ்பற்றியெல்லாம் தற்போது பேசுவது சரியல்ல. ஏப்ரல் 5-ம் தேதி மானியக்கோரிக்கை வர இருக்கிறது. அன்றைக்கு இந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறலாம். இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து மட்டும் பேசினால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் நீண்ட காலமாகப் போக்குவரத்துத் தொழிலாளர்களோடு சம்பந் தப்பட்டவர் என்பதற்காக அவர்களுடைய எல்லா உணர்வு களையும் இப்போது எடுத்துச் சொல்லிவிடமுடியாது. நான் கூட போக்குவரத்துத் தொழிலாளர்களோடு சம்பந்தப்பட்டவன் தான். ஆகவே, எல்லோருக்கும் அந்த உணர்வு இருக்கிறது. தற்போது அவை முன் உள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து மட்டும் கருத்துக்களைச்சொல்லி, முடிக்கவேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : இப்போது பாதுகாப்பு சம்பந்த மாக சில யோசனைகளை நான் போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டிரைவர்கள் பாதுகாப்பாக வண்டிகளை ஓட்டிச்செல்லும் வகையில் கேபின்கள் அமைக்கவேண்டும். மற்ற பணிகளோடு தொடர்பு ஏற்படாத



வகையில், அவர்கள் ஓட்டுனர்களுக்குத் தொல்லை தராத வகையில், அவர்களைத் தாக்குதல் நடத்த முடியாத வகையில் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் அந்த காபின் அமைக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது) போக்குவரத்துத் தொழி லாளர்கள்மீது தாக்குதல் நடத்துபவர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது காலாகாலத்தில் நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளை தண்டிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஓட்டுனரையோ அல்லது நடத்துனரையோ யார் தாக்கினாலும் அவர்கள் மீது என்னென்ன வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நெடுந்தூரம் பயணம் செல்கின்ற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்திலே நடைபெற்ற துயரச் சம்பவம் குறித்து விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்திலே இங்கே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

டிரைவர் மாலிக் பாட்சா அதிகாலை நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார். அப்படி சுட்டுக்கொல்ல பயன் படுத்தப்பட்ட துப்பாக்கி அந்தப் போலீஸ் கான்ஸ்டேபிளுக்கு மேல் அதிகாரியாக உள்ள இன்ஸ்பெக்டரைச் சார்ந்தது. அவர் ஏற்கனவே திருட்டு வழக்கிலே சம்பந்தப்பட்டவர் என்று தெரிகிறது. திருட்டு வழக்கிலே சம்பந்தப்பட்ட ஒருவரை

(முற்பகல் 10-30)

போலீஸ் இலாகாவிலே எப்படி தொடர்ந்து வைத்திருந்தார்கள் என்பது தெரியவில்லை. அவர் அந்த போலீஸ் இலாகாவிலே இருந்த மேலதிகாரி ஒருவருடைய துப்பாக்கியை எடுத்துச்சென்று விட்டார் என்று தெரிந்த பிறகு எல்லைப்புறத்திலே இருக்கிற மற்ற மாநிலங்களுக்கு எப்படி எச்சரிக்கை கொடுக்காமல் இருந் தார்கள் என்பதும் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத் திற்கும் இருக்கிற உறவை காவல்துறையினர் எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதும் இதிலே முக்கியமான பிரச்சனைகள். ஏனென்றால் துப்பாக்கியை எடுத்துச்சென்ற இந்த நபர் மதுரையிலே எப்படி எல்லாம் திரிந்தார் என்ற செய்திகளும் சில பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. இப்படிச் சுற்றித் திரிந்தவர் எங்கெல்லாம் இந்த துப்பாக்கியை பயன்படுத்தியிருப்பார் என்பது தெரியவில்லை. ஆனால் இங்கே ஒரு உயிர் போய் இருக்கிறது.

அது மட்டுமல்ல, அவரோடு இன்னொருவரும் இருந்தார் என்ற செய்தி ஒருசில பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இப்படி நெடுந்தூரம் பயணம் செய்கிற போக்குவரத்துகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பது நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது. பேருந்தை தடுத்து நிறுத்தி ஆட்களை கொலை செய்வதும், ஆபரணங்களை அபகரித்துச் செல்வதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று சொல்லுகின்ற அதேநேரத்திலே இனிமேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படாதவாறு தடுக்க பேருந்துகளிலே நிரந்தரமாக போலீஸ் பாதுகாப்பு போட வேண்டும் என்பதுபற்றியும் இங்கே விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கிறது. இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறபோது, இறந்துபோன அன்னாரின் குடும்பத்திற்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்து, அந்தக் குடும்பத்திற்கு அரசாங்கம் செய்திருக்கிற உதவியைப் பாராட்டி, இனிமேல் இப்படிப்பட்ட அனுதாபமும் பாராட்டும் தெரிவிக்க இடமில்லாமல் அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இன்றைக்கு இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 19–3–1983 சனிக்கிழமை அன்று விடியற்காலையில் 4-30 மணி அளவில் மதுரையிலிருந்து பெங்களூருக்கு சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் விரைவு பேருந்து ஓட்டுநர் மாலிக்பாட்சா என்பவர் ஷேக்சர்தார் என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்திருக்கிறது. ஷேக்சர்தார் என்பவர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த போலீஸ்காரர். அவர் திடீரென்று 4-30 மணி அளவில் பஸ்ஸை நிறுத்தச் சொன்னபோது பஸ் மேட்டுப்பாங்கான இடத்தில் சென்றுகொண்டிருந்ததால் சமமான இடம் வந்தவுடன் நிறுத்துகிறேன் என்று டிரைவர் சொல்லியிருக்கிறார். உடனே மாலிக்பாட்சா என்ற அந்த போலீஸ்காரர் அவரை துப்பாக்கியால் சுட்டு, அந்த டிரைவர் அதே இடத்தில் மாண்டு இருக்கிறார் என்ற செய்தியை இங்கே மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவரை இழந்துவிட்ட அந்த குடும்பத்தாருக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று சென்னை, திருச்சி போன்ற இடங்களுக்கு வருகின்ற லாரிகளை மடக்கி கொள்ளையடிப்பதையும் வடாற்காடு மாவட்டத்திலே ஒரு காரை மடக்கி கொள்ளையடித்ததையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, தமிழக



அரசிலிருந்து போலீஸ் ரோந்து போடப்படும் என்ற செய்திகள் வந்தன. அதன் பிறகுதான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது என்றால் அந்தமாதிரி ரோந்து அங்கே வரவில்லையா? ரோந்து வரவில்லை என்றால் இனிமேலாவது எல்லையோரங்களிலாவது ரோந்து வர அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிரைவரை சுட்டுக்கொன்ற பின்னால் ஒரு பெண்ணிடமிருந்து பத்துப் பவுன் தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாக செய்தி வந்திருக்கிறது. அந்த நகை எப்படி போனது? சுட்டவர் தன்னுடைய மேலதிகாரியின் துப்பாக்கியைப் பயன்படுத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ் மேலதிகாரியின் கையில் இருக்கிற துப்பாக்கி அவருக்கு எப்படி கிடைத்தது? என்பது போன்ற விவரங்களையெல்லாம் அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

போக்குவரத்து டிரைவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவரை இழந்து வாடுகின்ற கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிற அவருடைய மனைவிக்கு அது எல்லாவற்றிலும் பேரிழப்பாகும். அவருடைய துயரத்தை ஆற்றுதல் அரிது. அவருடைய குடும்பத்திற்கு தமிழக அரசு 30,000 ரூபாய் உதவி செய்திருப்பதாக செய்திகள் வந்ததைப் பார்த்தேன். அவருடைய பிள்ளைகளுக்கு போக்குவரத்துத் துறையிலே வேலை கொடுப்பதற்கும் அமைச்சரவர்கள் உறுதியளித்திருப்பதாக கேள்விபட்டேன். கடமை உணர்வுடைய கணவனை இழந்த ஒரு பெண்ணுக்கு எவ்வளவு உதவி செய்தாலும் அது பெரிய உதவியாக இருக்க முடியாது. எனவே, தமிழக அரசு குறிப்பாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கூடுதல் நிதியை அந்தக் குடும்பத்திற்கு ஒதுக்கித் தரவேண்டும். இதுபோன்ற பல பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் மதுரையிலிருந்து பெங்களூர் செல்கிற அந்த வண்டியில் 19ஆம் தேதி அதிகாலையில் நடைபெற்றதுஓசூருக்குப் பக்கத்திலே என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த வண்டியின் டிரைவர் திரு. மாலிக் பாஷா அவர்களைக் கொலை செய்தவர் சர்தார் என்கிற ஆந்திர மாநிலத்தைச்

சேர்ந்த கான்ஸ்டபிள் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் கூட அதைப்பற்றிச் சொன்னார். மதுரை வீதிகளிலேயெல்லாம் அவர் திரிந்துக் கொண்டிருந்தார்-கைத்துப்பாக்கியோடு என்று கூட சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே எந்தச் சட்டத்திலே எடுத்துக் கொண்டாலும், சந்தேகக் கேஸ்கள் என்று பலரை பிடித்து உள்ளே போடுகிறார்கள். அப்படி இருக்கும்போது அறிமுகம் இல்லாத ஒரு நபர் மதுரை வீதிகளிலே திரிந்துக் கொண்டிருந்தார் என்கிற நிலை ஏற்பட்டிருக்கும்போது, அங்கேயுள்ள இன்டெலிஜென்ஸ் செக்ஷன் என்ன செய்து கொண்டிருந்தது? அது முறையாக, சரியாக இயங்கியிருக்குமேயானால் அந்தக் கொலையாளியை கைது செய்திருக்கலாம். இலாகாவே ஒழுங்காக இயங்கவில்லை என்பதற்கு அத்தாட்சிதான் இது ஒன்று, மற்றொன்று எனக்குக் கிடைத்த தகவலின்படி சுட்டுக் கொல்லப்பட்ட மாலிக் பாஷாவின் சடலம், அவர் அதிகாலை 4.45-க்கு சுட்டுக் கொல்லப்பட்ட நேரத்திலிருந்து, பிற்பகல் இரண்டு மணி வரையிலே அதே வண்டியிலே, அந்த இடத்திலேயே இருந்திருக்கிறது. அது மட்டும் அல்ல. அந்தச் சடலம் அகற்றப்பட்டதற்குப்பிறகு, ஒரு நாள் கழித்துத்தான் போஸ்ட் மார்ட்டத்திற்குப் பிறகு அவருடைய குடும்பத்தாரிடம் கொடுக்கப்பெற்றிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது. அரசாங்க இலாகாவினுடைய இந்தத் துறையிலும் கூட காரியங்கள் ஒழுங்காக இயங்கவில்லை என்பது தான் என்னுடைய தாழ்மையான கருத்து.

அந்த மாலிக் பாஷாவின் இரங்கல் நிகழ்ச்சியில் நமது அமைச்சர் கூட கலந்துக் கொண்டு பேசினார் என்று அறிகிறேன். அந்தக் குடும்பத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் இழப்பீடு தருவதாகச் சொல்லிவிட்டு, அந்த மாலிக் பாஷாவினுடைய பிள்ளைகளுக்கு எல்லாம் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று சொல்லிய போது—நான் கூட அடுத்த வார்த்தையிலே அது குறித்து அரசு பொறுப்பேற்கும் என்று சொல்லுவார் என எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. அனைத்து தொழிற்சங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும் என்று அந்த பொறுப்பை தூக்கி அவர்கள் மீது போட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அந்தக் குடும்பத்தை பராமரிக்கிற பொறுப்பை அரசே ஏற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு உடனடியாக மாலிக் பாஷாவினுடைய பிள்ளை, காதர்பாஷா என்பவர்-17 வயது இளைஞன் இருக்கிறான். அவருக்கு உடனடியாக ஜாப் ஆப்பர்சூனிட்டி-வேலை வாய்ப்பைக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் நல்ல அமைச்சர்,



அதைச் செய்வார், அது மட்டும் அல்ல. அவர்களுக்கு 30,000 ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். குடும்பத்தைக் காப்பாற்றியவன் நடுவிலே விட்டுவிட்டுப் போய்விட்டான். வேறு வருமானமும் கிடையாது. இந்தப் பணம் போதுமா? போதாது. ஆகவே, அந்தத் தொகையை ரூ. 50,000/-அளவுக்காவது உயர்த்தித் தர ஏற்பாடு செய்ய வேண்டும். அரசியல் கட்சிகளே தம்முடைய தொண்டர்களுக்கு ரூ. 70,000 என்றெல்லாம் கொடுக்கிறது. அரசாங்கம் ஒரு இலட்சம் கூட கொடுக்கலாம். ஆகவே, அந்த வகையில் அதனைச் சற்று கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று அறிவிக்க வேண்டும். இன்னும் இது குறித்து நிறைய பிரச்சினைகள் பேச வேண்டும். ஆதலால், இந்த அவையின் இன்றைய பிற அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் விரும்பத்தகாத முறையிலே நடந்து முடிந்து விட்ட அந்த கோர சம்பவம் பற்றி, ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே கொடுத்துப் பல உறுப்பினர்கள் இங்கே நம்முடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நடந்து முடிந்த அந்த சம்பவத்தைப்பற்றி அன்றாடம் தகவல்களை நாம் இன்னும் சேகரித்துக் கொண்டிருக்கிறோம் என்கிற காரணத்தால், இதுவரையில் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்களை வைத்து, நான் சில பதில் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பி. என், எல். 9256 என்ற பேருந்து, 18-3-1983 அன்று மாலை 7 மணிக்கு புறப்பட்டு தடம் எண். 580ல் மதுரையிலிருந்து பெங்களூருக்குச் சென்றது. அதிலே மாற்று ஓட்டுநராக இருந்த திரு. மாலிக் பாஷா என்று சொல்லக்கூடிய ஓட்டுநர், சேலத்திலே பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

(முற்பகல் 10-40)

19-3-1983 அன்று காலை 4.30 மணியளவில் கர்நாடக மாநிலத்திலே உள்ள அத்திப்பள்ளி என்ற கிராமத்திலே அது கர்நாடகத்தில் 29 கிலோ மீட்டர் உள்ளே இருக்கின்றது. அங்கே இந்தப் பேருந்து சென்று கொண்டிருக்கின்றபோது ஓட்டுநருக்குப் பின்னாலே அமர்ந்து கொண்டிருந்த ஒரு பயணி துப்பாக்கியை எடுத்து எதிர்பாராத வகையில் ஓட்டுநரைச் சுட்டார். அந்த இடத்திலேயே ஓட்டுநர் இறந்து விட்டார். அதற்குப் பின்பு அந்தக் கொலையாளி துப்பாக்கியைக் காட்டி அங்கே இருக்கின்ற பயணிகளை மிரட்டி ஒரு பெண் பயணியிடம் இருந்து ரூபாய்

**10 ஆயிரம்** மதிப்புள்ள தங்க செயினைப் பிடுங்கிக் கொண்டு இறங்கி போய்விட்டார் என்று சொல்லப்படுகின்றது. எனவே அவர் இந்தப் பேருந்திலே பயணம் செய்கின்றபோது கொள்ளை அடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பயணம் செய்திருக் கிறார் என்பதைத் தெளிவாக நம்மால் உணர முடிகின்றது. ஓட்டுநர் வண்டியிலே இறந்து விட்ட காரணத்தால் அந்தப் பேருந்து பின்னோக்கி நகர்ந்து அந்த இடம் ஒரு மேட்டுப் பகுதியாக இருந்த காரணத்தால் பின்னோக்கி நகர்ந்து பின் னாலே இருந்த மரத்திலே மோதி நின்றது. பேருந்திலே சிறிய அடி பட்டதே தவிர அதிலே இருந்த பயணிகளுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. அதிலே நடத்துநராகப் பயணம் செய்தவர் திரு. சுப்பிரமணியம் என்பவர். அந்தப் பேருந்திலே இருந்த இருக்கைகள் 39. அதிலே பயணம் செய்தவர்கள் 34பேர். இந்த விபத்து நடந்த அன்று 19—3—1983 அன்று பிரேத பரிசோதனைக்குப் பிறகு 7.45 மணிக்கு அத்திப்பள்ளியிலே இருந்து அந்தப் பிரேதம் எடுத்துச் செல்லப்பட்டு 20-3-1983 அன்று அதிகாலை 5-45 மணிக்கு மதுரைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. அந்த ஓட்டுநருடைய உறவினர்களும், நண் பர்களும் சென்று பார்ப்பதற்காக திருவள்ளுவர் போக்குவரத் துக் கழகம் ஒரு தனிப் பேருந்தை அமர்த்தி அவர்களுக்கு வசதி செய்து கொடுத்திருந்தது. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப் பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசுகின்றபோது இரண்டு மணி வரை அரசாங்கம் என்ன செய்தது என்றெல்லாம் சொல்லி அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். இதிலே இருக்கின்ற ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த அரசின் எந்தப் போக்குவரத்துக் கழ கத்திலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது இந்த அரசு அதிகமான முயற்சியினை எடுத்துக்கொள்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்த நிகழ்ச்சி நடந்த இடம் நம்முடைய மாநிலத்திற்கு உள்ளே இல்லை. அது கர்நாடக மாநிலத்திலே இருக்கின்றது. அங்கே இருக்கின்ற சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் வந்து பார்த்த பிறகுதான் அந்தப் பிரேதத்தை எடுக்க முடியும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன். அந்த இடம் சென்னையிலே இருந்து எவ்வளவு தூரத்திலே தள்ளி இருக்கின்றது என்பதையும் உங்க ளால் புரிந்துகொள்ள முடியும் என்று நினைக்கிறேன். விபத்து நடந்த அந்தச் செய்தி நமக்குச் சொல்லப்பட்டு இங்கே இருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்று பார்த்து அதன்மீது நட வடிக்கை எடுப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை நியாய உணர்வோடு நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே கூட முயற்சிகள் அதிகமாக எடுக்கவேண்டும் என்பதற் காக நாங்கள் அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற அதிகாரிகளிடத்



திலே தொடர்பு கொண்டு தேவையான [illegible] செய்வ தற்கு ஏற்பாடு செய்தோம். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது நிர்வாக இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் யாருமே அங்கே போகவில்லை என்பது போல் சொன்னார்கள். சுற்றி இருந்த அதிகாரிகள் சென்றார்கள், மதுரையிலே இருந்து அதிகாரிகள் சென்றார்கள். எனவே தேவையான ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணியாற்றும் அத்தனை அதிகாரி களும் தங்களுடைய அத்தனை அலுவல்களையும் விட்டுவிட்டு [illegible] தங்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்கின்ற அளவுக்கு [illegible] எடுத்தோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட [illegible] அவர்கள் 10 ஆயிரம் ரூபாயை உடனே [illegible] நிதியிலிருந்து அந்தக் குடும்பத்துக்கு [illegible] என்று சொல்லி [illegible] அனுப்பவும் [illegible] வேண்டும் என்று [illegible]. அதற்குப் பிறகு அந்தக் குடும்பத்திற்கு [illegible] 10,500 ரூபாயும் திருவள் ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயும் [illegible] 30,000 ரூபாய் கொடுக்க நடவடிக்கை எடுத்து [illegible] சென்று கலந்து [illegible] இருக்கிறோம். இந்த [illegible] 10,500 ரூபாயினைச் சேர்த்து விட அந்தக் குடும்பத்திற்கு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்கிற சூழ் [illegible] என்று நினைத்து [illegible] அந்தக் குடும்பத்திலே உள்ளவர்கள் இல்லை என்ற நிலையிலே அந்தக் குடும்பத்திலே அந்தச் செக்கை ஒப் [illegible] மேலாளரிடத்திலே [illegible] இருக்கிறேன். [illegible] அளவுக்கு [illegible] [illegible] வைத்திருக்கிறேன். [illegible] நடவடிக்கை எடுக்கப்படும் என் [illegible] பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருடைய மகன் [illegible] ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று இங்கே சொன்னார்கள்; அவருக்கு மொத்தம் 5 பெண்கள். 2 ஆண்கள். அதிலே ஒரு ஆணுக்கு மட்டும்தான் 18 வயது முடிந்து இருக்கிறது. அவருடைய பெயர் காதர்பாட்சா. அவ ருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத் தார்கள். எனவே அரசாங்கம் எவ்வளவு வேகமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே உதாரணம். நேற்றைய [illegible] போடப்பட்டு அந்த உத்தரவு அவரிடம் கையிலே [illegible] உத்தரவு [illegible] விட்டது, அவர் இன்றைக்கு வேண்டுமானா ஒப்படைக்கப்பட்டுவிட்டது, [illegible] வேலையில் சேரலாம் என்ற ஏற்பாட்டையும் நாங்கள் லும் [illegible] வேலையில் சேரலாம். ஒரு மாதம் கழித்து கூட வரலாம். செய்து இருக்கிறோம். [illegible] வேண்டுமானாலும் வரலாம். அவரது குடும் நாளையோ தினம் [illegible] வேண்டுமானாலும் வேலைக்கு வரலாம் நிலைக்கு ஏற்ப எப்போது வேண்டுமானாலும் வேலைக்கு வரலாம்

என்ற உத்திரவை நாங்கள் போட்டுக் கொடுத்து இருக்கிறோம்.
காலத்தைக்கூட நாம் நிர்ணயிக்கக் கூடாது. அப்படியே நேரத்தை
சட்டப்படி நிர்ணயிக்க வேண்டும் என்று இருந்தாலும் காலம்
தாண்டி வந்தாலும் அவரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற
உத்திரவை நாங்கள் போட்டிருக்கிறோம். நான் சொல்கிறபோது
இந்த அரசு வேகமாக நடவடிக்கை எடுக்கிறதா இல்லையா
என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். இப்போது உங்களுக்கு
மன அமைதி இருக்கும். முகத்தைப் பார்த்தாலே தெரி
கிறது என்று நான் நம்புகிறேன். அந்த கொலையாளியை அந்த
ஊரிலிருந்த பொது மக்கள் சில மணி நேரங்களில் பிடித்து
காவல்துறையினரிடம் ஒப்படைத்தார்கள். சேக் சர்தார் சாயபு
என்பது அவருடைய பெயர். சித்தூர் மாவட்டத்தில் இருக்கின்ற
சந்தனகிரி காவல் நிலையத்தில் எழுத்தராக பணியாற்றினார்
என்று சொல்லப்படுகிறது. இந்த செய்தியை அறிந்தவுடன்
தமிழ்நாட்டினுடைய தலைமை காவல் துறை அதிகாரி தொலை
பேசி மூலம் தொடர்பு கொண்டு கர்நாடகா தலைமை காவல்
துறை அதிகாரியை நேரில் போய் பார்க்கும்படி கேட்டுக் கொண்ட
தற்கு இணங்க அவர் நேரில் சென்று பார்த்து இதற்கான ஏற்
பாட்டை செய்திருக்கிறார்கள். இங்கே இன்னொரு கருத்துக்
கூட சொன்னார்கள். இந்த போக்குவரத்துக் கழகத்திலே
இருக்கின்ற அந்த பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கும், நடத்
துனர்களுக்கும் பாதுகாப்பு ஏற்படும் வகையில் செய்ய வேண்டும்
என்று சொன்னார்கள். சொல்லுகின்ற அதே நேரத்தில்
நீங்கள் இப்படிப்பட்ட விபத்து நடக்கின்ற நேரத்தில் தீவிர
மாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்
ஹேமச்சந்திரன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த அர
சாங்கம் தீவிரமான நடவடிக்கையைத்தான் எடுத்துக்கொண்டி
ருக்கிறது. குறிப்பாக இந்த போக்குவரத்துக் கழகத்தில் இருக்
கின்ற 66 ஆயிரம் தொழிலாளர்களுக்கு எந்த சங்கடம் ஏற்பட்
டாலும் அதை உடனடியாக கவனிப்பதற்கான நடவடிக்கைகளை
நாங்கள் துரிதமாக போக்குவரத்துக் கழகத்திலேயும், அரசாங்கத்
திலேயும் எடுத்துக்கெண்டிருக்கிறோம் என்று இங்கே உறுதியிட்டு
சொல்ல முடியும். ஆனால் சில காரியங்களை குறிப்பிட்டு இங்கே
சொன்னார்கள். அதை ஏற்கனவே என்னிடத்தில் சொல்லியிருந்
தால் அந்த குறிப்புகளை எடுத்து வந்து என்ன என்ன நாங்கள்
செய்து இருக்கிறோம் என்பதை என்னால் தெளிவாக்க முடிந்திருக்
கும். நான் இதைப்பற்றி அத்தனை கருத்துக்களையும் சேகரித்து
வந்திருக்கிறேன். நடந்து முடிந்த பிரச்சனைகளைப்பற்றி நீங்கள்
நிச்சயமாக டிமாண்டிலே பேசலாம். அப்போது அதற்கு முழு விவ
ரமும் தர கடமைப்பட்டிருக்கிறேன். எனவே எந்த வகையிலே
யும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத வகையில் அல்லது
அவர்களை மறந்து இப்போது போக்குவரத்து கழகங்கள் இயங்
கினால் போதும் என்ற உணர்வோடு இந்த அரசாங்கம்



ஒரு போதும் செயல்பட்டது இல்லை என்பதை நான் இங்கே
நிச்சயமாக உறுதியோடு சொல்லமுடியும். எனவே எங்களுக்கு
இருக்கின்ற முதல் நோக்கம் லாபத்தில் ஓட்ட வேண்டும் என்பது
அல்ல. அதிலே இருக்கின்ற நோக்கமே அதிலே இருக்கின்ற
தொழிலாளர்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். நல்ல வாழ்க்
கையை அவர்கள் எட்டிப்பிடிக்கவேண்டும். அதே நேரத்திலே
பொதுமக்களுக்கு வசதியான குறைந்த கட்டணத்திலே பேருந்து
கள் இயக்கப்படவேண்டும் என்ற உணர்வோடு லாபத்தையோ
மற்றதையோ நாங்கள் மனதிலே கொண்டு தொழிலாளர்களுக்கு
ஆபத்து ஏற்படுகின்ற வகையிலே எந்த வேலைகளிலும் சூழ்
நிலையை நாங்கள் உருவாக்கவில்லை. இதற்கு முன்னால் பேசும்
போதும் சொல்லியிருக்கிறேன், பல பொதுக்கூட்டங்களிலும் நான்
பேசிவிட்டு வந்திருக்கிறேன். எங்கேயாவது தொழிலாளர்களை
தாக்குகின்ற நிலைமை ஏற்படுமானால் அந்தவழியில் வருகின்ற
பேருந்துகளை நாங்கள் நிறுத்த வேண்டிய நிலைமைக்கு கட்டாய
மாக உங்களால் தள்ளப்படுகிறோம். எனவே அந்த நிலைமைகளை
நீங்கள் தயவுசெய்து உருவாக்க வேண்டாம் என்று நான் பத்திரி
கையிலே அறிக்கையாக கொடுத்திருக்கிறேன். கூட்டத்திலும்
பேசியிருக்கிறேன். எனவே அந்த வகையில் அவருடைய வாழ்க்
கையில் நாங்கள் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம்
என்பதை நீங்கள் நம்புவீர்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு
உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் கூட சொன்னார்கள்.
அதற்கான ஏற்பாட்டை நாங்கள் நேற்றைய தினம் ஒரு
பேருந்தை இங்கே வரவழைத்து நீங்கள் பார்த்து இருப்பீர்கள்
என்று நம்புகிறேன் - இங்கே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக
பேருந்தை வரவழைத்து அதிகாரிகளையும் அழைத்துஅதைபார்த்து
முதலில் வெளி மாநிலங்களுக்கு செல்லக் கூடிய பேருந்துகளில்
அந்த ஓட்டுநர், நடத்துநர் இருப்பதற்கு தனியான அறை
அமைத்து அதிலே இருக்கின்ற பயணிகள் இவர்களிடத்தில் பேச
முடியும், இவர்களும் அவர்களிடம் பேச முடியும். ஆனால் எந்த
பொருள் கொண்டும் தாக்கிவிட முடியாத நிலைமையில் அங்கே
ஒரு அமைப்பை அமைத்து ஆக வேண்டும். தனி அறை உரு
வாக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை விரைவாக செய்.
ஒரு பேருந்தை ஓட்டுங்கள் அதற்குப் பின்னால் வெளி
மாநிலங்களுக்குச் செல்கின்ற அத்தனை பேருந்துகளுக்கும் அந்த
அமைப்பை நாம் ஏற்படுத்தி விடலாம். அதற்குப் பின்னால்
இங்கே இருக்கின்ற நம்முடைய மாநிலத்தில் ஓடுகின்ற பேருந்து
களைப்பற்றி கவனிப்போம் என்று நான் சொல்லியிருக்கிறேன்
இந்த நடவடிக்கைகளை நாங்கள் வேகமாக எடுக்கிறோம் என்று
சொன்னால் இது ஏற்கனவே இப்படி ஒரு சம்பவம் நடக்கும்
என்று யாரும் எதிர்பார்த்து இருக்க முடியாது. அரசாங்கம் எதிர்
பார்த்து இருக்க முடியும் என்று நீங்கள் நிச்சயமாக நம்புவீர்கள்
என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. நாங்கள் இன்னும்

தீவிரமாக இருக்க வேண்டுமென்பதற்காக இவ்வளவு வேகமாக கருத்துக்களை சொல்லியிருக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. எனவே நாம் ஒரு துப்பாக்கியை அந்த ஓட்டுநருக்குக் கொடுத்து இருந்தாலும் கூட இந்த சூழ்நிலையில் அந்த ஓட்டுநர் அந்தத் துப்பாக்கியை பயன்படுத்தி இருக்க முடியாது என்பதை நீங்கள் நிச்சயமாக நம்புவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 10-50)

எனவே இதிலே அரசாங்கம் ஏதோ கவனக் குறைவாக இருக்கிறது என்ற உணர்வை நீங்கள் வெளியே சொல்வீர்களானால் ஏதோ எங்களைத் தீவிரப்படுத்தவேண்டுமென்பதற்காக சொல்லக்கூடிய கருத்துக்கள் அந்தத் தொழிலாளர்களிடத்திலே மனக் குறையை ஏற்படுத்தி ஒரு சங்கடமான சூழ்நிலை உருவாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் அந்தத் தொழிலாளர்களை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள். நான் மதுரைக்குச் சென்றபோதுகூட அந்தத் தொழிலாளர்கள் அலை வரும் கண்ணீர் வடித்து நாங்கள் எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்த இயக்கத்திலே இருந்தாலும் எந்தத் தலைவரை ஏற்றுக் கொண்டிருந்தாலும் நாங்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைப்போல இருந்தோம். எவ்வளவோ பிரச்சினையில்லாமல் வைத்திருந்தீர்கள், இப்படி ஒரு சங்கடம் ஏற்பட்டு விட்டதே என்று கதறினார்கள். அவர்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைப்போல இயங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் உள் உணர்வுகள் வேறுவிதமாக இருக்கலாம். அவர்கள் அரசியல் கருத்துக்கள் வேறுவிதமாக இருக்கலாம். ஆனால் இந்த கழகங்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களிடையே எந்த விதமான பிளவு மனப்பான்மையும் இல்லாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து ஒற்றுமையாக மேலும் மேலும் ஒற்றுமையாகச் சேர்ந்து அந்தப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களை காப்பதற்கு எல்லோரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அது அவர்களை ஓரளவுக்குப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக இருக்க முடியும், இதற்கு மேலும் மேலும் என்ன என்ன எல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரோந்து போவதற்கு ஏற்பாடுகள் செய்யப்போவதாகச் சொன்னீர்களே போயிற்றா என்று கேட்டார்கள். ரோந்து போவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்கிறோம் என்று சொன்னோம். ஆனால் இது வெளி மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் பார்க்க வேண்டும். நம்முடைய காவல்துறையின் அதிகாரிகள் அங்கேபோய் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும், அங்கே ரோந்துக்கு அனுப்ப முடியாது என்பதையும்நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும் எப்படிப்



பட்டவகையிலே நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை பார்த்து எதிர்காலத்திலே அப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அந்தக் குடும்பத்திற்கு அத்துணை உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் திருமணத்தைப் பற்றி அங்கே சொன்னதைக்கூட இங்கே திரு. பொன்னுரங்கம் அவர்கள் கொஞ்சம் சொன்னார்கள். அங்கே 2 தொழிற்சங்கங்களுக்கிடையே அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்வதிலே ஒரு போட்டி ஏற்பட்டது, நான் அதைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொன்னேன், இந்த போட்டி அந்த நிலைத்தோடு நின்றுவிட வேண்டாம், சிறிய குழந்தைகள், 5, 6, 7, 8 வயது குழந்தைகள், பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திலே இருக்கிற ஒவ்வொரு திருமணத்திற்கும் போட்டி ஏற்பட்டு அந்த திருமணங்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் சொன்னேனே தவிர ஏதோ பொறுப்புக்களைத் தூக்கி தொழிற்சங்கங்கள் தலையிலே போட்டுவிட்டு நிம்மதியாக வந்து விட்டேன் என்று நினைக்க வேண்டாம். இந்த மூன்று நாட்களாக எங்களுக்கு இருக்கிற மனக்குறை, எங்களுக்கு இருக்கிற வருத்தம் எந்த அளவுக்கு என்று நாங்கள் சொல்லமுடியாது. அப்படிப்பட்ட சங்கடம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு அந்தக் குடும்பத்திற்கு நம்மைப் போன்றவர்களும் உதவி செய்ய வேண்டும், தொழிற் சங்கமும் உதவி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. பொன்னுரங்கம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகின்றபோது நான் அதைப் பிரித்துப் பார்க்க தயாராக இல்லை என்றாலும்கூட அவர் சொல்லிவிட்ட காரணத்தினால் நான் சொல்லுகிறேன். அவர் திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறார். எனவே அந்தத் தொழிற்சங்கத்தின் சார்பிலே நாங்கள் செய்வோம் என்று அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். நான் ஏமாந்து விட்டேன், அந்த வேண்டுகோளை நான் இங்கே வைக்கிறேன். அவர்கள் அவர்களுடைய தலைவரிடத்திலே கேட்டு அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இங்கே ஒவ்வொரு கட்சியும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டதைப்போல் பேரவையின் துணைத் தலைவரின் அனுமதியோடு இந்தப் பேரவையின் அனுதாபத்தைக்கூட அந்தக் குடும்பத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அரசாங்கம் அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது. எந்தக் காரணத்தைக்கொண்டும் எந்தத் தொழிலாளியும் பயந்துவிடக்கூடாது என்ற உணர்வைத் தெரிவித்துக்கொண்டு அதன் காரணத்தினால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது,

## 4. கவன ஈர்ப்பு

**பவானிசாகரில் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மீனவர்களின் கடனை ரத்து செய்தல்.**

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, ''பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் நீரின்மை காரணமாக மீன்பிடி தொழிலில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு அளித்துள்ள கடனை ரத்து செய்ய வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,

**அறிக்கை.**

பெரியார் மாவட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்கத்தின் மொத்த நீர்ப்பரப்பு 7,100 ஹெக்டேர் ஆகும். இதில் சராசரி நீர்பரப்பு 3,500 ஹெக்டேர் மட்டுமே. இந்நீர்த் தேக்கத்தில் 1954 ஆம் ஆண்டிலிருந்து மீன்வளம் பெருக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு 'தற்பொழுது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகப் பராமரிப்பில் இருந்து வருகிறது. பவானிசாகர் மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் என்ற கூட்டுறவு அமைப்பு, 3-5-78ல் துவக்கப்பட்டு, பவானிசாகர், அண்ணா நகர், பூங்கார் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மீனவர்களாக மீன் பிடிப்பு நடத்தி வருகிறார்கள். தினசரி மீன்பிடிப்பில் மூன்றில் இரண்டு பங்கு கழகத்திற்குச் சேரும். மீதமுள்ள ஒரு பங்கு மீனவர்களுக்குப் போகும்.

2. இவ்வாண்டு ஏற்பட்ட கடும் வறட்சியை ஒட்டி 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் பவானி ஆற்றின் பழைய ஆயக்கட்டில் உள்ள 41,700 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு உடனடியாக நீர்பாய்ச்ச வேண்டியிருந்ததால், அணையின் ஆற்றுக் கதவுகள் (River Shutters) திறந்து விடப்பட்டன. இதனால்



பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 840 அடிக்கும் குறைந்துபோனது. இதன் விளைவாக ஏற்பட்ட மிகக் குறுகிய நீர்ப்பரப்பில் அடிமட்டத்திலுள்ள மீன் வகைகள் அடி மண்ணைக் கலக்கி விட்டதால் நீர்ப்பரப்பில் பிராணவாயு மிகவும் குறைந்து அது மீன்களைப் பாதித்தது. பெருமளவில் மீன்கள் இறந்து போயின. சுமார் ரூபாய் 7 இலட்சம் மதிப்புள்ள 100 டன் மீன்கள் இறந்து விட்டன, இச்சம்பவம் சனவரித் திங்கள் கடைசி வாரத்தில் ஒரு நாள் மட்டுமே நிகழ்ந்தது. இது கடும் வறட்சியை ஒட்டி நடந்த தவிர்க்க முடியாத சம்பவம்.

3. பவானிசாகர் மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 79 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவ்வுறுப்பினர்களில் 20 பேருக்கு அரசு 1978-79 ஆம் ஆண்டில் முன் கடன் தீர்க்க ரூபாய் 4,000 வழங்கியது. மேலும் 1979-80 ஆம் ஆண்டில் 7 பேருக்கு சமூக பொருளாதாரக் கடனாக ரூபாய் 2,475-வழங்கியது. இவ்விரு கடன்களும் முறையே 60 மாதம் மற்றும் 30 மாத கால தவணைகளில் திருப்பி செலுத்தப்பட வேண்டும். முன்கடன் தீர்க்கப்பெற்ற கடனில் இன்னும் ரூ. 750 அசலாகவும் ரூ. 99,60 வட்டியாகவும் தற்போது 18 உறுப்பினர்களிடம் நிலுவையில் உள்ளது. அதைப்போன்ற சமூக பொருளாதாரக் கடனில் 5 உறுப்பினர்களிடம் அசலாக ரூ. 920.50 நிலுவையில் உள்ளது.

4. அரசு அளித்த கடன்களைக் கூட்டுறவுச் சங்கமே அரசுக்குத் திருப்பி அளித்து விட்டது. எனவே உறுப்பினர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை. மேலே கூறப்பட்ட நிலுவைத் தொகைகள் யாவும் உறுப்பினர்கள் சங்கத்திற்குச் செலுத்த வேண்டியவை. இந்நிலுவைத் தொகைகளில் தவணை தவறிய தொகை எதுவுமில்லை.

5. மேற்கூறிய நிலையில் கடனை ரத்து செய்யவேண்டிய அவசியம் எழவில்லை.

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை இன்று பேரவையில் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமும் அந்த மீனவர்களும் சேர்ந்து அந்த மீன்பிடி தொழிலிலே பங்குதாரர்களாக இருந்து பணியாற்றி வருகிறார்கள். திடீரென்று இந்த நிலை ஏற்பட்டு மீன்கள் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு இந்த மீன்கள் வளர்க்கப்பட முடியாது என்ற நிலையில் மீன்கள் இறந்துபோன நிலையில் வேறு எந்தத் தொழிலும் ஈடுபடாத அந்த மீனவர்கள் அதிலே ஈடுபட்டி

ருக்கின்ற ஏறத்தாழ 200 குடும்பங்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் நான்நேரடியாக சென்றுபார்த்தேன், ஏதோ ஒரு நாளில் தான் அந்த நிலை ஏற்பட்டது என்று இங்கு குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஒரு வாரம் அந்த பாதிப்பு அங்கே இருந்து காலரா போன்ற வியாதிகள் பரவுகின்ற அளவிற்கு மிக கடுமையான பிரச்னைகள் ஏற்பட்டன. அந்த நிலையில் குடி தண்ணீர் பிரச்னையும் வந்தது. அந்த அணைக்கட்டிலிருந்து தான் அண்ணா நகர், தொங்கா, தொட்டம்பாளையம் போன்ற பகுதிகளில் இருக்கிற மீனவர்களுக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தோம். அந்த நிலைமையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு தொழில்களுக்கும் போக முடியாத நிலை இருக்கிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நெசரி மீன்பிடிப்பில் மூன்றில் இரண்டு பங்கு கழகத்திற்கு எடுத்துக் கொண்டு ஒரு பங்கு மீனவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தது. ஆகவே இந்த சூழ்நிலைகளை மனதில் வைத்து அவர்களுக்கு 50 சதவீதம் மீன் கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்,

**மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, எல்லா நீர்த்தேக்கங்களிலும் கொண்டிருக்கிற ஒரு முறை தான் இங்கேயும் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது மீனே கிடைக்கவில்லை என்கிற நிலை இருக்கிறபோது ஒரு பங்கா, ஐந்து பங்கா அல்லது பாதி பங்கா என்ற பிரச்னை எழவில்லை. ஆகவே மீண்டும் மீன் வருகிறபோது எல்லா நீர் தேக்கங்களுக்கும் என்ன முறை கையாளப்படுகிறதோ அந்த முறை தான் இங்கேயும் கையாளப்பட வேண்டும் அதுதான் கையாளப்பட்டு வருகிறது

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன்** ; துணைத் தலைவர் அவர்களே ஓரளவிற்கு இப்போது மீன் கிடைத்துக்கொண்டிருக்கிறது, அந்த அளவிலே அவர்களுக்கு கொடுக்கலாம், ஏற்கெனவே இந்த பாதிப்பில் இருக்கிறவர்கள் தொடர்ந்து கடனை கட்டமுடியாத சூழ் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அரசு தனி கவனம் செலுத்தி மீன்பிடி வலைகள் வாங்கிய கடன் மற்றபடி மீன்பிடிப்பதற்கு வாங்கியிருக்கிற கடன் இவைகளை எல்லாம் ரத்து செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசிற்கு என்று அவர்கள் கட்ட வேண்டிய கடன்கள், எதுவும் இல்லை. ஆனால் அந்தச் சங்கத்திற்கு அவர்கள் கட்ட வேண்டிய கடன்கள் 18 பேர்கள் சேர்ந்து 750 ரூபாய் அசலும், ரூ. 99 .60 வட்டியாக இருக்கிறது. ஐந்து பேர்கள் சேர்ந்து ரூபாய் 920.50 காசு நிலுவையில் இருக்கிறது. அரசிற்கு என்று அவர்கள் செலுத்த



வேண்டிய கடன் அல்லது தவணை பாக்கி எதுவும் இல்லை. அந்த சங்கத்திற்கு தான் அவர்கள் செலுத்த வேண்டும். ஆகவே இது குறித்து அந்த சங்கம் தான் கவனிக்க வேண்டும்.

5. வரவு-செலவுத் திட்டம் 1983-84 மானியக்கோரிக்கை—தொடர்ச்சி

கோரிக்கை எண். 18—மருத்துவம் } தொடர்ச்சி
கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் }

***திரு பி. முகமது இஸ்மாயில்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்றிருக்கிற விவாதத்தில் பங்கு பெற்று என்னுடைய சில கருத்துக்களையும் இந்த மன்றத்தின் முன்வைக்க விரும்புகிறேன்.

மருத்துவத் துறையில் நம்முடைய மாநிலம் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிற குறிப்பிலிருந்து மிகத் தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது. சில நுண்ணிய சிகிச்சை பிரிவுகள் புதியதாக ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இருக்கிற சில குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதற்கு நான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறேன். பொதுவாக சுகாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்து வருகிற இந்தக் காலத்தில் அதிலும் குறிப்பாக மலேரியா போன்ற நோய்கள் முழுமையாக ஒழிக்கப்பட்டு விட்டன என்று சிலகாலம் பேசப்பட்டுக் கொண்டிருந்த நிலைமாறி இன்றைய தினம் மலேரியா காய்ச்சல் குறிப்பாக சென்னையில் அதிகரித்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏனைய பகுதிகளில் குறைந்து வந்தாலும், சென்னையில் அது ஏன் அதிகரித்திருக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கருத்தின்படி சென்னையில் அதிகரித்து இருப்பதற்கு காரணம் புதியதாக திடீர், திடீரென்று தோன்றுகிற குடிசைகளும், மனிதாபிமானத்தோடு அரசு அங்கே குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதும், தண்ணீர் போக வாய்க்கால் வசதி இல்லாத காரணத்தால் தண்ணீர் அங்கே தேங்கி கொசு உற்பத்திக்கு நிலைகளாக மாறிவிடுகிறது. அங்கே கொசுக்கள் வளர்ந்துவிடுகின்றன, என்பது அரசிற்கு தெரிந்

திருக்கும். எனவே குறைகளை போக்க கொசுக்கள் வளர்வதற்கு இடமில்லாமல் ஆக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்று நம்புகிறேன்.

இன்னும் ஒரு குறைபாடு. ஏராளமான மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே வேலைபார்ப்பதற்குபோதிய மருத்துவர்கள் இல்லையென்ற குறைபாடு சொல்லப்படுகிறது. குறிப்பாக 15 ஜில்லாக்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் 10 இடங்களில் மருத்துவர்கள் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதாக ஒரு குறை சுட்டிக்காட்டப்படுகிறது. நேற்றையதினம் திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்—அசிஸ்டெண்ட் சர்ஜன்ஸ் ஏற்பாடு செய்திருந்தார்கள்—இந்த குறைபாட்டினை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11 மணி)

அதோடு மருத்துவக் கல்லூரிகளில் 50 சிவில் சர்ஜன்கள் நியமனம் செய்யப்பட வேண்டிய இடம் காலியாகவே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டிருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அரசு கவனம் செலுத்தும் என்றுநான் நினைக்கிறேன்.

மருந்தங்ககளில் மிச்க விலையுயர்ந்த மருந்துகள்அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படுகிறது என்பதைக் கேட்க நாம் பெருமைப் படுகிறோம். ஆனால் அதே நேரத்தில், யாருக்காக அந்த மருந்துகள் அனுப்பப்படுகிறதோ, அந்த எளிய நோயாளிக்கு அது கிடைக்கவில் ல என்ற குறைபாடும் இருக்கிறது. இதற்குக் காரணம் அநேகமாக அரசு மருந்தகங்களில் வேலை பார்க்கிற மருத்துவர்கள், தனியாக கிளினிக் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மருந்தகங்களுக்கு நாம் அனுப்புகின்ற, சப்ளை செய்கின்ற மருந்துகள், தனியார்கள் நடத்துகின்ற கிளினிக்குகளுக்குச் சென்று விடுகிறதோ என்ற ஐயப்பாடு எனக்கு எழுகிறது. எனவே, அரசு எழைகளுக்கு விநியோகம் செய்கின்ற மருந்து, அவர்களுக்கே கிடைக்கின்ற வகையில். சற்று அதிகமான கண்காணிப்பு எற்படுத்த வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில் தக்கலையில் இயங்கி வருகின்ற மருத்துவமனை, தாலுகா மருத்துவமனை என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் உங்களுடைய குறிப்பைப் பார்க்கும் போது, அது தாலூகா அந்தஸ்தை இழந்துவிட்டதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலுள்ள வரிசையைப் பார்க்கும்போது, தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டல்ஸ்

என்ற வரிசையில் அது இடம் பெறாமல், நான்-டாலுக் ஹாஸ்பிட்டல்ஸ் என்ற ஆட்டத்தின்கீழ் இருக்கிறது. எனவே, அது தாலுகா அந்தஸ்தை இழந்துவிட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் இந்த நிலையைப் பற்றி விளக்குவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பொறுத்த அளவில், பத்மநாபபுரம் நகராட்சி, பெயரளவிலே நகராட்சி என்று இருக்கிறது. போதிய வருமானம் இல்லாத காரணத்தால், அவர்களால் குடிநீர் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை அங்கே மாம்பழத்துறையாறு என்ற அணையைக் கட்டி, தேங்குகின்ற நீரைக் கொண்டு, பத்மநாபபுரம் நகராட்சிக்கும் சுற்றியிருக்கிற ஏனைய சில நகராட்சிகளுக்கும் நீர் வழங்குகின்ற திட்டம் ஏற்கனவே மத்திய அரசின் கவனத்தில் இருப்பதாக தெரிகிறது, அரசாங்கம் உலக வங்கியிடமிருந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கடன் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அவர்கள் இந்தத் தண்ணீர் விநியோகிப்பதற்கு ஆகும் செலவை, பத்மநாபபுரம் நகராட்சியும் ஏனைய நகராட்சிகளும் திருப்பித் தருவதற்குப் பண வசதியில்லையென்ற காரணத்தினால், உலக வங்கி கடன்தர மறுப்பதாகவும் செய்தி வருகிறது. நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புவது, பத்மநாபபுரம் நகராட்சி பெயரளவிலே நகராட்சி என்று பெயர் பெற்றிருக்கிறதே தவிர, ஊராட்சிக்குரிய தகுதிகூட அதற்குக் கிடையாது எனவே, அரசாங்கம் குடிநீர் பிரச்னையில அந்த நகராட்சிக்கு மானியமாக நிதி ஒதுக்கிக் குடிநீர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை மாம்பழத்துறையாறு திட்டத்தை அமுல் நடத்துவதற்கு தடைகள் ஏதேனும் இருந்தால் நகராட்சிப் பகுதியில் அங்கங்கே கிணறுகளைத் தோண்டி, அங்கே கிடைக்கின்ற நீரைப் பம்புகள் வாயிலாக எடுத்து, பைப்புகள் வாயிலாக, நகரமக்களுக்கு விநியோகம் செய்கிற திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கப்பீயரை என்ற ஒரு இடம் இருக்கிறது. ஆண்டாண்டுதோறும் வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிற பகுதி அது. அங்கு குடிநீர் வசதிகளைச் செய்து தருவதற்கு அரசாங்கத்தின் கவனம் முழு மனதாகச் செலவிட்டிருப்பதாகத் தெரியவில்லை. குமரி மாவட்டத்திற்கு ஏறத்தாழ ரூ.1 கோடி குடிநீர் வசதி செய்து தருவற்காக ஒதுக்கி இருப்பதாக நாங்கள் அறிகிறோம் இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கிக் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் பற்றிய சில கருத்துக்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, குடிநீர்த் திட்டம் என்பது தொலைநோக்குப் பார்வையோடு இல்லாமல் இருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கம் அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதான். அடிப்படை தேவையில் முக்கியமானது குடிநீர். சங்கரன்கோயில் ஒன்றியத்திலே இந்தத் திட்டம் முடிந்து விட்டது. ஆனால் கரிவலம்வந்தநல்லூர், சுப்பிலாபுரம், பெரும்பாத்தூர் ஆகிய ஊர்களில் இப்போதும் குடிநீர் இல்லை. வாசுதேவன்நல்லூர் ஒன்றியத்தில் இந்தத் தன்னிறைவுத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கேயும் அறியூர், முத்துசாமிபுரம், வெள்ளக் கவண்டம்பட்டி போன்ற இடங்களில் குடிநீரில்லை. இந்த இடங்களைக் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் வந்து நேரிடையாகப்பார்வையிட்டார். அந்த மக்களிடம் வாக்குறுதி கொடுத்தார்கள், ஒரு ஆண்டுக் காலமாகியும் நிறைவேறவில்லை ஆனால் அதற்கு எந்தவிதமான திட்டமும் இல்லை: அதற்கான ஏற்பாடும் இல்லை என்பதைத்தான் நான் மிகுந்த வேதனையோடு சொல்ல விரும்புகிறேன்.

புளியங்குடி நகராட்சி மலை ஓரத்தில் உள்ள பகுதி. நல்ல வளம் உள்ள பகுதிதான். ஆனால் அங்கே விநியோகிக்கின்ற முறையில் தொடர்ச்சியான ஒரு ஏற்பாடு இல்லாமல் இருப்பது பெருங்குறையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாசுதேவநல்லூர், சிவகிரி, விசுவநாதபேரி, ராயகிரி ஆகிய நான்கு பேரூராட்சிகளையும் ஒன்றாக இணைத்து கூட்டுச் குடிநீர்த் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மூன்றாண்டுகளுக்கு முன்பு இதே சட்டமன்றத்தில் பேசப்பட்டது. பிறகு அது குறித்து ஆய்வு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, ஆய்வு அறிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சம்மதமாக வாக்குறுதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைப்பம்புகளைப் பொறுத்தவரையில் முதலில் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் அவைகள் இருந்தன. ஆனால் 1–1–1982 ஆம் நாள் முதல் இந்தப் பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றப்பட்டது. இப்பொழுது மீண்டும் கைப்பம்புகளின்

பராமரிப்பைப் பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கே பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், கைப்பம்புகளை பராமரிப்பதில் முழுக்க முழுக்க தோல்வியடைந்திருக்கிறது. அவைகள் முறையாக நடக்கவில்லை. அவைகளைப் பற்றிக் கவனிக்காமல் துறையைமாற் றுவதால் பயன் இல்லை. இவைகளைக் கவனிப்பதற்கான போது மான ஊழியர்கள் நியமனம் செய்யப்படவில்லை, போதுமான கருவிகள் இல்லை என்பதுதான் உண்மை. எனவே, போதுமான ஊழியர்களை நியமிக்காமலும், போதுமான கருவிகளை வழங்கா மலும் இருந்தால் இந்தப் பிரச்னைகளை நிச்சயமாகத் தீர்த்து வைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழாய்க் கிணறுகள் போடுவதைப் பொறுத்தவரையில், ஆழம் குறைவாகப் போடப்படுகின்றன. 40 அடியில் போட வேண்டுமென்று இருந்தால், 30 அடியில் மட்டும் போட்டுவிட்டு, 40 அடியில் போட்டதாக கணக்கு எழுதிக் கொள்கிறார்கள் என்பது எனக்குக் கிடைத்த தகவலாகும். அது உண்மையாக இருந்தால் அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்ப தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில். உலக வங்கியிடமிருந்து 112 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் அவர்கள் போடக் கூடிய நிபந்தனை என்னவென்றால், இந்தக் குடிநீருக்காக அதிகமான கட்டணம் வசூலிக்கவேண்டு மென்பதுதான். குடிநீர்ப்பிரச்சனையைத் தீர்க்கும்பொழுது அதில் இலாப நோக்கம் நிச்சயமாக இருக்கக் கூடாது என்பதைச் சுட்டிக்ககாட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது லாரிகளில் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஒரு லாரிக்கு 200 ரூபாய் என்று வாடகை கொடுக்கப்பட்டு கிட்டத்தட்ட 90 லாரிகள் இதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட் டிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு பகுதிக்கும் அல்லது ஒவ்வொரு தெருவுக்கும், டான்சி மூலம் தயாரிக்கப்பட்ட வாட்டர் டேங்கு கள் வைக்கப்படுவதாகத் திட்டம்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 42–வது வட்டத்தில், குக்ஸ்ரோடு பகுதியில் உள்ள ஹைதர் கார்டனுக்கு 9 டேங்குகள் அனுப்பப்படும் என்று சொன்னார்கள். ஆனால் போய்க் கேட்டால், டான்சியில் செய்யக் கொடுத்திருக்கிறோம்,

செய்து முடித்தவுடன் வரும் என்று சொல்கிறார்கள். மூன்று மாதங்கள் கழித்துவரும் என்று சொல்கிறார்கள். எப்பொழுது வரும் என்று கேட்டால், மூன்று மாதங்கள் கழித்து அந்த டேங்குகள் வந்தால் என்ன பிரயோசனம்? ஆகவே, இதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லாரிகளைப் பொறுத்தவரையில் வாடகைக்கு அமர்த்துவது என்பது சரி அல்ல. இராணுவத்தின் மூலமாக லாரிகளைக் கொண்டு வந்து, டீசலுக்கான தொகையை மட்டும் கொடுத்து ஏற்பாடு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தண்ணீர் விநியோகத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொல்லிய அந்தத் தெருவிலே உள்ளவர்கள் அதிகாரியிடம் போய்க் கேட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் சொல்கிறார்கள் நேற்று 5 லாரிகள் அனுப்பப்பட்டன; முந்தநாள் 7 லாரிகள் அனுப்பப்பட்டன என்று கணக்கு இருக்கிறது என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் அங்கே தொடர்ச்சியாகத் தண்ணீர் வருவதேயில்லை. ஏன் இப்படிச் சொல்கிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. உதாரணத்திற்காகத்தான் அந்தத் தெருவைச் சொல்கிறேன்; ஆனால் சென்னை நகரத்தில் பல இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள்தான் இருக்கின்றன. கணக்கில் ... லாரிகள் 1... லாரிகள் அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் தண்ணீர் சப்ளை மட்டும் ஏன் செய்யப்படவில்லை என்பதுதான் யாருக்குமே புரியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட லாரிகளில் வருகின்ற தண்ணீர் பெரிய பெரிய நட்சத்திர ஹோட்டல்களுக்கும், நீச்சல் குளங்களுக்கும், பங்களாக்களுக்கும், போகிறது என்று மக்கள் சொல்கிறார்கள். விநியோகம் செய்யப்பட வேண்டிய தண்ணீரை சில பங்களாக்களிலேயும், பெரிய வீடுகளிலேயும் உள்ளவர்கள் மோட்டாரை வைத்து எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை நிச்சயமாகத் தடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

தண்ணீர் விநியோகத்தைச் சீராகச் செய்வதற்காக 100 ரூபாய் சம்பளத்தில் ஆட்களை நியமிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். 100 ரூபாய் சம்பளம் என்பது நியாயம் என்று சொல்ல முடியாத ஒன்று. இந்த வறட்சி நிலைமையிலே இவைகள் எல்லாம் நியாயமான முறையில் செய்யப்பட வேண்டும். இதில் பெரிய ஊழல் நடக்கும் என்ற நிலைமையை ஏற்படுத்திவிடக் கூடாது.



ஜனநாயக மாதர் சங்கத்தைச்சேர்ந்தவர்கள் பிரம்மாண்டமான ஊர்வலத்தை நடத்தினார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சைக்கில் ஊர்வலம் நடத்தினார்கள். மக்களின் குறைகளைத் தெரிவிப்பதற்காக, அரசாங்கதின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான இப்படிப்பட்ட ஊர்வலங்கள் நடத்தப்பெற்றன. ஆனால் பெரிய பெரிய வண்ண போஸ்ட்டர்கள், மக்கள் மன்றம் என்ற பெயரால் வெளியிடப்பட்டு இந்த இயக்கங்களை கொச்சைப்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். ஜனநாயக உணர்வுகளை நீங்கள் மட்டுப்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது வந்திருக்கின்ற ஒரு அறிக்கையின்படி பார்த்தால், இந்த அரசாங்கத்தின் சாதனைகளை விளக்கிக் காட்டுவதற்காகப் பேரணியாக நடத்தப் போகிறோம் என்று சொல்லப்படுகிறது.

(முற்பகல் 11-10)

அது சரியல்ல. ஸ்ரீவில்லிபுத்தூரில் இப்படித்தான்—தண்ணீர் இங்கே பானை எங்கே என்ற ஊர்வலம் நடத்தப்பட்டது. ஆனால் அந்த ஊரிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலே—இன்றைக்கும் கடுமையான தட்டுப்பாடுதான். ஆக மக்களுடைய உணர்வுகளை குறைத்து மதிப்பிடுவதும், கொச்சைப்படுத்துவதும் சரியல்ல என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு, சுகாதாரத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே ஒரு இயக்குநர் இருந்தார்; அதற்குப்பிறகு, மருத்துவத்திற்கு ஒன்று, சுகாதாரத்திற்கு ஒன்று ஆக இரண்டு இயக்குநர்கள் இருந்தார்கள். இப்பொழுது, சுகாதாரத்தைப் பொறுத்தவரையில், இரண்டு ஆக்கி பொதுச் சுகாதாரத்திற்கு ஒன்று, அதுமாதிரி ஆரம்ப சுகாதாரத்திற்கு ஒன்றுமாக இயக்குநர்கள் இருக்கிறார்கள். இந்த ஆரம்ப பொதுச் சுகாதார இயக்குநர் தான் அத் திட்டங்கள் பூராவையும் அமல்படுத்தவேண்டும். ஆக ஆரம்ப சுகரதார இயக்குநரைப் பொறுத்தவரையில், அவருக்கு 'எஸ்டேப்ளிஷ்மெண்ட்' பார்ப்பதற்கு ஒரு டைரக்டர் வேண்டுமா, இது உண்மையாகவே பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம். ஆக தேவையற்ற முறையில் இப்படிப்பட்ட டைரக்டர் போடுகிற விதத்திலே. அமல்படுத்தக் கூடிய டைரக்டர் ஒருவர் செய்யக் கூடிய பணியாளர்களை கண்ட்ரோல் பண்ணுவதற்காக இன்னொரு டைரக்டர்—ஆக இந்தத் திட்டம் எப்படி அமுல் படுத்த முடியும்! என்பதுதான் நான் கேட்கக் கூடிய கேள்வி. அதுபோன்று கிராமப்புற சுகாதாரப் பணித்திட்டம். இந்த செயல்பாட்டுத்

திட்டம் இங்கே கிடையாது. கேரளம், ஆந்திரம் பூராவும் இது மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று, சிசுக்கள் மரணம் கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில், குமரி, மதுரை, செங்கை, சேலம், வடாற்காடு ஆகிய மாவட்டங்களில், ஜி.ஓ. நம்பர் 65 ஹெல்த் அண்டு பேமிலி வெல்பேர், டேடெட் 11-1-1977 என்ற அந்த ஆணை செயல்படுத்தப்படவில்லை. (குறுக்கீடு)

வாசுதேவநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டேன். அந்தத் தொகுதியிலே ஆஸ்பத்திரியே கிடையாது. புளியங்குடி நகராட்சியில் மருத்துவமனை இல்லை. வாசுதேவநல்லூர் ஒன்றியத்தின் சார்பில் ஆரம்ப சுகாதார நிலையம்—அது இடிந்து போய் 10 வருடங்களுக்கு மேலாகி விட்டது. அது இன்னும் புதுப்பிக்கப்படவில்லை. சிவகிரி என்பது தாலுக்கா மையம். அந்த தாலுக்கா மையத்திலே மருத்துவமனை கிடையாது. ஏற்கெனவே நிதி அறிக்கையிலேகூட தாலுக்கா மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியாக விரிவு படுத்தப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக சிவகிரி தாலுக்கா மையத்தைப் பொறுத்தவரை, ஆஸ்பத்திரியே கிடையாது. எப்படி 50 படுக்கைகளை இங்கே போடப் போகிறீர்கள்? ஆக தயவு செய்து இந்த மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், மாண்புமிகு சுகாதார அமைச்சர், டாக்டர் ஹண்டே அவர்கள் இங்கே கொண்டுவந்துள்ள டிமாண்ட்ஸ்—லே நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இ டிமாண்ட்களிலேயும் சற்றேறக்குறைய, 200 கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு விவரங்களையும் கொடுத்திருக்கிறார்கள், பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று உறுதியும் சொல்லிருக்கிறார்கள். அதை அவசியம் நாங்கள் வரவேற்கிறோம். நம்முடைய மாநிலத்தில் நிறைய 'ஹாஸ்பிடல்ஸ்' என்ற புள்ளி விவரங்களையும் கொடுத்திருக்கிறார்கள். 'டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல்ஸ், ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல்ஸ், தாலுக்ஸ் ஹாஸ்பிடல்ஸ், நான்—தாலுக்கா ஹாஸ்பிடல்ஸ்'. இதில் நிறைய—10,000-க்கு மேல் இருக்கிறது என்று நான் சொல்கிறேன். ஒவ்வொரு ஹாஸ்பிடலுக்கும் ஒரு வருஷத்திற்கு எவ்வளவு பேஷண்ட்ஸ் போகிறார்கள், என்னென்ன டிரீட்மெண்ட் அவர்களுக்கு கொடுக்கிறார்கள், எவ்வளவு பேர்கள் சக்சஸ்புல்லாக மருத்துவம் பெற்று வீடு திரும்புகிறார்கள் என்ற



புள்ளிவிவரங்களை அவர்கள் கொடுத்திருந்தார்கள் என்றால், அது மிகவும் நல்லதாக இருக்கும். இனிமேலாவது அந்தப் புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சார் இவ்வளவு கோடி—100 கோடியோ, 200 கோடியோ, 400 கோடியோ, திட்டம்போட்டு, மருத்துவத்திற்காகவும், இன்னும் சுகாதாரத்திற்காகவும் நீங்கள் செய்தால், என்ன பலன் ஏற்படும்?

There is no cleanliness in the city and insanitary conditions prevail everywhere. T e insanitary conditions prevail particularly both in the Town and other rural areas. Without providing the basic amenities like this, there is no use in spending huge sums. I have been repeatedly saying this on the floor of the house.

சென்னை நகரத்திலே சுகாதாரம் மிகவும் சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. அதையெல்லாம் அரசு சரிவர கவனிக்காமல் எவ்வளவு தொகை செலவிட்டாலும் அதில் பயன் இல்லை. இதில் அரசும், மாண்புமிகு அமைச்சரவர்களும், கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் பற்றி நான் இந்த அவையில் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறேன்.

There is no cleanliness in and around the city and al o in Municipal areas. Yo can see how the City of Madras maintained in a unclean condition a d how bad the city is. There is no cleanliness, there is no water, there is no lig t and there is no proper drainage. The sullage water is coming o t every w ere and it is running on the roads in various places. The e are the basis for the spread of communicable diseases. As a res lt of this, people are put to a lot of sufferings.

நீங்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். மஸ்கிடோஸ் நிறைய வருகிறது. தடுப்பதற்காக நாங்கள் திட்டங்கள் போட்டிருக்கிறோம் எபிடமிக்ஸ் வருகிறது, அதற்காக நாங்கள், அதைக் கம்பாட் பண்ணுவதற்கு பெரிய திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இப்படி பெரிய திட்டங்கள் போட்டும் என்ன காரணத்தினால் இவைகள் வருகின்றன என்பதை நாம் சரிவர கண்காணிக்கவில்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு தூரம் நாம் செலவு செய்தாலும், இது சரியாக வராது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தயவு செய்து இதில் நீங்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். மக்கள் சுகாதாரமாக வாழ வேண்டும், சுற்றுப்புறம் சுகாதாரமாக இருக்க வேண்டும், மார்க்கெட்டுகள் நல்லபடியாக இருக்க வேண்டும்,

லலம்களில் இருப்பவர்கள் நல்லமுறையில் சுகாதாரத்தோடு இருக்க வேண்டும் என்று நாம் செலவு செய்தால் அதனால் சுகாதாரக் கேடுகள் மிகவும் குறையும், கஷ்டங்கள் குறையும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

I know Dr. Hande, He is a very successful medical practitioner and being in that profession, he has been able to bring many new schemes in this field. I compliment him for doing all these things. He has been able to combat leprosy to a considerable extent. I read through his report particularly in regard to leprosy. I am happy that our State has done extremely well in combating leprosy.

அது மட்டுமல்ல, பேமிலி [illegible] மாகாணங்களைவிட நம்முடைய மாகாணத்தில் ரொம்பவும் கண்ணும் கருத்துமாக இருந்து இந்த [illegible] குறைத்திருக்கிறது. அதையும் நான் தெரிந்து மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய காலத்தில் வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் டாக்டர்களை, கிட்டத்தட்ட 900 போஸ்ட்-கிராஜுவேட் டிகிரி, டிப்ளமோ ஹோல்டர்களை நாம் உருவாக்குகிறோம் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள்.

I just want to know whether all these people are being selected on merit basis. There are a lot of rumours and also various misgivings in regard to how these people are selected. I would like to know the views of the Hon. Minister on this and also the Government. Let them introduce a system of examination and select only candidates who have secured good marks, of course, you can reserve the seats for S.Cs. and S.Ts. and for Minority Communities. This system is prevailing in our neighbouring States like Pondicherry, Kerala, Karnataka and Andhra. When this system is functioning well in those States, and is successful, I do not see the reason why this system should not be introduced here also. If this system was introduced this will avoid all rumours and also avoid bringing bad name to the Government and to the State. I appeal to the Hon. Minister and also the Government to see that this system is introduced so that the talents of best persons are secured. Let us take help of the persons whose services are very much appreciated and also who do the job most efficiently.

ஒரு டாக்டருக்கு சற்றேறக்குறைய 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறோம் என்று கணக்கு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு தூரம் நாம் ஒரு டாக்டருக்கு செலவு செய்யும்போது 'why don't you utilise their services properly



அதுமட்டுமல்ல. நாம் டாக்டர்களைக் கூட வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும். என்னைக் கேட்டால் டாக்டர் ஹண்டே அவர்கள்கூட பலதடவை வெளிதேசத்திற்குச் சென்று அங்குள்ள மருத்துவமனைகளைப் பார்த்து, அவர்கள் எப்படி நடத்துகிறார்கள், எவ்வளவு வெற்றிகரமாக திட்டங்கள் வைத்திருக்கிறார்கள், அதற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் நாம் பார்த்து, அங்கே இருக்கின்ற சிஸ்டத்தை இங்கேயும் அவர்கள் இன்ட்ரட்யூஸ் பண்ணவேண்டும். இதில் ஒன்றும் தப்பில்லை. இப்படிச் செய்தால் அது நம்முடைய மாநிலத்திற்கு நன்றாக இருக்கும்.

அடுத்து, நிறைய டாக்டர்கள் இருந்தாலும்கூட, இப்போது ஆயிரம் டாக்டர்களை, கிட்டத்தட்ட 900போஸ்ட்-கிராஜுவேட் டிகிரி, டிப்ளமோ ஹோல்டர்களை நாம் உருவாக்கினாலும், அவர்களுக்கு இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன்.

'Why don't you encourage the Doctors to open dispensaries in interior areas. I would suggest to the Government to give aid-financial aids-to the Doctors to open dispensaries, which will help the Government to a considerable extent. The patients in the interior areas will also get services of doctors, if they set up their practice in such places. The Govenment should also take all precautions to see that the money is not wasted.

(முற்பகல் 11-20)

If you can invest Rs. 25,000 or if you can ask any Bank on your guarantee to give to doctors Rs. 5,000 the doctors can give Rs. 5,000 to open dispensaries in interior places and in villages. There are innumerable places and villages which are completely devoid of any medical service.

என்னுடைய சொந்த ஊரிலேயே-நேடிவ் பிளேசிலேயே ஒரு டிஸ்பென்சரி இருக்கிறது. மாதத்தில் 20 நாட்கள் அந்த டாக்டர்கள் அங்கே வருவது இல்லை. அப்படியே அவர்கள் வந்தாலும் பழனி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் போன்ற இடங்களில் இருந்து வருவதால், ஒரு இரண்டு மணி நேரம் கூட உட்கார்ந்து நோயாளிகளைப் பார்ப்பது இல்லை. அதைப் பற்றி நான் இங்கே எவ்வளவோ தடவை சொல்லி இருக்கிறேன். அங்கேயுள்ள மக்களே பைனான்சியல் அசிஸ்டென்ஸ் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். இந்த மாதிரி நிலையில் அந்த இடம்

10—12 கிராமங்களுக்கு மையமாக இருப்பதால், ஏதாவது நடந்தால் கூட அவர்கள் ஒட்டன்சத்திரம், கரூர் அல்லது திண்டுக்கல் போகவேண்டியிருக்கிறது.

If the young doctors are encouraged to go to interior places and open dispensaries or clinics it will be a good service.

(மாண்புமிகு மற்றுத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. அவர்கள் பாஸ் செய்த பிறகு, அவர்கள் ஆஸ்பிடலில் வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. ஆகவே அதற்காக அவர்களை ஆஸ்பிடலில் போஸ்ட் செய்கிறபோது அவர்கள் படித்து பாஸ் செய்த அந்த ஆஸ்பிடலிலேயே போடாமல், மாவட்ட மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவமனை போன்ற டிஸ்பென்சரிகளில் போஸ்ட் செய்தால், அவர்கள் அந்தப் பகுதியோடு தொடர்பு கொள்ள முடியும் அருகாமையில் உள்ள கிராமங்களில் சென்று வசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் மேலும் அவர்கள் ப்ராக்டிசை பக்கத்தில் உள்ள கிராமங்களில் செட்டப் செய்து கொண்டு அங்குள்ள மக்களுக்கும் வசதியைச் செய்ய முடியும். ஆகவே, அதையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

I understand Mr. Chairman Sir that most of the hospitals are not equipped properly. I do not know how this situation has been created in hospitals and I have told on the floor of this Assembly that in General Hospital, where I had occasion to go a couple of times to see the patients who were admitted there, their condition is very horribel and appalling. I have told the Hon'ble Minister that 'for heaven's sake' the patients should not be allowed to occupy the corridors and that you should open more hospitals to cater to the needs of the people.

மெட்ராஸ் சிட்டியில் 40 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 4—5 ஆஸ்பிடல்கள்தான் இருக்கின்றன என்று நான் கேள்விப்படுகிறேன். இது போதுமானதா? நீங்கள் ஒரு புள்ளி விவரம் எடுக்கவேண்டும். இது போதாது என்று எனக்குத் தெரிகிறது. குறிப்பாக, இன்பெக்சியஸ் டிசீசஸ் ஆஸ்பிடல் ஒன்றுதான் இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன்.

You should have two to three Infectious disease Hospitals and you must also open some more hospitals in the city and in the rural areas because the people rush only to the General Hospital or Royapettah Hospital or Royapuram Hospital. There are innumerable slum people and various other poor people in the interior areas which have expanded within ten years to a very considerable extent. I would suggest that the Government extends all help to the philanthropic people who come





forward to open hospitals. Already Christian Missionaries have opened big hospitals. They go about throughout the world and run the hospitals very successfully.

அம்மாதிரி நம்முடைய மாநிலத்திலே நிறைய ஆஸ்பிடல்கள் வருவதற்கான ஒரு நல்ல முறை இருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலித்து, என்னென்ன வசதிகளைச் செய்து கொடுத்தால், அந்த மாதிரியான ப்ரைவேட் ஆஸ்பிடல்கள் பல ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் ஏற்படுமோ, அந்த வசதிகளைச் செய்து கொடுத்தால், அவர்களும் பெரிய ஆஸ்பிடல்களைக் கொண்டு வருவதற்குத் தயாராக இருப்பார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. இப்போது சில டாக்டர்கள் சேர்ந்து கோஆப்பரேடிவ் சொசைட்டி மாதிரி பெரிய ஆஸ்பத்திரி வைத்து நடத்துகிறார்கள். அதில் ஏழை மக்கள் போய் சிகிச்சை பெறுவதற்கு கஷ்டமாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் 20 லட்சம், 30 இலட்சம், 50 இலட்சம் ரூபாய் போட்டு ஆஸ்பத்திரியை கட்டியிருப்பார்கள். அதனால் அங்கே இலவசமாக ஏழை மக்களுக்கு ட்ரீட்மென்ட் செய்யமாட்டார்கள். அவர்கள் ஃப்ரீயாக ட்ரீட்மென்ட் செய்யாவிட்டாலும் கூட, ஏதாவது குறைந்த அளவில் ஏழை மக்களுக்கு ட்ரீட்மென்ட் செய்ய, குறிப்பிட்ட அளவுக்கு சில பெட்டுகளை அவர்களுக்கு ஒதுக்கி வைக்க, அரசாங்கம் ஏதாவது சப்சிடி கொடுக்கவேண்டும். அரசாங்கம் இந்தக் கருத்தை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Sir, I am told that D.M.Os. and other doctors working in the rural and Taluk Hospitals are not rotated and they have been there for years together and there are cases where the doctors have been working in the same hospitals even for the past eight years. It is a very wrong thing. Will the Government rotate these doctors periodically just as they do in the case of IAS officers? I cannot understand why the D.M.Os. and other doctors are retained in the same hospitals for years together as they would only develop vested interests. It is better that the Government should examine this issue and see that no DMO or Taluk and Headquarters Hospital doctors remain in the same hospital beyond three months. They should be rotated to various other hospitals.

இதற்கு முன்னாலே இந்த சபையில் கூறியிருக்கிறேன். ளொஸ் 4 வேலையாட்களை நிறைய நியமிக்க வேண்டும்.

இப்போது குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறேன். இப்போதும் அதை நான் குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன். பெரிய ஆஸ்பத்திரிகளில் இம்மாதிரி கிளாஸ் 4 வேலையட்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அதன் காரணமாக சுத்தம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களை நல்லமுறையில் கண்காணிக்க சூப்பர்வைசர்களையும் நியமிக்க வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் அதில் பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

I am told that in General Hospital there a e no proper latrines even for doctors and also for the patients. They were built about seve al decades back. This facility of conv nience has not been give especially when more and more people a e being admitted in the General Hospital. I want mor conveni nce to be provided for the pati ntes as well as for the doctors. Doctors sho ld be provided with rooms also, so that they can take some rest after wo k. Some doctors I am told rush to their plac s to answer the calls o natu e even during emergency. This should be rectified and please see that thes things are properly looked into and mor faci itics a e being created. ஆட்கள் நிறைய இருந்தால் மட்டும் வேலை நடந்து விடாது. அவர்களைக் கண்காணிக்க சூப்பர்வைசர்களும் இருக்க வேண்டும்.

You must put Health Insp ctors i charge of wa ds and see that the lat ines a e kept clean and the surroundings k pt clean. R.M.O cannot attend to all these matters and I do not know wh ther he has time to attend to all thes matte s. I doubt very much.

சார், நிறைய பிளீச்சிங் பவுடர்கள் கொண்டுவரப் போவதாக ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல திட்டம். அதே நேரத்தில் மினிஹெல்த் சென்டர்களையும், பிரைமரி ஹெல்த் சென்டர்களையும் நிறைய ஆரம்பிக்கிறபோது அவைகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது முக்கியம். இருக்கிற ஆஸ்பத்திரிகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது எப்படி இருக்கிறது என்று பார்த்தால் ரோடுகளை சுத்தம் பண்ணுவதில்லை. (முற்பகல் 11-45)

அங்கே சுத்தமான வாட்டர் இல்லை. இந்த மாதிரியான நிலைமைகள் இருந்தால், ஆயிரக்கணக்கான பிரைமரி ஹெல்த் சென்டர்கள் கொண்டுவந்தாலும், மினி ஹெல்த் சென்டர்கள்



கொண்டு வந்தாலும் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் மிகவும் குறைவாகத்தான் இருக்கும்: நன்மைகள் அதிக அளவில் இருக்காது.

Adequate steps should be taken to p ovide the needs, i. e. keeping the surrcundings, rcads and streets neat ard clean.

The Governm nt shou ld try to concer trate on pr vention of Food Adulte ation. This is one of the worst crimes. I consider this is the worst c ime. I understand that p ople a e indulging in adulte ating not only food but also ev rything. I ccme to know that even ad lterated pulses etc. a e manufact r d. ஏலக்காய் எப்படி இருக்கிறதோ அதைப்போல போலியாகச் செய்கிறார்களாம், கிராம்பு எப்படியிருக்கிறதோ, அதைப்போலவே போலியாகச் செய்கிறார்களாம். இது மாதிரி செய்பவர்களுக்கு, தூக்கு தண்டனையைத் தவிர வேறு எதுவும் கொடுக்க முடியாது.

Th y are No. 1 nuisance ard cr minals of the society. Th y should be tackled withou t any fear or favour and see that this should be eliminated completely at any cost.

மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் ஸார், இந்த தண்ணீர் பஞ்சத்தைப் பற்றி தனியான ஒரு குறிப்பு ஒன்றை அந்த துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அதைப்பற்றி நான் இங்கே பேசியிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு அவல நிலைமைக்கு அரசாங்கம்தான் முற்றிலும் காரணம் என்று நான் திரும்பவும் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்பொழுது வீராணம் திட்டத்தை நாம் கைவிட்டோமோ 5, 6 வருஷங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன், உடனேயே மாற்றுத் திட்டத்தை நாம் எடுத்திருக்க வேண்டும். ஆனால் அதை எடுக்க நீங்கள் தவறி விட்டீர்கள். அப்போது கிருஷ்ணா நதிநீர் திட்டம் என்று ஒன்று இருந்தது. அதையாவது அதற்குப் பிறகு பேசி, அதை ஆரம்பித்து வைத்திருந்தால், அந்த திட்டத்திலே 90 சதவீத அளவிற்காவது கொண்டுவந்திருக்கலாம் அதைச் செய்யவும் அரசாங்கம் தவறிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு முக்கியமான விஷயத்திலே அரசாங்கம் முன் யோசனை இல்லாமல் நடந்திருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய திட்டவட்டமான கருத்து. இதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் ஜனத்தொகை அதிகமாகப் பெருகிக் கொண்டேவருகிற இந்த நேரத்தில, 1 வருஷம், 2 வருஷம்

3 வருஷம் என்று தொடர்ந்து மழை பெய்யாமல் இருப்பதன் காரணமாக இருக்கின்ற எல்லாக் குளங்களும் வற்றிவிட்டன. அப்போது எப்படி மக்களுடைய சௌகரியம் கவனிக்கப்பட முடியும்? குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை என்றால் எப்படி மக்கள் வாழ முடியும் என்பதை அரசாங்கம் தெரிந்திருக்க வேண்டும். I do not know why this Government has not thought of it and took proper measures to see that this elementary and important necessity is being provided to people. இப்போது அமைச்சர் அவர்கள் எமர்ஜென்சி பேசிஸ்லே ஏதோ ஒரு புதிய திட்டத்தை நான் கொண்டுவரப்போகிறேன் என்று சொல்லி வருகிறார்கள். I wish him all the best. இந்த தண்ணீர் பஞ்சத்தைப் போக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் நான் கேட்கிறேன். தண்ணீரைக் கொடுத்து கண்ணீரை துடைக்க வேண்டும் புரட்சிகரமான தலைவர் புரட்சிகரமான திட்டம் எல்லாம் போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலே புதியதாக திட்டம் போடுவதாகச் சொல்லுகிறார்கள். But I am terribly disappointed. To be frank, Mr. acting Speaker Sir that many of my suggestions to the Hon'ble Chief Minister have not been heeded. I have told him, "please go with the respective M.L.As to each and every constituency in the City and see for yourself how badly the roads and the markets are maintained. But I do not know why he is not doing that. This is the reason why I am insisting that Corporation election should be conducted. When I said "you are afraid of elections,"

அந்த பயமே எங்களுடைய அகராதியிலே இல்லை என்று சொன்னார்கள். அப்படி இருக்குமேயானால் தேர்தலை அவர்கள் நடத்தியிருக்க வேண்டும். எலக்ஷன் பயமே இல்லை என்று சொன்னால், எப்படி சுகாதாரப் பணிகளை கிராமங்களில் சரியாகச் செயலில் கொண்டுவர முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. முதலமைச்சர் அவர்களிடத்திலேகூட நான் இதைப் பற்றியும் பேசினேன். எலக்ஷன் வைப்பது பற்றி நீங்கள் அவசியம், வழிவகை வேறு வகையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று சொன்னேன். இப்போது தும்பை விட்டு விட்டு, வேறு எதையோ பிடிக்கிற கதையாக அமைந்துவிட்டது.

பொதுமக்கள் ஒரு கூட்டம் தண்ணீருக்காக அல்லலின்ற அவலத்தினை நீங்கள் தடுத்திருக்கவேண்டாமா? இதனால் ஏற்படக்கூடிய நிலைமைகளையும் மக்கள் அடைகின்ற துன்பத்தையும் போக்க வேண்டாமா? இந்தப் பொறுப்பெல்லாம் யாரைச் சார்ந்ததாக இருக்கின்றது இந்தச் சபை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்தச் சபை. மக்களுடைய கஷ்டங்களை



அனுபவிக்க வேண்டியது இந்தச் சபை. அப்படி இருக்கின்ற போது மக்களின் இந்த நிலைமைகளை எல்லாம் கவனிக்காமல் இருந்தால் அது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இதற்கு நீங்கள் தான் பொறுப்பு. இதை எவ்வளவுக்கு எவ்வளவு விரைவில் தீர்க்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருகின்ற மாதம் கடுமையான வெய்யில் காலம், அப்போது நிலைமை இதைவிட மோசமாக இருக்கும். அதற்கு என்ன பெரிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

The Water Board is functioning in a good manner. They are very good in taking action then and there. But how many Divisions could be taken up by them at the same time. Please take necessary action to see that the people's inconveniences are redressed to a considerable extent.

I once again appeal to the Hon'ble Minister for Health to consider the provision of basic necessities, the absence of which are responsible for the creation of many communicable diseases. That should be stopped, before giving treatment to the Patients. வெள்ளம் வருவதற்கு முன்புதான் அணை போடவேண்டுமே தவிர வெள்ளம் வந்ததற்கு பிறகு அணை போடுவதில் எந்தவிதமான பலனும் ஏற்படாது. எனவே உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்து பெரிய நோய்களான லெப்ரசி, டி.பி. ஃபைலேரியா போன்ற டிசீஸ்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. அந்த வியாதிகள் எல்லாம் வருவதற்கான சோர்ஸ் என்ன என்பதைக் கண்டறிந்து அந்த வகையிலே சரிவர சுத்தம் செய்தால் இந்த வியாதிகள் வருவதை பெருமளவில் குறைக்க முடியும். அதனால் உங்களுக்கும் தொந்தரவு வராது. பொருள் விரையமும் உங்களுக்கும் ஏற்படாது என்பதைத் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து வடற்காடு மாவட்டம் போரூரிலே பிரசவ வசதி ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கு வேண்டிய உத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. அது என்னுடைய கட்சியினைச் சேர்ந்த திரு. பலராமன் அவர்களுடைய தொகுதி, அதற்காக அரசு ஆணை பிறப்பித்தும் அதற்கான வசதிகள் அங்கே ஏற்படுத்தப்பட்டும் அதற்கான டாக்டர்கள் போடப்படாத நிலைமை இருக்கின்றது. அது இன்னும்

ஆறு இதற்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே இதைக் கவனிக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய மருத்துவம், பொது சுகாதாரம், மக்கள் நல்வாழ்வுத்துறை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்பு பெற்றமைக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தம்து உரையைத் தொடக்கத்திலேயே புள்ளி விவரத்தோடு தொடங்கினார்கள். அப்படி அவர்கள் புள்ளிவிவரத்தோடு தொடங்குகின்றபோது தமிழ்நாட்டிலே ஒருவருக்குச் சராசரியாக 4 ரூபாய் அளவுக்கு மருந்துகள் செலவாகின்றது என்றும், முதலீடு செலவுகளான கட்டடங்களுக்கான செலவு, பெரிய கருவிகள் விலை நீங்கலாகச் சராசரியாக ஏறத்தாழ 25 ரூபாய் செலவாகின்றது என்றும் மொத்தத்தில் பல்வேறு துறைகளின் மூலமாக மக்களின் நல்வாழ்வுக்காகச் செலவழிக்கப்படுகின்ற தொகைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் சராசரியாக 60 ரூபாய் செலவாகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்டுவிட்டு இன்றைக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திக் கேட்கின்றபோது அதாவது மருத்துவமனை தேவை, மேலும் மருத்துவர்கள் நியமிக்கப்படவேண்டும். மருத்துவமனையிலே பல்வேறு கருவிகள் தேவை, வசதிகள் தேவை, படுக்கைகள் அதிகம் தேவை என்று எல்லாம் கேட்கின்றபோது, தமிழக அரசு இந்தியாவிலேயே வேறு பல மாநிலங்களை விட அதிக அளவு சராசரியாக நல்வாழ்வுத் துறையிலே செலவிடுகின்றது என்று சொன்னார்கள்.

[முற்பகல் 11—40]

இவைகளைக் காரணம் காட்டி, இந்த அவையில் பல்வேறு உறுப்பினர்கள் வெவ்வேறு விதமான காரணங்களை கோரிக்கைகளை வைத்ததற்கு எல்லாம் மொத்தமாகவே ஒரு நிலையை முன்கூட்டியே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நீங்கள் என்ன கேட்டாலும் என்னால் எதுவும் ஆகாது என்ற மனோநிலையோடு— நான் இதைக் கேவலமாக சொல்லவில்லை—4 ஆண்டு காலம் பணியாற்றியதற்குப் பின்னர் ஒரு அவநம்பிக்கையோடு அமைச்சர் அவர்கள் இந்த துறையில் இருக்கிறார்கள் என்பதை நான் கருதுகிறேன். வேறு பல மாநிலத்தைவிடத் தொகையில்



சற்று அதிகமாக இருக்கிறது; குஜராத்தை விட அல்லது வேறு பல மாநிலங்களை விட என்று சொல்கிறபோது வேறு பல மாநிலங்களை விட தமிழகத்து மக்கள் நல்வாழ்வு, சுகாதார வாழ்வு, இன்னொரு வகையில் சொல்லப்போனால் உடல் வளத்தோடு கூடிய வாழ்வு பாதிக்கப்பட்டதாக இருக்கிறது என்ற புள்ளி விவரத்தையும் அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன். குஜராத்தில் வாழ்கிறவர்களோ, பஞ்சாபில் வாழ்கிறவர்களோ உண்ணும் உணவினுடைய சராசரி அளவு அதனுடைய சத்து அளவின் சராசரி நம்முடைய மாநிலத்து மக்கள் உண்ணும் அந்தச் சராசரியோடு ஒப்பிட்டுப்பார்த்தால் எந்த அளவுக்கு வருந்தத்தக்கதாக இருக்கும் என்பதும் பலகீனமான ஒரு சமுதாயத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிற நாம், நோய்வாய்ப்படுகிற மக்களை மிக அதிக அளவில் பெற்றுள்ள நாம், அவர்களுக்குப்பணியாற்ற கடமைப்பட்டிருக்கிற நாம், இந்ததொகையை ஒரு குறிப்பாகக் கொண்டு அதனால் நம்முடைய குறிக்கோளிலே வெற்றி பெற்று விட்டதாக எண்ணுவதற்கு இடம் கிடையாது என்பதை எண்ணிடவேண்டும். ஒரு வேளை நிதி அமைச்சர் அவர்கள் அப்படிப்பேசினால் கூட அதில் நியாயம் இருக்க முடியும். நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அப்படிப் பேசுகிறபோது, நியாயம் வெற்றி பெறுவதற்கான வல்லமையை அவர் இழந்து விடுகிறார் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். தமிழக மக்கள் வாழும் நிலப்பரப்பு சுற்றுப்புற சூழல் இவைகள் காரணமாக நல்ல காற்று, தகுந்த நீர், சத்துள்ள உணவு இவைகள் பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறைந்து இருக்கின்றன என்பதும் நோய் தடுப்புக்கான முயற்சிகள் நாம் எவ்வளவு மேற்கொண்டாலும், அது மொத்தமாக தொத்து நோய்த் தடுப்பு வேறு பல நோய்களைத் தடுப்பதற்கான முயற்சிகள் ஒரு 'இன்டகிரேட்டடு' ஸ்கீம், என்ற முறையில் அமையாத காரணத்தால் நோய் தடுப்பில் ஒன்று இரண்டு துறைகளில் பெரிய அம்மை நோய் பரவுவதை தடுப்பதிலே நாம் வெற்றி கண்டு இருப்பதைப்போல காசநோயைத் தடுப்பதிலே, தொழு நோயைத் தடுப்பதிலே, பைலேரியேசிஸ், என்சிபிலேடிஸ், போன்ற நோய்கள் வருவதைத்தடுப்பதிலே பெரும் அளவுக்கு வெற்றி பெறாமல் இருக்கிறோம் என்ற உண்மையையும் நாம் மறந்து விடக்கூடாது. நோய்த்தடுப்பு முறையில் வெற்றிபெறுவது சற்றுக்குறைவாக இருக்கிறது என்பதால் சிகிச்சை முறையில் செலவு சற்று அதிகமான அளவுக்குத்தான் ஆகும். மருத்துவமனைகளின் பொறுப்பு மேலும் மேலும் அதிகமாகத்தான் செய்யும். எனவே இவைகளை நினைவூட்டுகிறபோது சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்படவில்லை, மழை இல்லாத காரணத்தால் குடிநீர் பஞ்சம் எந்த அளவுக்கு மிகுந்த இருக்கிறது என்றால், சென்னை மாநகரிலேயே எந்த ஒரு தாய்மாரைப் பார்த்தாலும்—குடத்தை

இடுப்பில் வைத்துக்கொண்டு தெருத்தெருவாக அலைகிறார்கள். அலையாத தாய்மார்களைச் சென்னை நகரில் இப்போது பார்க்க முடியவில்லை.

அதேபோல் தமிழகத்தினுடைய வளம் பல்வேறுவிதமாக சுரண்டப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால் காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. ஆக இயற்கையினால் நமக்கு கிடைக்கக் கூடிய நலவாய்ப்புகள், நல்ல உடல் வளத்தோடு வாழ்வதற்கான வாய்ப்புகள் குறைந்து போய் இருக்கின்றன என்பதோடு கொசு ஒழிப்பு, சாக்கடை துப்புரவு ஆகிய இந்தப்பணிகள் மிகப்பெரிய அளவுக்குப் பின்தங்கி இருக்கிற காரணத்தால் மருத்துவத்துறையிலே சுகாதரத்துறையிலே செலவழிக்கிற தொகை அதிகமாகத் தான் செய்யும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத்துறைகளுக்கு ஓரே இயக்குநர் தான் இருகக வேண்டும் என்று கருதுகிறவன் அல்ல நான். எத்தனை இயக்குநர்கள் இருந்தாலும் மொத்தமாக நல்வாழ்வுத் துறையில் ஆற்றப்பட வேண்டிய பணிககளைப் பற்றிய மொத்த உணர்வு A Comprehensive outlook ஒவ்வொரு துறைத்தலைவருக்கும் இருந்து ஆக வேண்டும். நல்வாழ்வுத்துறை நல்லமுறையில் கிராமத்து மக்களுக்குப்பணியாற்ற வேண்டுமானால் Multi-Purpose Worker மூலமாகப் பல்வேறு விதமான கடமைகளையும் ஒரு உதவியாளர் நோயாளிக்கு நிறைவேற்றித் தரக்கூடிய முறையில் ஒரு திட்டம் போடப்பட்டது—அது எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்பதில் எனக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டு. அதிலே சில குறைபாடுகள் வரும் என்பதை நான் அறிவேன். சாதாரண ஒரு உதவியாளர் மல்டி பரப்பஸ் ஓர்க்காராக இருக்க வேண்டும் என்று கருதுகிறபோது "Multi Purpose attitude"; மனப்பான்மை மக்களைப்பாதிக்கும் எல்லா நோய்களைப்பற்றியும் மொத்தமாக எண்ணிப்பார்க்கிற அதனுடைய விகிதாசாரத்தை புரிந்து கொண்டு எந்த எந்தத்துறையை இணைத்து செயல்படலாம் என்று எண்ணிப்பார்க்கக்கூடிய அந்த மனப்பான்மை இந்த துறையில் அதிகம் இல்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த துறையைப் பொறுத்தவரையில் பார்ப்பிரிவினை மனப்பான்மை அதிகமாக இருக்கிறதே தவிர கூட்டுக்குடும்ப மனப்பான்மை இல்லாதது காரணமாக மொத்தமாக சமுதாயத்திற்கு அவர்கள் ஒருமித்து ஆற்றியிருக்கக்கூடிய பணியை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு குறைந்து இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மருந்துச்செலவு அதிகமாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மருந்துகளின் விலை எவ்வளவு ஏறியிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியாவிட்டாலும் டாக்டருக்குத்தெரியும். எனவே மருந்து விலைகள் ஏறியிருக்கிற அளவிலே மருந்துகளுக்காக ஆகிற செலவு 50 சதவீதம்

முதல் 60 சதவீதம் அளவுக்கு மருந்துகளின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. இந்த மருந்துகள் பெரிய மருந்து உற்பத்திக் கம்பெனிகளினாலே தயாரிக்கப்படுகின்றன. அப்படித் தயாரிக்கப்படுகிற மருந்துகளின் விலைகளைக் கட்டுப்படுத்த அல்லது குறைக்க மத்திய அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்போடு தமிழ்நாடு தாதா மருந்து உற்பத்தி நிறுவனத்தைப்போன்று இன்னும் சில நிறுவனங்களை ஏற்படுத்துவதன்மூலம் அல்லது அரசாங்கமே மருத்துவமனைகளுக்குத் தேவைப்படுகிற மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற திட்டத்தை மேற்கொள்வது மூலம். இப்போது அது கைவிடப்பட்டு விட்டது. அதுகூட மருத்துவமனைகளுக்குத் தேவைப்படுகிற மருந்துகளையும் மருத்துவமனைகளுக்கு வாங்கப்பட வேண்டிய பேடண்ட் மருந்துகளையும் உற்பத்தி செய்வதற்கு அரசு தனி மருந்து உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்துவதன் மூலமாக செலவைக் குறைக்க வேண்டுமே தவிர செலவு அதிகமாகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பது பொருத்தமுடையது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவத்துறையிலே விளக்கத்திற்காக எவ்வளவு செலவாகிறது என்ற புள்ளிவிவரங்களைத் தந்தாலும்கூட டார்கெட் பற்றியும், நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள், அவைகளினுடைய பலன்கள் இவைகளையும் குறிப்பிட்டு அவற்றிலே இந்த அளவுக்கு நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்— யுட்டிலிட்டி அல்லது சர்வீஸ் என்ற முறையில், பணிகளுடைய பலன் என்ற முறையில்— இந்த இலாகாவினுடைய கருத்துக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமே தவிர செலவுக்கணக்கை வைப்பதிலே அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செலவுக் கணக்கை வைத்து பார்ப்பது என்றால் என்னவிதமான எண்ணங்கள் எல்லாம் ஏற்படும் என்று கருதுகிறேன் என்றால், சில நேரங்களிலே அமைச்சர்களுக்காகிற செலவு கூட அதிகம் என்று சொல்லக்கூடிய அப்படிப்பட்ட நிலமைகள் ஏற்படக்கூடும். உடனடியாக மருத்துவமனைகளினுடைய செலவைச் சிக்கனப்படுத்துவதற்கு எந்த எந்த வகையில் அவர்கள் வாங்குகிற மருந்து முதலான பண்டங்களை அரசாங்கத்துறையிலே உற்பத்தி செய்யலாம் என்பதைக் கருதிப் பார்க்கவேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற மிக கடுமையான நிலைமை— குடிநீர் வடிகால் வாரியம் ஏதோ அவர்கள் துறைத்திற்குரிய புள்ளிவிவரங்களைத் தந்தாலும் கூட, அறிக்கை தந்தாலும்கூட இந்த மாதமோ அடுத்த மாதமோ இன்னும் ஒன்றிரண்டு மாதங்களிலே குடிநீர் இன்மையால் சென்னையில் எவ்வளவு பாதிக்கப்படும் மதுரை போன்ற நகரங்களில் எவ்வளவு பாதிக்கப்படும் கிராமங்களில் மக்கள் குடிநீருக்காக எவ்வளவு அலைய நேரிடும்

என்பது எல்லாம் வருந்தத்தக்க நிலைமைகள் ஆகும். மின்சார வெட்டு காரணமாக ஏற்பட்டிருக்கிற பாதிப்பு ஒரு பக்கம். நீர் இன்மை காரணமாக ஏற்பட்டிருக்கிற பாதிப்பு ஒரு பக்கம். இப்படி ஏற்படுகிறபோது நான் குறிப்பிட விரும்புறேன். அரசாங்கம் சில அடையாளங்களை நல்லெண்ணங்களைக் காட்டவேண்டும். குடிநீருக்கே தண்ணீர் கிடைக்காத நிலைமையில் மிகப்பெரிய சாராய ஆலைகள் நிறுவப்பட்டு அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைக் காண்கின்றபோது, ஒரு லிட்டர் எரிசாராயத்திற்கு 12 லிட்டர் தண்ணீர் கலந்து அதை பாட்டில்களில் அடைத்து விற்கப்படுவதைவிட்டு தண்ணீர் வழங்குவதற்காக ஒரு ஆறு மாத காலம் சாராய ஆலைகளை நிறுத்தி வைப்பதற்கு நல்ல எண்ணத்தின் அடையாளமாக சாராய ஆலைகளிலே கூட தண்ணீரை வீணாக்குவதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்ற முறையிலே—சுகாதாரத்தை கெடுப்பது என்பது இன்னொரு காரணம் நோய் நொடிகளுக்கு அது காரணமாக இருக்கிறது என்பது இன்னொரு காரணம். தண்ணீரை மிச்சப்படுத்துவதற்கான முறையைக் கையாளவேண்டும்;

அதேபோல மருத்துவமனைகளுக்கு மின்சாரம் இல்லாத காரணத்தினால் சில அறுவை சிகிச்சைகளை நடத்துகிற அந்த கடமையை நிறைவேற்றுவதில் முக்கியமான அறுவை சிகிச்சைகளை மட்டும் நடத்துங்கள், தள்ளிவைக்க வேண்டிய அறுவை சிகிச்சைகளை தள்ளிவையுங்கள் என்று அரசாங்கத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது. வருந்துதற்குரியது. நான் சொன்னால் அமைச்சர் தவறாக நினைக்கமாட்டார், எது மிக முக்கியமான அறுவைசிகிச்சை. அன்பழகனுக்கு ஏற்படக்கூடிய ஒரு சிறிய கட்டிக்கு அறுவை சிகிச்சை மிக முக்கியம். மிகச்சாதாரண ஒரு ஏழைக்கு ஏற்படக்கூடிய கடுமையான வயிற்றுவலிக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது என்றால் அது முக்கியமல்ல என்பதாக ஆகிவிடும். நான் என்னையே உதாரணம்சொன்னால்தான் அமைச்சருக்கு விளங்கும். அவருக்கும் அதேதான், எனவே எது முக்கியம் என்பதிலே ஏற்படக்கூடிய பல்வேறு விதமான வருந்தத்தக்க நிலைமைக்கு இடமளிக்கும் வகையில் அறுவை சிகிச்சைக்குகூட இந்த அரசாங்கத்திலே மின்சாரம் வழங்கமுடியாதநிலைமை இருக்குமானால் அது வருந்தத்தக்கது. அதைவிட சினிமாகொட்டைகளிலே மேட்னி ஷோக்களை தமிழ்நாடு முழுவதும் நிறுத்துங்கள். இந்த சர்காருக்கு நல்ல எண்ணம் இருக்குமானால் மருத்துவமனைகளுக்கு தரப்படுகிற மின்சாரத்திலே 10 யூனிட்டுகள் குறைப்பதை விட தமிழ்நாடு முழுவதும் உள்ள சினிமா கொட்டகைகளில் பகல் நேரத்திலே காட்சிகள் நடைபெறுவதை நிறுத்திவிடலாம். ஏர் கண்டிஷன் தியேட்டராக இருக்குமானால் ஒரு நாளைக்கு ஒருமுறை தான் காட்சி நடத்தலாம் என்று ஏற்படுத்தலாம். மூன்று ஷோ, நான்கு ஷோ என்று நடத்து



வதற்கு அனுமதி இருக்கக்கூடாது. எந்தக்காரணத்தைக் கொண்டும் மின்சாரத்தை, வேடிக்கை பார்ப்பதற்காக—மக்களுடைய பொழுதுபோக்கிற்கு அதுவும் தேவையென்று நானும் ஒத்துக்கொள்கிறவனாக இருந்தாலும், மருத்துவமனைகளில் மின்சாரம் இல்லை என்று சொல்கிற அவல நிலைமையை விட, சினிமா கொட்டகைகளுக்குத் தரப்படுகிற மின்சாரத்தைப் பெருமளவிற்கு நீங்கள் குறைந்துக் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதைப்போல இன்னும் ஒன்று, சுகாதாரத் துறையோடு தொடர்புடையது. பல்வேறு இடங்களில் மகாசிவராத்திரி விழாவிற்கு பெரிய விளம்பரம் வருகிறது; கும்பாபிஷேகத்திற்கு விளம்பரம் வருகிறது. லட்சக்கணக்கான மக்கள் கூடுவதற்கான விளம்பரங்கள் பத்திரிக்கைகளில் செய்கிறார்கள். நான் மதமே கூடாது என்பவன் அல்ல. மதம் முட்டாள்தனத்திற்கு அடிமையாவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்று கருதுகிறவன். எனவே கடவுள் வழிபாடு அல்லது பண்டிகை யார் வேண்டுமானாலும் விரும்பி செய்யட்டும். மக்கள் கூட்டம், கூட்டமாக சேர்க்கிற அந்த காரியத்தைச் செய்வது நல்லதல்ல. பெரிய விழாக்கள் நடைபெறுகிற நேரத்தில், பெரிய கூட்டத்தை சேர்க்கிற இடத்தில் தற்காலிகமாக அரசினுடைய சார்பிலே, மகாசிவராத்திரியாக இருந்தாலும், கும்பாபிஷேகமாக இருந்தாலும், வைகுண்ட ஏகாதசியாக இருந்தாலும், வேறு எந்த பண்டிகையாக இருந்தாலும், ஒரு வட்டாரத்திற்குள் மக்கள் கூடாமல் இருக்க, தண்ணீர் பற்றாக்குறை, சுகாதாரக்கேடு இவைகளை எல்லாம் விளம்பரப்படுத்தி அந்த பகுதியிலே மக்கள் கூடவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளக்கூடிய முறையை, தற்காலிகமாக—நிரந்தரமாக அல்ல,—அந்த நெருக்கடிகள் தீர்கிற வரைக்கும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பொதுமக்களின் தேவையும், நெருக்கடியும் அதிகமாக இருக்கிறபோது பல்வேறு சிற்றுண்டி சாலைகளில், பெரிய ஓட்டல்களில் விருந்துகள் நடைபெறுகிற நிலைமை இருக்கின்றது, அந்த விருந்துகளுக்காக ஏராளமாகச் செலவாகிறது என்று பணத்திற்காக நான் சொல்லவில்லை. ஆனால் அதற்கு மாறாக அதனாலே உணவுப்பண்டங்கள், இன்றியமையாதப் பண்டங்கள் மிகுதியாக செலவழிக்கிற நிலைமை இருக்கிறது. எனவே இந்த அரசாங்கம் உணவு பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை முதலாக மக்களுக்கு இருக்கிற கஷ்டங்களை நினைவில் கொண்டு 50 பேர்களுக்கு மேற்பட்டு விருந்து எதுவும் நடத்தக்கூடாது என்று ஆணை இடக்கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அது கட்டாயத் தேவை. அதே போல சுற்றுலா பொதுவாக விரும்பத்தக்கதே தவிர, மக்களுக்கு நெருக்கடியான வாழ்க்கை நிலை

இருக்கக்கூடிய நேரத்தில் அதற்கு ஊக்கம் காட்ட வேண்டிய அவசியமில்லை. சுற்றுலாவை அறிமுகப்படுத்தி அதன் மூலமாக தமிழ் நாட்டினுடைய மக்களிடையே ஏற்கனவே இருக்கிற கஷ்டங்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை. அரசாங்கம் மூன்று மாத காலத்திற்கு சுற்றுலாவை நிறுத்தி வைக்கலாம். மக்கள் உள்ளபடியே துன்பப்படுகிறார்கள் என்பதை அரசு உணருமானால் இந்தச் சுமைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப் போலத்தான் தமிழக அரசு காலராவை, மலேரியாவை, யானைக்கால் வியாதியை, மூளைக்காய்ச்சலை இவைகளை எல்லாம் தடுப்பதற்கு மொத்த நடவடிக்கையாக, அழிக்க வேண்டிய தொத்து நோய்கள் பரவுவதற்கு மூலகாரணமாக, துணையாக இருக்கக்கூடிய அப்படிப்பட்டவைகளை அழிப்பதில் எல்லாப்பகுதிகளிலும் ஒட்டு மொத்தமாக அல்லது இன்டகிரேட்டட் ஸ்கீம் என்ற முறையில் கொசு ஒழிப்பு, எலிகள் ஒழிப்பு, வெறிநாய்கள் ஒழிப்பு, பன்றிகள் வளர்கிற இடத்தைக் கட்டுப்படுத்தல் ஆகியவைகளை எல்லாம் சேர்த்து இணைத்து நிறைவேற்றவேண்டும். நகரப்பகுதிகளில் பன்றிகள் சுற்றுகிற நிலைமை இருக்கிறது. அதனுடைய காரணமாக மூளைக்காய்ச்சல் நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது: எலிகளை ஒழிப்பதில் நாம் அக்கறை காட்டவில்லை வெறிநாய்கள் இப்போது நகரசபைகளில் பிடிக்கப்படுவதில்லை. பல இடங்களில் வெறிநாய்கள் அலைகின்றன. இப்படி ஏற்படுகிற இந்த நிலைமைகளைக் கட்டுப்படுத்த மருந்து தெளிப்பது, நீர்நிலைகளைப் பாதுகாப்பது. குடிநீர் கிணறுகளைப் பாதுகாப்பது என்ற இந்த கடமைகளிலே இவைகளுக்காக இப்படிப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவது என்று வகைப்படுத்துகிற ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அதைப்பெருமளவில், தமிழகத்தில் இந்த சுகாதாரத் துறை மூலமாக நிறைவேற்றினால்தான் ஓரளவிற்காவது இந்த பணிகள் வெற்றியடையும். இன்றைக்கு இருக்கிற நிலைமைகளை நான் பயங்கரமாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை என்றாலும்கூட, நிலைமைகள் பயங்கரமானவைகளாக மாறும் என்று சந்தேகிக்கிறேன். நான் சந்தேகிக்கிற காரணத்தாலே தான் சொல்கிறேன். இந்தத் துறை வழக்கமாக ஆற்றுகிற பணியைவிட இரண்டு மடங்கு பணியாற்ற வேண்டிய ஒரு கட்டாயத்திலே நின்று இருக்கிறது.

குடிதண்ணீர் வாரியத்திற்கு அதிக விளக்கம் தேவையில்லை. தமிழ்நாட்டைச் தயவுசெய்து நீங்கள் திருச் சந்தூர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அது ஒன்றே போதும். இல்லையென்றால் பெரியகுளம் என்று கருதிக்கொள்ளுங்கள். அவ்வாறு கருதினால் தானாகவே தமிழ்நாடு இன்றைக்கு இருக்கிற நெருக்கடிகளிலிருந்து தீர்விற்கு விடுபடும். அப்போதும் முழுஅளவிற்கு மீளாது. ஏன் முழு அளவிற்கு மீளாது என்றால் 60 அடி ஆழம் [illegible]





தோண்டினாலும். 100 அடி ஆழம் குழாய் போட்டாலும் தண்ணீர் அதற்கும் கீழே போய்விடக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சென்னை நகரத்தில் மழை பெய்து ஓரளவிற்கு நீர்வளம் இருந்த காலத்திலே 15 அடியிலே தண்ணீர் கிடைத்த பகுதிகளிலே இன்றைய தினம் 30 அடியில் கிடைக்கிறது. இன்னும் ஒரு மாதம் போனால் அது 40 அடி, 50 அடி ஆழம் போய்விடும். அதற்குப் பின்னாலே கிணறுகள் வற்றினாலும் வற்றும்.

எனவே, அந்த நிலைமையிலிருப்பதையெல்லாம் சேர்த்து இணைத்துப் பார்த்து, விரைவுபடுத்திச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது, தொத்து நோய்களைப் பற்றி அரசாங்கத்திற்குத் திட்டவட்டமான கருத்துக்கள் இருந்தாக வேண்டும். தொழுநோயைப் பற்றி இந்த அரசாங்கத்தின் சார்பில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட புள்ளி விவரம் இந்த ஆண்டு மாற்றப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு தரப்பட்ட புள்ளி விவரத்தைப் பற்றி நான் குறைபட்டுக் கொண்டு பேசியது எனக்கு நன்றாக நினைவிலே இருக்கிறது. கடந்த ஆண்டு தந்த புள்ளி விவரத்தின் 1981-வது ஆண்டிலே ஏறத்தாழ 94 இலட்சம் என்றும், 1980-வது ஆண்டிலே ஏறத்தாழ 100 இலட்சம் என்றும் சோதனை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கை தரப்பட்டு அந்தப் புள்ளி மாற்றப்பட்டு இந்த ஆண்டு,—— நான் ஏறத்தாழ என்று சொல்வதற்குக் காரணம் அந்தப் புள்ளி விவரத்தை இப்பொழுது நான் படித்துக் காட்டுவதற்கு நேரமாகும் என்ற காரணத்தாலே அப்படிச் சொன்னேன்——ஆனாலும் நான் படித்துக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு Leprosy Control Programme in Tamil Nadu என்ற தலைப்பில், தரப்பட்டுள்ள அறிக்கையின் 25—வது பக்கத்தில், 1979—வது ஆண்டு 92 இலட்சம் பேர்கள்; 1980—வது ஆண்டிலே 97.6 இலட்சம் பேர்கள்; 1981-வது ஆண்டு நவம்பர் மாதம் வரையில் 104·1 இலட்சம் பேர்கள்——இவர்களுக்குத் தொழுநோய் இருக்கிறதா என்று பரிசோதிக்கப்பட்டது என்று புள்ளி விவரம் தரப்பட்டது. 1970-ஆம் ஆண்டு முதல் 1981-வது ஆண்டு வரையில் கூட்டிப்பார்த்தபொழுது, ஏறத்தாழ 7 கோடி பேர்கள் என்று ஆன காரணத்தால், தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி மக்களில் 7 கோடி பேர்களுக்கு எப்படி ஐயா—— பரிசோதனை நடைபெற்றிருக்க முடியும் என்ற கேள்வி எழுப்பப் பட்டது. அப்படி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பிறகு, அந்தப் புள்ளிவிவரத்திற்கு இந்த ஆண்டு ஒரு மாற்றுப் புள்ளி விவரம் தந்திருக்கிறார்கள். அந்த மாற்றுப் புள்ளி விவரத்திலே தொழு

நோய் பற்றி அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். தொழு நோய் சோதனை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கை, 1980–ஆம் ஆண்டு, 49,70,178 என்று தந்திருக்கிறார்கள். ஏற்கனவே, தரப்பட்ட புள்ளி விவரத்தைவிட இது எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதை நீங்கள் பார்த்தால், 1980–வது ஆண்டு தரப்பட்டது 97.60 இலட்சம். இப் பொழுது தரப்பட்டிருப்பது 49·70 இலட்சம். அதேபோல, கடந்த ஆண்டு, 1981 நவம்பர் வரையில் 104 இலட்சம் என்று தரப்பட்டது. இப்பொழுது, 1981–வது ஆண்டு 1982 மார்ச் வரையில் 45 இலட்சம் என்று மாற்றித் தரப்பட்டிருக்கிறது. நான் மொத்தப் புள்ளிவிவரமே தவறாக இருக்கிறது என்று சொன்ன காரணத்தினால், அதற்குப் பிறகு மறுபரிசீலனை செய்து ஒருவேளை மாற்றியிருக்கலாம். ஆனால், மாற்றப்பட்டதைப் பற்றி ஒரு குறிப்பு தர வேண்டாமா? அந்தக் குறிப்பு தரப்படவில்லை. மாறாக, நோய் கண்டுள்ளதாக, புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவர்கள் என்று இந்த ஆண்டு தரப்பட்டுள்ளது. அமைச்சர் கவனித்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், சென்ற ஆண்டு அவர்கள் அதற்குத் தகுந்த பதில் சொல்லவில்லை. 28–வது பக்கத்தில், நோய் புதிதாகக் கண்டவர்கள் எண்ணிக்கை 1980–வது ஆண்டிலே 4,714 ; 1981–லே 4,476 ; 1982–லே 5,938, என்று கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியானால் அதனுடைய விகிதாசாரம் என்ன வருகிறது என்று பார்த்தால், அதற்கு, புதிதாக நோய் கண்டுள்ளதாக ஆயிரம் பேருக்கு என்று சொல்லி, 1980–லே 3 பேர், 1981-லே 2·4 பேர்கள், 1982-லே 2·4 பேர்கள் என்று தரப்பட்டிருக்கிறது. இதைக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்த 3. 2.4; 2.4 என்ற அத்தனையும் தவறு என்பது தெரியும். அவர்களே தந்திருக்கிற கணக்கின்படி மேலே இருக்கிற புள்ளிசரியாக இருக்குமானால், இதனுடைய புள்ளி எப்படி வருகிறதென்றால், 0.96——ஒன்றைவிடக் குறைவு——என்ற கணக்குத்தான் இதிலே வருகிறது. அப்படிப் பார்த்தால், 1982–ஆம் ஆண்டு 1.38 என்ற அளவுக்குத்தான் எண்ணிக்கை வருகிறது. 1.38 என்ற அளவுக்கு வருவதை 2.4 என்று தரப்படுமானால் ஏற்படுகிற தவறை உணரவேண்டும். ஆனால், அதை நான் எண்ணிப் பார்க்கிறபொழுது, எங்கே தவறு வருகிறது என்றால், ஏற்கெனவே உள்ள மக்கள் தொகை அதிகப்படுத்தித் தரப்பட்ட அந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்காக குறைத்த வர்கள், நோய் கண்டுள்ளதாக, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் 4,814, 4,400 5,900 என்று கொடுத்திருக்கிறார்கள். அதிலே தவறு இருக்கிறது. ஏறத்தாழ 15,000 பேர்கள், 16,000 பேர்கள் கண்டுபிடிக்கப்பட்டதைக் குறைத்து விட்டார்கள். அப்படிக் குறைத்து, இந்தப் புள்ளி விவரம் தவறாகத் தரப்பட்ட காரணத்தால், இந்த விகிதாச்சாரமாகத் தரப்படுவது தவறாக இருக்கிறது என்று தோன்றுகிறது. எனவே இதனுடைய மொத்த அளவு எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்று கேட்டால்



இந்த விகிதாச்சாரம் தவறாக இருக்கிற காரணத்தால், நோய் பெற்றுள்ளவர்களுடைய எண்ணிக்கை என்று சொல்கின்றபொழுது பரவி உள்ளவர்களுடைய எண்ணிக்கைச் சரியாக இருந்தாலுங்கூட புதிதாக நோய் தொத்தியவர்களுடைய எண்ணிக்கை —— இன்சிடல்ஸ்——என்று சொல்லப்படுவது தவறுபடக்கூடிய அளவுக்கு இருக்கிறது.

(நண்பகல் 12–00)

சோதனை செய்யப்பட்ட மொத்த மக்கள் தொகை என்ற கணக்கைப் பார்க்கும்பொழுது ஓர் இடத்தில் 130 இலட்சம் என்றும் இன்னொரு இடத்தில் 131 இலட்சம் என்றும் தரப்பட்டிருக்கிறது. அதை நான் பெரிதாகக் கருதவில்லை.

இந்தப் புள்ளி விவரங்களிலே இப்படியெல்லாம் ஏற்படுகின்ற தவறுகளால் சரியானதொரு கண்ணோட்டம் ஏற்பட முடிய வில்லை. தொற்று நோய், தொழு நோய், எந்த அளவிற்குப் பரவுகிறது என்று பார்த்தால் ஆயிரம் பேர்களுக்குப் பதினைந்து பேர்களுக்குப் பரவிக் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. இப்படி ஆயிரம் பேர்களுக்குப் பதினைந்து பேர்கள் என்ற அளவு விகிதாச்சாரம் குறைந்த அளவிற்குக் காட்டப்படுவதால் பாதிக் கப்படுவது இந்தத் துறையின் நடவடிக்கைகளும், பொதுமக்களும் தான். எனவே, அந்தப் புள்ளி விவரங்களைச் சரிசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், ஒரு புள்ளி விவரம் தவறு என்று எடுத்துக் காட்டினால் அந்தப் புள்ளி விவரத்தை மட்டும் பார்த்துத் திருத்தினால் போதாது. அதன் முன் பின் இருக்கக் கூடிய எல்லாப் புள்ளி விவரங்களையும் ஒப்பு நோக்கும் முறையில், வெரிஃபிகேஷன் மெத்தேட் என்ற முறையில் பார்த்து முழுவதையும் சரி செய்தால்தான் புள்ளி விவரங்கள் சரியாக இருக்கும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள்கூடச் சொல்லலாம். இந்தப் புள்ளி விவரங் களினால் என்ன பலன் என்றுகூடக் கேட்கலாம். ஆனால், அமைச்சரேகூட இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், மார்ச் 19 "இந்து" பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தியின்படி,

The Health Minister said : The Danish Ambassa..or called on him earlier in the day for a discussion on implementing a Dani h project in the State. The statistics they had, astonished me என்று கூறியுள்ளார்.

அவர் வைத்திருந்த புள்ளி விவரங்கள் என்னை ஆச்சிரியப்பட வைத்தன என்று அமைச்சரே ஒப்புக்கொண்டு சொல்கிறபொழுது நாம் வைத்திருக்கின்ற புள்ளி விவரங்கள் நம்மை மயங்கச் செய்கின்றன; கவலைப்படச் செய்கின்றன. ஏனென்றால் அவர் வைத்திருக்கின்ற புள்ளி விவரங்களுக்கும், நாம் வைத்திருக்கின்ற புள்ளி விவரங்களுக்கும் இருக்கின்ற வேறுபாடு அப்படிப்பட்டது.

ஏற்கனவே நான் மருத்துவத் துறையிலே, மருத்துவமனைகளிலே வெளி நோயாளிகள், அக நோயாளிகள் என்ற வகையிலே நாம் எண்ணிக்கை விகிதாச்சாரத்தை வைத்திருக்கின்ற முறை தவறு என்று சொன்னதற்குப் பின்னர் கடந்த ஆண்டு முதலாக அது ஓரளவுக்குத் தெளிவடைந்து வந்திருக்கிறது.

ஆனால், இப்பொழுது பார்த்தால்கூட, குழந்தைகளுடைய பிறப்பு விகிதம், அதைப்போல இறப்பு விகிதம் என்ற புள்ளி விவரத்தைத் தருகின்ற அந்தப் பகுதியிலே பார்க்கின்றபொழுது. பிறப்பு—இறப்பு விகிதங்கள் இந்த 81—வது ஆண்டிலே திடீரென்று மிகப்பெரிய அளவிற்கு குறைந்திருக்கின்றன. ஆயிரம் பேருக்குப் பிறப்பு விகிதம் என்று சொல்லி, அந்தக் கணக்கைப் பார்க்கின்ற பொழுது கிராமப்புறம், நகர்ப்புறம் ஆகியவற்றிலே ஏறத்தாழ முறையாக அது காணப்படுகிறது. அதேபோல 1000 பேருக்கு இறப்பு விகிதம் என்று பார்க்கிறபொழுதும் ஏறத்தாழ அந்தப் புள்ளி விவரங்கள் நகர்ப்புற பகுதியிலே சரியாகக் காணப்படுகிறது. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை உரையிலே பக்கம் 17-இல் அது காணப்படுகிறது. இதிலே கிராமப்புறத்திலே தமிழ்நாட்டில் 1977 முதல் 1981 வரையில் கிராமம், நகரப்புறங்களில் குழந்தைகள் இறப்பு வீதம் வருமாறு என்ற குறிப்பு வருகிற பொழுது, 1980 ஆவது ஆண்டு வரையில் 130, 116, 111, 115 என்று வருவது 1981 இல் திடீரென்று 93.8 என்று குறைகிறது. அதேபோல நகர்ப்புறத்திலே பார்த்தால் ஏறத்தாழ 62·7-இலேயிருந்து 51.7 என்று குறைகிறது. மற்ற ஆண்டுகளிலே 2 புள்ளி, 3 புள்ளி என்று சராசரியாக இருக்கிறது. ஆனால் இந்த ஒரு ஆண்டிலே 51.7 என்று ஆகி, திடீரென்று 10 புள்ளி கிராமப் பகுதியிலே குழந்தைகள் பாதுகாக்கப்பட்டு விட்டார்கள் அதிகமாக என்று கூறப்படுவதற்கு நமக்கு ஏதாவது பின்னணி இருக்கிறதா? என்று தெரியவில்லை. போதுமான அளவிற்கு அந்தப் புள்ளி விவரம் முழு விவரமாக, சரியாக இருக்கும் என்று நான் நம்ப வில்லை. நான் நம்பாமல் இருப்பதற்காகக் குற்றச்சாட்டாகக் கூட அதைக் கொள்ளவேண்டாம்.

அதேபோல இன்னும் சில புள்ளி விவரங்களிலே ஏற்படுகின்ற குறைபாடுகளை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன்.



தமிழக மருத்துவமனைகளிலே இருக்கின்ற பப்ளிக் ஹெல்த் லேபரட்டரீஸ் பற்றி, பர்ஃபார்மன்ஸ் பட்ஜெட் 1983–84-லே மெடிகல் சர்வீசஸ் அண்ட் பேமிலி வெல்ஃபேர் என்ற அந்தக் குறிப்பிலே 50–வது பக்கத்தில் இருக்கின்றது. அந்தக் குறிப்பைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 50–வது பக்கத்திலே இருக்கின்ற அந்தப் பகுதிகளை நீங்கள் பார்த்தால், பப்ளிக் ஹெல்த் லேபரட்டரீஸ். ஏறத்தாழ அவைகளில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையிலே அதிக வேற்றுமை எங்கேயும் கிடையாது. மெடிகல் ஆபீசர் ஒருவர், லேபரட்டரி டெக்னீஷியன்ஸ் ஆறுபேர், அதர் ஸ்டாஃப் 2 பேர் என்று தலைப்பிலே ஏறத்தாழ ஒரே விதமாகத்தான் இருக்கிறது. திண்டுக்கல்லிலே இருக்கின்ற அந்த ஒரு மருத்துவமனையிலே மட்டும் லேபரட்டரி டெக்னீஷியன்ஸ் 21 பேர் இருக்கிறார்கள். அங்கே நடந்துள்ள டெஸ்ட்ஸ் 4,48,381. ஆகவே அங்கே இருக்கின்ற எண்ணிக்கை விகிதம் சற்று அதிகமாக இருப்பது பொருத்தம். ஆனால் மற்றயிடங்களில் ஒரே அளவிற்கு எண்ணிக்கை உள்ள ஸ்டாப், அதாவது பணியாட்கள் இருக்கின்ற பொழுது வேலூர் மருத்துவமனையிலே 1,63,658 டெஸ்ட்ஸ் ஒரு ஆண்டில் நடைபெற்றிருக்கிறது.

அதே நேரத்தில் இராமநாதபுரம் மருத்துவமனையில் 8,465 தான் நடைபெற்றிருக்கின்றன. 8,465 டெஸ்டு நடைபெற்றிருக்கிறது 158 ரூபாய்—அமௌண்ட் கலெக்டட் அவ்வளவு தான். இங்கே அதிகமான அளவிற்கு நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது உதகமண்டலத்தில். 57,611 பேருக்கு நடைபெற்றிருக்கிறது. 15,480 ரூபாய் வசூலாகியிருக்கிறது கட்டணமாக. ஆனால் எல்லா இடத்திலும் ஏறத்தாழ லேபரட்டரியினுடைய அமைப்பு அங்கே பணியாற்றுகிறவர்களுடைய எண்ணிக்கை ஒரே விதம் தான். ஒரு மருத்துவமனையில் 1,63,000. இன்னொரு மருத்துவமனையில் 4,48,000. ஒரு மருத்துவமனையில் 8,465. இதிலே ஒரு வேளை அங்கே செய்துதரப்பட்ட வசதியில்/கண்காணிப்பில் முறையில்லையா? அல்லது அங்கே நியமிக்கப்பட்டிருக்கிற அந்த அலுவலர்கள் சரியாக பணியாற்றவில்லையா? அல்லது எண்ணிக்கை விதாச்சாரம் எப்படி தவறாக தரப்படுகிறதா என்பதை பரிசீலிக்கவேண்டும். அதுமட்டுமல்ல பொதுவாக மருத்துவமனைகளிலே இருக்கிற எக்ஸ்ரே இலாகா—அவர்கள் எக்ஸ்ரே எடுப்பதிலே கவனமாக பணியாற்றுகிறார்கள் என்று நான் ஒப்புக் கொண்டாலுங்கூட, நீங்கள் தருகிற புள்ளிவிவரம், இன்ன மருத்துவமனைகளில் இவ்வளவு எக்ஸ்ரேக்கள் என்று தருகிறீர்கள். ஒரு நோயாளிக்கு 7,8 முறை எக்ஸ்ரே எடுக்கின்ற நோயாளியும் இருக்கிறார்கள். சில நோயாளிக்கு எக்ஸ்ரே எடுக்கவேண்டிய அவசியமில்லை. எனவே எக்ஸ்ரே எடுக்கப்பட்ட நோயாளிகள் எத்தனை பேர்? எத்தனை நோயாளிகளுக்காக 12,000 எக்ஸ்

ரேக்கள் எடுக்கப்பட்டன? 1,50,000 எக்ஸ்ரே எடுக்கப்பட்டன என்ற விவரம் தரப்படாத காரணத்தால், அந்தப் புள்ளிவிவரங்களைக் கூட ரேஷனலைஸ் செய்வதற்கு—முறைப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு போதுமானதாக இல்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதே போலவே, பொதுவாகவே, பொதுமக்களுக்கு நல்ல வகையிலே கலப்படம் இல்லாத உணவு கிடைக்கச்செய்வது என்பது ஒரு இன்றியமையாத கடமை. கலப்படம் இல்லாத உணவு கிடைக்கவேண்டுமானால் கலப்படங்களை கண்டுபிடிக்கின்ற அலுவலர்கள், நேர்மையோடு, செம்மையாகப் பணியாற்ற வேண்டும். அப்படி பணியாற்றித் தருகின்ற அந்த புள்ளிவிவரத்தைப் பார்க்கின்றபோதுகூட, இத்தனை இடங்களிலே கலப்படங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை எண்ணிக்கை என்ற புள்ளிவிவரம் இருக்கிறதே தவிர, அந்தப் புள்ளிவிவரத்திலே கூட என்னென்ன வகையான உணவிலே கலப்படங்கள், காபிக் கொட்டையிலே கலப்படமா, காபித் தூளிலே கலப்படமா, தேயிலையிலே கலப்படமா, மிளகாயிலே கலப்படமா, அல்லது வெண்ணெயிலே கலப்படமா, என்பது இல்லை. பால் கலப்படம் எனறால் அதிலேதான் எண்ணிக்கை அதிகம் வரும். பால் கலப்படம் கூட இப்போது கொஞ்சம் கஷ்டம். என்ன காரணம் எனறால் தண்ணீர் கிடைக்காது. ஆனால் இந்தப் பால் கலப்படம் வெண்ணெய் கலப்படம் என்று வரும்போது, எந்தெந்த பண்டங்கள கலப்படத்திற்கு அதிகமான வாய்ப்பு அளிக்கின்றன. அந்தக் கருத்து பொதுமக்களுக்குத் தெரியக்கூடிய அளவிற்குக் கலப்படம் 1,743, 18,423 எனற புள்ளிவிவரத்தைத் தருவதைவிட, என்னென்ன வகையான பொருள்கள் கலப்படத்திற்கு இரையாகி இருக்கின்றன. அப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்ற புள்ளி விவரம் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மருத்துவக் கல்வியைப் பெறுத்தவரையில், நான் தெரிவிக்கவிரும்புகறேன். இந்தக் கல்வித்துறை ஆண்டுதோறும் வளர்ந்துவருகிற ஒரு துறை, தேவையின் காரணமாக அவசியம் காரணமாக இந்த மருத்துவக் கல்வித்துறையில், இன்றைய தினம் மிக முக்கியமான ஒரு பணியாக ஐந்து ஆண்டுகாலமாகத் திட்டமிடப்பட்ட ஒரு பணி. புற்றுநோய் சிகிச்சைக்காக—அறிஞர் அண்ணா மருத்துவமனை, காரப்பேட்டையிலே தொடங்கப்பட்ட மருத்துவமனைக்கு, கிளை நிலையங்கள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டு, அதுவொரு வகையிலே ரெபரென்ஸ் ஆஸ்பட்டிலைப்போல அறிஞர் அண்ணா மருத்துவமனை பயன்படுத்தப்படவேண்டும் என்று தொடக்ககாலத்திலே எண்ணப்பட்டு விரிவாக ஆராயப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பொழுது இந்த ஆண்டு



கான்சர் டிரீட்மெண்டுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக இந்த அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது என்று நாம் பார்த்தால், ஒதுக்கியிருக்கிற தொகை சென்ற ஆண்டைவிட அதிகமாகயில்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். புற்றுநோய்க்காக ஒதுக்கி இருக்கிற தொகை கேன்சர் கண்ட்ரோல் ஏறத்தாழ 30,44,0 0, 1983-84 ஆவது ஆண்டில். கடந்த ஆண்டு 1982—83 ஆவது ஆண்டில் கேன்ஸர் கண்ட்ரோல் 44,05.000. கடந்த ஆண்டு 44,00,000 ஒதுக்கினால் இந்த ஆண்டு 54,00,000 ஒதுக்கவேண்டிய அவசியமுள்ள. ஒரு இன்றியமை ாத தவிர்க்க முடி ாத, அந்தத் துறையில் இந்த ஆண்டு 44, 00 0 லிருந்து 30,00 000 ஆக குறைந்திருக்கிறது என்று சொன்னால் கேன்ஸர் கண்ட்ரோலை நீங்கள் எப்படி வெற்றிகரமாக, ஓரளவிற்கு பொதுமக்களுக்குப் பயன படும்படி அதை வளர்த்திருக்கிறீர்கள் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் வேடிக்கை-இந்தத் துறையில் முதலமைச்சருக்கு ஆர்வம் ஏற்படுத்திய குழந்தைகளுக்கு ஆன பல்பொடி வழங்குகிற திட்டம் இருக்கிறதே அது மெடிகல் எடுகேஷன் டிபார்மெண்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'டென்டல் ஹைஜின்' என்ற தலைப்பில் 'பிரீ டிஸ்டிபியூஷன் ஆப் டூத் பவுடர் டு ரூரல் சில்ட்ரன்' 'Free Distribution of tooth powder to rural Children' அதற்கு ஒதுக்கியிருக்கிற தொகை

(பிற்பகல் 12-10)

2,42,43,000. இந்த தலைப்பிலே கொண்டு ஒதுக்கிறபோது மருத்துவக் கல்வித்துறைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று நான் கேட்க விரும்புகிறேன். மருத்துவக்கல்வித் துறையில் குழந்தைகளுக்கு தரப்படுற இலவச பல்பொடிச் செலவு சேரலாமா, இதற்கு இவ்வளவு செலவா, அது வேறு. 2 கோடி, 42 லட்சம் ரூபாய் செலவு செய்து பல்பொடி வழங்குகிற முறை இப்படித் தான் இருக்கவேண்டுமா என்று நான் கேட்பேன். அது வேறு. நீங்கள் வழங்குவது ஒழுங்காக இந்த குழந்தைகளுக்குப் போய் சேருமா, நான் கேட்பேன். ஆனால் மருத்துவக் கல்வித் துறையில் மொத்தம் செலவாவது, மெடிகல் எஜுகேஷன் என்று ஒதுக்கப்பட்டிருக்கிற—ஹாஸ்பிடலுக்கு அல்ல, எஜுகேசனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற, தொகை 8 53,34,000 ரூபாய். Educational Institution not Medical hospital, Under Educationl Institution, என்றவகையில் 8 கோடி ரூபாய் மருத்துவமனைகட்கு ஏறக்குறைய 30 கோடி செலவாகிறது. இந்த 8 கோடி ரூபாய் செலவாகும் நிலையில், 2 கோடி 42 லட்சம் ரூபாய், அல்லது 2½ கோடி ரூபாய்க்கு குழந்தைகளுக்குப் பல்பொடி வினியோகிக்க ஒதுக்கப்பட்டுள்ளது. மருத்துவக்கல்வி இயகுநருக்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? Dental Hygienic's or Dental Specialists அவர்களுடைய ஆலோசனையைப் பெறுவதாக இருந்தால் அரசாங்கத்திற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆலோசனை தருகிறார்கள். இது 'சோசியல் வெல்பேர்' என்று அந்தத்

துறையிலே இது சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். இல்லையானால் பிரைமரி ஹெல்த் சென்டர், கிராம சுகாதாரத்தோடு தொடர்புடைய அந்தப் பகுதியிலே சேர்க்கப்படவேண்டும். ஆனால் இந்தக் கணக்கில் கொண்டு சேர்க்கவேண்டிய அவசியம் என்ன என்பதை நான் கேட்கவிரும்புகிறேன். இன்றைக்கு கேன்சருக்காக நாம் அதிகமான நிதியை ஒதுக்க முடியவில்லை. 30 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் பல்பொடிக்காக அதிகமான தொகையை அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. மக்கள் ஏன் பல்பொடி உபயோகிக்கவேண்டும் என்று நம்மால் அறிவுறுத்திச் சொல்லமுடியும் என்ற நம்பிக்கை உடையவன் நான். ஆனால் கேன்சர் டிரிட்மென்ட்டை பொதுமக்களுக்கு அறிவுறுத்திச் செய்யமுடியாது. அரசாங்கத்தைத் தவிர வேறு கதி கிடையாது. இல்லையானல் அடையாற்றிலேயுள்ள காலம் சென்ற முத்துலட்சுமி அம்மையாருடைய முயற்சியாலே உருவான அந்த கேன்சர் ஆஸ்பத்திரியைப்போல் வேறு யாராவது அவர்களுடைய நல்ல எண்ணத்தாலே உருவாக்கி அதை வளர்த்து இருந்தாலொழிய வேறு வழிகிடையாது. எனவே எதை யார் செய்வது என்ற அந்தப் பிரச்சினைக்கு போனாலும்கூட தத்துவத்திலே ஈடுபட்டதாகச் சிலபேர்கள் வருத்தப்படுவார்கள். நான் சொல்ல விரும்புகிறேன். இதை மெடிகல் எஜுகேசனில் சேர்த்த இருப்பதைவிட ஒரு பொருத்தமற்ற கருத்து எனக்கு தெரிந்தவரையில் வேறு கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, கேன்சர் கன்ட்ரோல் போன்றவை நாளுக்கு நாள் அதிகமான அளவிலே விரிவாகச் செய்யவேண்டிய ஒரு நிலைமைக்கு, ஒரு துர்பாக்கியத்திற்கு நாடு ஆளாகி வருகிறது அப்படி ஆளாகி வருகிறபோது எல்லா மருத்துவமனைகளிலும் நம்மால் செய்ய முடியாவிட்டாலும்கூட கூடுமானவரையில் மாவட்ட மருத்துவமனைகளிலே எல்லாம், அதற்காக ஏதாவது ஒருவகையில் பெரிய மாவட்ட மருத்துவமனைகளில் மட்டுமாவது ஏதாவது நிதி ஒதுக்கி துவக்கி நடத்தப்படவேண்டும். கேன்சர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கிற வேலையை மாவட்ட மருத்துவ மனைகளில் செய்யக்கூடிய ஒரு துறையை ஏற்படுத்துவதன் மூலமாக உடனடியாக அவர்களுக்கு கேன்சர் இருக்கிறதா என்பதைப் பார்த்து அறிவுறுத்தி, அதற்குப்பின்னால் அவர்களுடைய சிகிச்சைக்கு உரிய வழிகாணவேண்டும். அந்த அளவிற்காக மாவட்ட மருத்துவமனைகளில் ஒரு பிரிவை ஏற்படுத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது 'மருத்துவப் பல்கலைக்கழகம்' என்ற அந்தத்தலைப்பிலே நீங்கள் கருத்து தெரிவித்து இருக்கிறீர்கள் மருத்துவப் பல்கலைக் கழகம்



வந்துகொண்டே இருக்கிறது.
கடந்த 4 ஆண்டுகாலமாக ஆராய்ச்சி நிலையமாகவே
இதற்கு இடையிலே மேல்நிலை ஆலோசனை குறுக்கிட்டது.
ஏற்படுத்திவிடலாமா என்ற ஒரு மருத்துவப் பல்கலைக்கழகம்
ஆனால் இப்போது நீங்கள் தெரிவிக்கிற
எற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அலோ
அதேநேரத்தில் இந்த மருத்துவப் பல்கலைக்கழகத்தில் முறை
பதிக்காக-அலோபதி என்பதைக்கூட ஆங்கில மருத்துவ வழக்கிலே
ஆங்கில மருத்துவ முறை என்று நாட்டு மக்கள் என்று
உள்ளவாறு பெயர்த்து இருக்கிறீர்கள். ஆனால் அலோபதி ஒரு
இருப்பதுதான் சிறப்பு ஏன் என்றால், ஆங்கிலத்திலே அலோபதி
அலோபதி முறையும், ஃபிரெஞ்சு நாட்டிலே ஒரு முறையும்
முறையும். ஜெர்மன் நாட்டிலே ஒரு அலோபதி
Allopathy is common to all.
கிடையாது. சொல்கிறபோது மொழி
எனவே ஆங்கில மருத்துவம் என்று அல்ல. தமிழிலேயும்
அடிப்படையிலே வருகிற பெயர் பொருத்தம் மருத்துவப்
அலோபதி என்றுதான் கூற வேண்டும், ஆனால் மருத்துவம்,
பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவம், ஆயுர்வேத பற்றியும்,
யுனானி மருத்துவம் ஆகிய மருத்துவங்களைப் செய்வதற்கான
அந்த பல்கலைக் கழகத்திலே இடம் பெறச் பல்கலைக்கழகத்தி
ஏற்பாடுகள் செய்யப்படுவதாக, அந்தப் இருக்கிறது.
னுடைய வளாகத்தில் அமைப்பதாக ஒரு கருத்து காரணம்
இது ஒரு பெரிய தவறு என்று நான் கருதுகிறேன். முளைக்காது.
புளிய மரத்து அடியிலே வேறு மரம்-செடி எதுவும் செல்வாக்கையும்
அலோபதிக்கு இருக்கிற அளவுகடந்த சூழலில்,
வளர்ச்சியையும் கருதின் தனுடைய சுற்றுப்புற மருத்துவம்,
அதற்கு அடியிலே சித்த மருத்துவம், யுனானி எதுவும்
யுர்வேத மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம் டாக்டர்
வளராது. இன்னும் சொல்லப்போனால் அலோபதியின் நாம்
களின் நிர்வாகத்தில் ஹோமியோபதி முறையை திருமங்கலத்
ஒப்படைத்ததன்விளைவு, துசென்னையிலேயிருந்து ஆண்டுக்குப்
திற்குப் போய் இருக்கிறது. இன்னும் ஒரு 5 கிழக்கே
பின்னால், திருமங்கலத்திலிருந்து தூத்துக்குடிக்கு ஹோமியோபதியினுடைய
போனாலும் போகும். எனவே உணர்வ
அவசியத்தை அலோபதி முறையிலே உள்ளவர்கள் அவரவர்களுக்குக்
இல்லை. அது அவர்களுடைய குற்றம் அல்ல. எண்ணங்கள்
கிடைக்கிற பயிற்சி, படிப்பு, மனப்பான்மைகள், மருத்து
அதன் காரணமாக சித்த மருத்துவம் முதலான பல ஒரு
வத்தின் அருமையை அவர்கள் உணரமுடியாது, ஆகவே மெடிசி
பல்கலைக்கழகம் ஏற்ப கிறபோது, அதுவும் மாடர்ன் பல்கலைக்
னுக்காக என்று ஏற்படுத்துகிறபோது, அந்தப் ஹோமியோபதியையும்
கழகத்தில் இண்டியன் மெடிசனையும் அதற்குத்
இடம்பெறச் செய்தால் அந்தப் பல்கலைக்கழகத்திலே
தகுந்த ஊக்கம் தருவதற்கு வாய்ப்பு இருக்காது.

கோவையிலே இருக்கின்ற விவசாயப் பல்கலைக் கழகத்தோடு வெட்டினரி கல்விப் பகுதியைச் சேர்க்க வேண்டும் என்று மத்திய அரசு விரும்பிய காரணத்தால் கால்நடைக் கல்லூரியையும், கால்நடைக் கல்வியையும் அதோடு சேர்த்ததற்குப் பின்னாலே கால்நடைக் கல்வியின் முக்கியத்துவம் குறைந்து விட்டது என்பது தான் எனக்கும், என்னைப்போன்று அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கின்ற எண்ணமாகும். எனவே, அப்படி ஒரு விபத்து ஏற்படக்கூடும். ஆனால், ஒரு வேளை, நீங்கள் எதைக் கருத்தில் வைத்து இப்படிச் சொல்லியிருக்கலாம் என்றால், எந்தெந்த மருத்துவத்திலே இருந்து, எந்தெந்த முறைகளைப் பயன்படுத்துவது, எந்தெந்த நோய்களுக்கு எந்தெந்த சிகிச்சை வழங்குவது என்பதை ஒழுங்குபடுத்துவதற்காகப் பல்கலைக்கழகம் பயன்படும் என்று கருதி இருப்பீர்கள். பல்கலைக்கழகம் அதற்குப் பயன்படாது. இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில்—இந்தப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தினால்

may be a residential Univesity

அதாவது—அண்ணா பொறியியல் பல்கலைக்கழகத்தைப்போன்று அந்த ஒரு காம்பஸிலே உள்ள கல்லூரியையோ அல்லது சென்னையிலே உள்ள கல்லூரிகளையோ இணைக்கும் பல்கலைக் கழகமாகத்தான் அது இருக்க முடியும். அந்த ஒரு முறையில் தான் வைக்க முடியும். ஆனால்

Intergrated Medical Research Council

ஏற்படுத்துவதன் மூலம் சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம், ஓமியோபதி, இயற்கை வைத்தியம், இன்னும் சொல்லப்போனால் மூச்சுப்பயிற்சியாகும் யோகம் இவற்றைக்கூட சேர்த்து, இணைத்து—அலோபதியில் உள்ள சிறப்பு வாய்ந்த சிலர், மற்ற துறைகளில் உள்ள சிறப்பு வாய்ந்த சிலர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு நியமிப்பதன் மூலமாக

the best thing in each system

எந்தெந்த சிஸ்டத்திலே இருக்கும் மருந்து, எந்தெந்த முறையில், எந்தெந்த நோய்க்கு எவ்வளவு சிறப்பாகப் பயன்படுகிறது என்பதை அறியலாம். தோல் நோய் சம்பந்தப்பட்ட வரையில் வேறு எந்த மருத்துவத்தையும்விட, ஓமியோபதி மருத்துவம் உடனடியாகப் பலன் அளிப்பதாக இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அதேபோல், சில உடல் நோய்களுக்கு சித்த மருத்துவம் செய்கின்ற நன்மையை அலோபதிக் மருத்துவம் செய்வது இல்லை. இன்னும் சொல்லப்போனால், அலோபதிக் மருந்துகளைத் தொடர்ந்து அதிகமாக ஒருவர் 20 ஆண்டுகாலம் பயன்





படுத்திக்கொண்டு வந்தால், அதற்குப் பின்னால் அவருக்கேகூட அது நன்மை செய்ய முடியாத நிலை வந்து விடும். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை இருப்பதால், பல்கலைக்கழகம் என்ற பெயராலே இப்படி ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று இந்த அரசாங்கத்திற்கு எனக்குத் தெரிந்த கருத்தை நான் சொல்லவேண்டும் என்னும் கடமை உணர்வால் நான் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

இந்திய மருத்துவத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சருக்கு அளவு கடந்த அக்கறை இருப்பதாக நான் அறிந்து இருக்கிறேன். ஆனால் அது காரியத்திலே பயன்படவில்லை என்பதை அவர் இருக்கிறபோதே சொல்லிவிடுவது நல்லது என்பது என்னுடைய எண்ணம். ஏனென்றால், இந்திய மருத்துவம் என்று கூறப்படும் சித்த மருத்துவத்தைப் பற்றிச் சொல்கிறபோது, 3 ஆண்டுகாலம், நான்காண்டு காலமாகச் சித்த மருத்துவத்திற்காக இன்னொரு கல்லூரி அமைக்கப் போகிறோம் என்று ஆண்டுதோறும் சொன்னீர்கள். இன்னொரு கல்லூரி அமைக்கப்பட்டதா என்றால் இல்லை. அதை அமைப்பதற்காக இன்னும்கூட

You are yet trying to seleet a location.

இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கடந்த 3 ஆண்டுகாலமாக அந்த மருத்துவக் கல்லூரி அமைப்பது தடைப்பட்டு பாதிக்கப் பட்ட நிலையில் இருக்கிறது. இன்னொரு கல்லூரி ஏற்படும் என்று சொல்லாவிட்டால்கூட பரவாயில்லை. சொல்லி, 3 ஆண்டுகள் ஆகிறது. அது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலிகைத் தோட்டத்தைப் பற்றி 81-வது ஆண்டிலிருந்து 4 ஆண்டுகாலமாகச் சொல்லி வருகிறீர்கள். நான் அறிக்கைகளை வைத்து இருக்கிறேன். அதைப் படித்துப் பாருங்கள். மூலிகைத் தோட்டத்தைப்பற்றி எவ்வளவு தீவிரமாக 1981-லே சொன்னீர்கள். எத்தனை இடங்களில் ஆரம்பிப்பதாகச் சொன்னீர்கள்? 1982—லே இரண்டு இடங்கள் குறைந்தது. 1983-லே மேலும் குறைந்தது. 1984-லே அதற்கு வாரியம் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். என்னைக்கேட்டால், நீங்கள் இங்கே வைத்து இருக்கின்ற அறிக்கைகளைச் சேர்த்துப் பரப்பிப் பார்ப்போமானால் ஒரு மூலிகைத்தோட்டத்தையே நாம் ஏற்படுத்தி விடலாம். அந்த அளவிற்கு மூலிகைத்தோட்டத்தைப் பற்றிச் சொல்லி இருக்கிறீர்கள். மதுரைப் பகுதியில் இரண்டு இடம் என்று சொன்னீர்கள். இந்த ஆண்டு அறிக்கையில் மூலிகைத் தோட்டத்தைப் பற்றி சொல்லி, இரண்டு இடத்தையும்

சொல்லி அதற்காக வாரியம் ஏற்படுத்தி இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். மருத்துவத்துறையில் உள்ள அடிப்படை யான பணிகளைத் தனிப்பட்ட உணர்வோடு கவனித்து செயல் படுத்தினால் தவிர செயல்படுத்த முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நண்பர்கள், தகுதி வாய்ந்தவர்கள் அந்தக்குழுவிலே இருக்கிறார்கள். அவர்க ளிடத்திலே எனக்கு மரியாதை உண்டு. அந்த குழுவிலே இருப்பவர்கள் யோசனைதான் சொல்வார்கள். அவற்றை செயல்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமை. இன்னும் சொல்லப்போனால் 4 ஆண்டு காலமாக அந்த விஞ்ஞானக் குழு— அந்த அறிவியல் குழு—தந்து இருக்கிற அறிக்கையில் ஒவ்வோ ராண்டும் எவ்வளவு சுவடிகள், ஏடுகள் இருக்கின்றன என்ற புள்ளி விவரங்களைத் தந்து இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

(பிற்பகல் 12-20)

திரும்பத் திரும்ப அதே புள்ளிவிவரம்தான் வந்திருக்கிறது. முன்னால் 499 என்று இருந்தது இப்போது 501 என்று வந்திருக் கிறது; இரண்டே இரண்டு உயர்ந்திருக்கிறது. புள்ளிவிவரம் இருக்கிற பக்கம் மாறியிருக்கிறது. அதை எல்லாம் படிந்துக் காட்டி நான் உங்களுடைய நேரத்தைச் செலவிட விரும்பவில்லை. நான்கு ஆண்டுகளாக வந்திருக்கிற அறிக்கைகள்தான் இவை. வேண்டுமென்றால் தொடர்புகள் முன்பின் மாறியிருக்கலாம். நான் யாரையும் குறை சொல்லவில்லை; சித்த மருத்துவத்தின் கதி அவ்வளவுதான்.

சித்த மருத்துவத்தை வளர்க்கவேண்டுமென்று சொல் கிறார்கள்; வளரவில்லை. அமைச்சரிடத்திலே எனக்கு மாறு பட்ட கருத்து இல்லை. அவர்கள் புரிந்துகொண்டு கெடுதல் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. சித்த வைத்தியத் திற்கு என்று தனியாக ஒரு அமைச்சரை நியமித்தால்கூட அதிலே தவறு இல்லை. இன்னும் 10, 15 ஆண்டுகளுக்குள் தீவிர கவனம் செலுத்தி வளர்த்தால்தான் இந்தச் சித்த வைத்தியம் வளரும். இல்லை என்றால் இன்னும் 25 ஆண்டுகளில் இந்தச் சித்த வைத்தியம் பயிற்சியின்றி மறைந்துவிடும். நான் இப்படிச் சொல்வது தமிழ் அழிந்து விடும் என்று சொல்வதுபோல இருக்கிறது என்று நீங்கள் கருதலாம். அப்படியல்ல. இது மறைந்துவிட்டால் பின் யாராலும் இந்த முறையினைக் காப் பாற்ற முடியாது.



சித்த மருத்துவத் துறையில் நல்ல கவனம் செலுத்தி, வளர்க்க முற்பட்டால் நல்ல பலன்கிடைக்கும் வாய்ப்புஇருக்கிறது. ஏறத்தாழ 20 ஆண்டு காலமாக மற்ற முறைகளிலே கண்டுபிடிக்க முடியாத மருந்துகள்கூட, உலகத்திலேயே எங்கும் கண்டுபிடிக்கப் படாத மருந்துகள்கூட, ஒருவேளை இந்தச் சித்த மருத்துவத் தினால் கண்டுபிடிக்கப்படும் வாய்ப்பு ஏற்படும். அதற்கு தனிக் கவனம் செலுத்தினால் தவிர உரிய பலன் கிடைக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். வீரப்புலிக்காட்டிலே ஏற்படுத்த வேண்டிய மூலிகைத்தோட்டம் பற்றி எல்லாம் சொன்னார்கள். அது வந்துவிடும் என்று எதிர்பார்த்தேன். அந்த வீரப்புலிக்காட்டு மூலிகைத்தோட்டம் பற்றி இப்போது நம்பிக்கை ஊட்டும் செய்தி எதுவும் இல்லை. மூலிகைத் தோட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போது பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்தியன் மெடிசின் துறையினரான சித்த மருத்துவ டாக்டர்கள் என்று சொல்லக்கூடிய இரண்டு பேர் அதிலே இடம் பெற்றிருக்க வேண்டும். சித்த வைத்தியத்தில் எம்.டி. பட்டம் பெற்றவர்கள் அல்லது எம்.ஐ.எம். படித்தவர்கள் ஒருவர்கூட இடம் பெறவில்லை. ஆகவே, சித்தமருத்துவத்தின் நோக்கத்தில் செயற்பட அதிலே ஒருவரும் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக் கிறது.

அதைப்போன்று பாளையங்கோட்டையில் இருக்கிற ஒரே கல்லூரியிலும் போஸ்ட் கிராஜுவேட் வகுப்புகள் நடத்தும் இரண்டு ஆசிரியர்கள் பதவி இன்னும் நிரப்பப்படவில்லை, காலி யாகவே இருக்கின்றன. அதைப்போன்று துணை ஆசிரியர்கள் 2, 3 பேர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை.

இன்னும் சொல்லப்போனால், எம். டி. படித்தவர்கள் இருக்கும்போது அங்கே பி.ஐ.எம். படித்தவர்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள், எம்.டி. படித்தவர்கள் இல்லை என்றால் கிராஜுவேட்டை நியமிக்கட்டும்; வேண்டாம் என்று சொல்ல வில்லை, ஆனால் எம்.டி. படித்தவர்கள் விண்ணப்பம் போடு கிறார்கள். அவர்களை எடுக்காமல் பி.ஐ.எம். கிராஜுவேட்டை எடுக்கிறார்கள். எனக்கு தனிப்பட்ட முறையில் யார் மீதும் அக்கறையில்லை. அதிகமாக படித்தவர்களைத்தான் சித்த மருத்துவத்தைப்பற்றி ஓரளவுக்காவது எடுத்துச்சொல்ல முடியும். ஆகவே, போஸ்ட் கிராஜுவேட் இருக்கும்போது அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் சில குறைகளைச் சொல்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பாடபுத்தகங்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆண்டுக்கு கிட்டத்தட்ட 25 புதிய புத்தகங்களையாவது எழுதி வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பெரும்புலவர் கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதிய ஆங்கில நூல் அண்மையில் தமிழில் வெளியிடப்பட்டிருக்கிறது. வெளியிடுவதாகச் சொல்வது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்; ஆனால் இப்போது தான் வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் அப்போதே சொன்னேன். அந்தப் புத்தகத்தில் இரண்டு பிரதிகளை இந்து பத்திரிகை, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளுக்கு அனுப்பி, அவர்களை ரிவியூ எழுதச் சொல்லுங்கள் என்று அப்போதே சொன்னேன். பத்திரிகைகளிலே ரிவியூ வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆனால் அந்தப் பத்திரிகைகளுக்கு பிரதிகள் அனுப்பியதாகத் தெரியவில்லை, ரிவியூவும் வரவில்லை. இனிமேலாவது இரண்டு புத்தகங்களை அனுப்பி ரிவியூ எழுதச் சொல்லுங்கள், அப்படிச் செய்தால்தான் உலகம் முழுவதற்கும் சித்த மருத்துவம் பற்றியத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்னும் கொள்கையை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் பி.ஐ.எம். படித்த டாக்டர்கள் இருக்கும்போது - கடந்த ஆண்டு ஜனவரியிலும் இந்த ஆண்டிலும் வெளிவந்தவர்கள் 37 பேர் இருக்கிறார்கள்- அவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு மீதி இடங்களுக்குத்தான் சர்டிபிகேட் பெற்றவர்கள் பட்டயம் பெற்றவர்களை நியமிக்க வேண்டும். இல்லை என்றால் பட்டம் பெற்றவர்கள் பாதிக்கப்படுவார்கள். அண்மையில் அரசாங்க அறிக்கையில் பட்டம் பெற்றவர்களையும் பட்டயம் பெற்றவர்களையும் நியமிக்கப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பட்டம் பெற்றவர்களை முதலில் நியமித்துவிட்டுப் பட்டயம் பெற்றவர்களை, தகுதி சான்று பெற்றவர்களையும் அதற்குப் பின்னாலே நியமிக்க வேண்டும்.

தகுதி சான்று பெற்றவர்களை, நியமிக்கும்போது மாதம் அவர்களுக்கு 250 ரூபாய் சம்பளம் அல்லது ஊதியம் என்று இருக்கிறது. இது போதாது. மாதம் 250 ரூபாய் ஊதியம் என்று சொல்லும்போது, ஒரு நாளைக்கு அவர்கள் 4 மணி நேரமாவது மருத்துவமனையில் செலவிட வேண்டுமென்றால் அவர்களுக்கு இந்தச் சம்பளம் போதுமா என்பதைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும்.



இன்றும் சித்தா பார்மஸி போன்ற படிப்புகளுக்கு 30 ரூபாய் தான் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இது மாதிரி சில இடங்களில் நடக்கக்கூடிய செலவு குறைவு. அதிலே நடைமுறைப்படுத்துவதிலே ஏற்படக்கூடிய அந்தக் குறைகளை அவ்வப்போது கவனித்துத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் முன் வந்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மருத்துவ ஆய்வுக் கூடம் விற்பன்னர் சங்கம் என்ற சங்கத்தின் சார்பில் கோரிக்கை தெரிவித்துள்ளன ஆய்வுக்கூட விற்பன்னர்கள்—லேபரட்டரி டெக்னிஷியன்ஸ் ஏறத்தாழ 1000, 1500 பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு 3-வது ஊதியக் குழுவிலே உயர்த்த வேண்டிய விகித சம்பளம் வகுக்கப் படவில்லை. எஸ். எஸ். எல். சி., பி. யு. சி. படித்ததற்கு மேல் 1 ஆண்டு அல்லது 2 ஆண்டுகள் டெக்னிகல் டிரையினிங் எடுத்து விட்டு டெக்னீஷியன் பணிகளுக்கு வந்திருக்கும் அவர்களுக்குத் தரப்பட வேண்டிய அளவுக்கு சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை, குறைந்திருக்கிறது. குறைந்திருப்பது அதிகரிக்கப்படவேண்டும் என்று கேட்டு அவர்கள் 3 முறை 4 முறைகள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஒன்றும் செய்யவில்லை.

அவர்களுக்கு 300 ரூபாய் சம்பளத்திலே ஸ்கேல் தொடங்குகிறது. அவர்களுக்கு வாழ்விலே வேறு எந்தவிதமான அதிக வருமான மும் வர வாய்ப்பு கிடையாது. செலக்ஷன் கிரேடு என்று கொடுக் கப்பட்டிருந்தாலும், அவர்களில் பெரும்பாலோர் 20 ஆண்டுகள், 18 ஆண்டுகள் என்று முன்னரே வேலை பார்த்திருக்கிற காரணத் தால், அதற்கான ஊதிய உயர்வு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அரசாங்கத்திலே அவர்களுக்கு வேறு புரொமோஷன் வாய்ப்பும் கிடையாது. கிட்டத்தட்ட 22 ஆண்டுகள் லேபரட்டரி டெக் னிஷியன்களாக பணியாற்றிவிட்டு, எந்தவித புரொமோஷனுக்கும் வழியில்லாமல் உள்ளனர். அதுவும் அந்த லேபரட்டரியில் அவர்கள் உபயோகிக்கிற மருந்துப் பொருள்களோ நச்சுப் பொருள்கள் — அதனாலே கூட அவர்களுடைய உடல் நலம் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே அவர்களது குறைகளைக் கவனித்து, ஸ்பெஷல் கிரேடு கொடுத்து ஊதிய உயர்வு நிர்ணயம் செய்து, ஏதாவது அவர்களுக்கு வழி செய்தால் தவிர, லேபரட்டரி டெக்னிஷியன்களாக அவர்களுக்கு வேறு எந்த முறையிலும் தகுந்த ஊதியம் வர முடியாது. ஆகவே அதனை அரசு செய்ய வேண்டும். இது போன்று, பல துறையினரின் குறைகளையும் நிவர்த்திப்பதில் அரசுக்கு அக்கறை இருக்க வேண்டும். ஆகவே, அந்த முறையில், இந்த மருந்து ஆய்வுக் கூட விற்பன்னர்களின் சங்கத்தின் வேண்டுகோளை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட பணித் திட்டங்களைக் கூட இந்த அரசு பல இடங்களில் நிறைவேற்றத் தவறி விடுகிறது. அரசாங்கம் முதலிலே ஏற்றிருந்தது இது. ஒரு ஊர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து டவுன் ஷிப்பாக மாறிவிடுமே ஆனால், அந்த இடத்திலிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அந்த ஒன்றியத்திலேயே இன்னொரு இடத்தில் அமைத்துவிட்டு டவுன்ஷிப் பகுதியிலேயே அரசு மருத்துவமனையை ஆரம்பிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நீண்ட நாள் கொள்கை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், ஆவடியிலே இருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின டவுன்ஷிப்பாக அந்தப் பகுதி ஆகிவிட்ட காரணத்தால், அங்கு 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அந்த இடத்திலே ஏற்படுத்தப்படும் என்று அறிவித்து, அது இன்னும் செயல்படுத்தப் படவில்லை. அங்கேயிருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை பூந்தமல்லி பகுதியிலிருக்கும் நேமம் என்ற ஊரிலே வைக்க வேண்டும் என்று கேட்டு, அதுவும் இன்றும் இது நாள் வரையில் நிறைவேற்றப்படவில்லை.

எந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றாலும், அரசாங்கம் சில முறைகளைக் கையாண்டு, அதன் அடிப்படையில் மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமே தவிர, முறைப்படி செய்யாமல், விருப்பப்படி செய்வது என்பது—அமைச்சர் அவர்களின் விருப்பப்படியோ, அல்லது இயக்குனர் அவர்களின் விருப்பப்படியோ, காரியங்களைச் செய்வார்கள் என்கிற முறை இருக்குமேயானால்-அது குறைகளையும், மனவருத்தங்களையும்தான் அது மக்களுக்கு ஏற்படுத்தும்.

அதேபோல இன்னொரு கருத்தினையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொழுநோயாளிகளுக்காக அமைக்கப்பட்ட மறுவாழ்வு இல்லங்களிலே இருப்பவர்களை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டுகளிலே கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்கள் மறுவாழ்வு இல்லங்களிலே இடம் பெற்றிருந்தார்கள். அப்படி 5000 பேர்கள் இடம் பெற்றிருந்த அந்த மறுவாழ்வு இல்லங்களில் நான் புள்ளி விவரத்தோடு சொல்ல வேண்டும் என்றால் ஏறத்தாழ 4,000 பேர்கள் அல்லது 3,800 பேர்களே இப்போது இடம் பெற்றிருக்கிற அளவுக்கு அந்த எண்ணிக்கை தற்போது குறைந்து போய்விட்டது. அந்த மறுவாழ்வு இல்லங்களிலே உள்ளவர்களுக்கு, உணவுக்காக ஒதுக்கப்பட்ட தொகையும் கூட மிகவும் குறைவாக இருக்கிறது.

அந்த மறுவாழ்வு இல்லங்களிலே வாழ்கிற அந்த நோயாளிகள் கடந்த 81 வது ஆண்டிலே மொத்தம் 3,526 பேர்கள் இருந்



தார்கள். இப்போது 3,137 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் 4,250 பேர்களுக்கு உண்டான இடம் அதிலே இருக்கிறது.

அவர்களுடைய உணவிற்காகச் செலவழிக்கப்படுகிற தொகை கூட 2·30 காசு என்ற அளவுதான்—உணவும் மற்றச் செலவுகளும் அதில் அடங்கி விடுகின்றன. ஆனால் அவர்கள் அங்கே உழைக்கிறார்கள். அங்கே அவர்கள் பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்கிறார்கள் என்ற விவரம் இதிலேகொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பண்டங்களின் மதிப்பு எவ்வளவு என்று அந்த எஸ்டிமேட் அல்லது விலை மதிப்பீடு இதிலே தரப்படவில்லை. அவர்கள் உற்பத்தி செய்வது உணவு தானியங்களாக இருக்கலாம், துணி மணிகளாக இருக்கலாம், காய்கறிகளாக இருக்கலாம், பொம்மைகளாக இருக்கலாம், வேறு சாமான்களாக இருக்கலாம். ஆனால் அவைகளுக்கு மதிப்பீடு தரப்படவில்லை. ஆனால் அதற்காகச் செலவழிக்கின்ற தொகையாக பட்ஜெட்டிலே, இந்த ஆண்டு, 71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அந்த 71 லட்சத்திலே, அவர்களது உழைப்பால் திரும்பப் பெறக்கூடிய தொகை குறைந்தது 20 லட்சம் ரூபாயாவது இருக்க வேண்டும். அவர்களால் உற்பத்தி செய்யப்படுகிற பண்டங்களுக்கான விலை அல்லது அதன் வருமானம் எவ்வளவு என்பது குறித்து எந்த விதக் குறிப்பும் தரப்படவில்லை. அத்தோடு, அவர்களுக்கு உணவு மற்றும் பல வசதிகளுக்காக செலவழிக்கப்படும் அந்த 2.30 காசு தொகையைக் கூட உயர்த்த வேண்டும் என்கிற நிலையில் அரசாங்கம் ஒரு சமயம் அறிவித்துவிட்டு பின்னர் அதை 2,3 மாதங்களுக்கு முன்பு நிறுத்தி விட்டதாக அவர்கள் குறைபடுகிறார்கள். இது போன்ற காரணங்களினால் தொழு நோயாளிகள் அங்கே தங்குவதற்கு விரும்பவில்லை. தொழு நோயாளிகளே நாட்டில் இல்லையா என்று கேட்டால், தொழு நோயாளிகள் ஆயிரக் கணக்கில் பிச்சைக்கார நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த மறுவாழ்வு இல்லங்களுக்கு வருவதை, அங்கு இருப்பதை விரும்பவில்லை என்று தான் கூற வேண்டும். ஆகவே, அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி, அவர்களுடைய குறைகள் கவனிக்கப்படாத நிலையில் அவர்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டும். அரசு ஏற்கெனவே அறிவித்த சலுகையை நிறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, அரசாங்கம் எப்படி மறுவாழ்வு இல்லங்களை அமைத்து, தொழு நோயாளிகளைக் கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறதோ அதே போல, இன்னும் சொல்லப் போனால்,

அதற்குச் சற்றும் குறையாத அளவு அக்கறை கொண்டு தனியார் மருத்துவ மனைகள் சில அந்த தொழுநோயாளிகளை கவனித்து வருகிறது. கிறிஸ்தவ பாதிரிமார்களும், சகோதரிகளும் இவர்களுக்கென தனியாக மருத்துவ மனைகளை தமிழகத்தில் 10, 15 இடங்களில் நிறுவி ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட 500, 1000 பேர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்துவருகிறார்கள்.

(பிற்பகல் 12-30)

நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே செலவு அதிகமாகிவிட்டது என்று சொல்லி வருத்தப்பட்டு இதை எல்லாம் யார் கவனிப்பது என்று கேட்பார்கள். நான் முதலமைச்சருக்குச் சொல்கிறேன், தொழு நோயாளிக்கு ஒரு ஆளுக்கு ஒரு மாதத்திற்கு 25 ரூபாய்தான் என்னும் வகையில் அந்த மருத்துவமனைக்கு நாம் உதவி செய்கிறோம். ஏற்கெனவே 20 ரூபாயாக இருந்தது. அது பத்தாண்டுகளுக்கு முன்பு 25 ரூபாயாக ஆக்கப்பட்டது. குழந்தைகளுக்குப் பன்னிரண்டு ரூபாய்தான் தரப்படுகிறது. 12 ரூபாயிலே என்ன செய்ய முடியும்? 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையில் செலவாகும். அதைப்போன்று நோயாளிக்கு 70 ரூபாய் செலவாகும். இவ்வளவு ரூபாய் செலவாகின்றபோது அவர்கள் வெளிநாடுகளில் இருந்து உதவி பெற்றுச் செய்கிற காரியமாவதால் அவர்கள் நோயாளிகளின் எண்ணிக்கையினைக் குறைத்து விடுவதைத் தவிர வேறு வழி கிடையாது. தொழு நோயாளியைக் காப்பாற்றி சிகிச்சை வழங்கி அவர்களை நல்ல முறையிலே மனிதத் தன்மையோடு நடத்தவேண்டும் என்றால் இந்த கேபிடேஷன் ஃபி என்று சொல்லப்படுகின்ற அந்த உதவித் தொகையினை 25 ரூபாய் என்று வழங்கப்படுவதை மாற்றி 35 ரூபாய் அல்லது 40 ரூபாய் என்று ஆக்கினால்தான் நோயாளிகளை நல்ல முறையில் கவனிக்கமுடியும். அப்படி செய்தால் அதுவும் நம்முடைய சமூகத்திற்குக் கிடைக்கின்ற பலன்தான். எனவே அந்த வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி மாற்றவில்லை என்றால் வெளிநாட்டிலே இருந்து வந்து அந்தப் பணியினை அவர்கள் செய்வதில் ஊக்கம் இழந்துவிடுவார்கள். பிறகு அந்தப் பொறுப்பும் நம்முடைய சமூகத்தின் தலையிலேதான் விழும் எனவே அது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை வைப்பதற்குப் பல்வேறு முறைகள் இருக்கின்றன. அதிலே அஜீடேஷனும் ஒன்று. அப்படிப் பல துறைகளைச் சார்ந்தவர்கள் போராட்டம் என்று அறிவிக்கிறார்கள். மக்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால் அவற்றை எல்லாம் அனுதாபத்தோடு கவனிக்கின்ற மனப்பான்மை இருக்கவேண்டும். அப்படிப் பொதுமக்கள் குடிக்கப்



போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லி பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஊர்வலம் போனார்கள். அப்படிக் குடிநீர் கிடைக்கவில்லை என்று சொல்ல ஊர்வலம் போகின்றபோது, சரி கவனிக்கலாம் என்று சொல்வதற்குப் பதிலாக மக்கள் மன்றம் என்ற பெயரில் சுவரொட்டி ஒட்டி இருக்கிறார்கள். அதிலே வீராணம் திட்டத்திலே கொள்ளை அடித்துச் சென்னை நகருக்கு குடிதண்ணீர் வராமல் தடுத்த குடிகேடர்கள் வருகிறார்கள், உஷார், உஷார் என்று எழுதப்பட்டிருக்கின்றது. போன ஞாயிற்றுக்கிழமை ஒரு பேரணி நடந்தது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஒரு பேரணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மக்கள் மன்றத்தின் சுவரொட்டி அந்தப் பேரணிக்குப் பொருத்தமாக இருக்கின்றது. 'வீராணம் திட்டத்தில் கொள்ளை அடித்த' என்று இருக்கின்றது. கொள்ளை இல்லை என்று சர்க்காரியா கமிஷனால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. 'பீசிபிளிட்டி ஆர் நாட்' என்ற வகையில் அதில் வேண்டுமானால் கருத்து மாறுபாடு கொள்ளலாம். எனவே அப்படிக் கொள்ளை அடித்தார்கள் என்பது மறுக்கப்பட்டு இருக்கின்ற நிலைமையில 'கொள்ளை அடித்த' என்று சொல்வது அர்த்தமற்றுப் போகின்றது. 'சென்னை நகருக்கு குடிநீர் வராமல் தடுத்த குடிகேடர்கள்' என்று இருக்கின்றது. நான் உங்களைக் கூட அந்த வகையில் குற்றம் சொல்ல முடியும். ஆனால் உங்களைக் குடிகேடர்கள் என்று சொல்ல மாட்டேன், ஏனென்றால் நீங்கள் குடியை வளர்த்தவர்கள். எனவே குடிகேடர்கள் என்ற கருத்துக்கு இடம் இல்லை. ஆனால் இப்படி எல்லாம் செய்வதன் காரணமாக மக்கள் ஏதோ ஒரு மயக்கத்திற்கு ஆளாகி உண்மையைப் புரிந்துகொள்ளாமல் போவார்கள் என்று கருதக்கூடாது. நான் உங்களைக் குற்றம் சாட்டவில்லை. குற்றம் சாட்டுவது என்றால் எத்தனையோ குற்றத்தைச் சாட்ட முடியும். எத்தனையோ குறைகளைச் சொல்லலாம். எத்தனையோ தவறுகளை நான் சொல்லலாம். நீதிமன்றத் தீர்ப்புக்களைச் சொல்லலாம். ஆனால் அது என்னுடைய நோக்கம் அல்ல. இந்தத் துறை மக்களுக்குப் பயன்படவேண்டும் என்றால் நான் சொன்ன இந்த ஆலோசனைகளைக் கேட்டு குறைகளைத் திருத்திக் கொள்வதற்கு, மாற்றிக் கொள்வதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு முன் வரவேண்டும். இன்னும் சொல்லப்போனால் It is more based on service than distribution of any medicine or any other things மக்களுக்குத் தரப்படுகின்ற எந்த மருந்து அல்லது பொருளையும் விடத் தொண்டு அடிடபடையிலே இதனுடைய யுட்டிலிட்டி இருக்கின்றது. எனவே அந்தத் தொண்டினை ஊக்கத்தோடு நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அவ்வப்போது செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதன்மூலமாகப் பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது வேளாண்மைப் பல்கலைக் கழகத்தோடு கால்நடை மருத்துவக் கல்லூரிகளை இணைப்பதால் கால்நடைக் கலலூரியின் தரமும் முக்கியத்துவமும் குறைந்து விடுகின்றது என்று குறிப்பிட்டார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக பேராசிரியர் அவர்கள் இருந்த போது அவருடைய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர்தான் இருந்தார். அப்போது நாங்கள் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி மாணவர்கள் எல்லாம் போராட்டம் நடத்தியபோது எங்களைச் சிறையில் அடைத்தது மட்டுமல்லாமல் எங்களை அவதிக்கு ஆளாக்கியதோடு வேளாண்மைப் பலகலைக் கழகத்தோடு, கால்நடை மருத்துவக் கல்லூரியை இணைத்தாலதான் நன்றாக இருக்கும் என்று சொன்னவர்கள் அவர்கள். இப்போது 8 ஆண்டுகள் கழிந்த பிறகு தரம் குறைந்து விடுகின்றது என்று அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். தரம் குறைந்துவிடும் என்று சுட்டிக் காட்டி நாங்கள் போராட்டம் நடத்தியபோது எங்களைச் சிறையில் அடைத்தவர்கள், நீங்கள் அதை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள், மாற்றுக் கருத்து சொல்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகிற தெளிவுபெற்றிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் உண்மை என்னவென்றால், வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை மத்திய அரசு ஒப்புக் கொள்ளவேண்டும் என்றால் கால்நடை மருத்துவக் கல்லூரியும் அதிலே ஒரு பகுதியாகச் சேர்க்ப்பட்டால்தான் முடியும். அப்போது தான் பல்கலைக் கழகத்தை ஒத்துக்கொள்ள இசைவார்கள் என்ற நிலைமை இருந்தது. அப்போது வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே வெட்டர்னரி பகுதிக்கு தனி உரிமைகளும் சிறப்புகளும் வழங்கவேண்டும் என்று வற்புறுத்திப் பார்த்தோம். அந்த முடிவு ஏற்கப்பட்டபோது அப்போது நான் அந்தத் துறையில் அமைச்சராக இல்லை என்று நினைவு இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அதனுடைய மொத்த விளைவு கால்நடைக் கல்வியின் தனித்தன்மை, முக்கியத்துவம் குறைந்துவிடுகின்றது என்று தான் கால்நடை துறையைச் சேர்ந்தவர்கள் கருதுகிறார்கள், அதையே நான் இங்கு குறிப்பிட்டேன். ஆனால் அந்தக் கருதது ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான காரணம் நான் ஏதோ தவறு செய்து விட்டதனால் என்பதாக இருந்தால்கூட, நான் ஒன்றும் அதை மறைக்கமாட்டேன். தவறு செய்தால் அதைத் திருத்தக் கொள்ளக்கூடியவன் நான். வேறு சிலரைப் போல அல்ல.



கால்நடைக் கல்வியை, சென்னையிலுள்ள 'வெட்டர்னரி காலேஜ்' நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்ட கல்லூரியைக் கூட தனியாக இயங்க முடியாமல் அந்தப் பல்கலைக் கழகத்தில் இணைக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அதை நிர்வாக முறையில் இணைப்பதாகச் சொல்லி ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அதனுடைய ஸ்பெஷல் இம்பார்டென்ஸ் தனி முக்கியத்துவம் குறைந்து போய்விட்டது என்றுதான் அனுபவத்திலே பலரும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது 30 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி துணைத்தலைவர் உட்பட எல்லோரும் நல்ல அரிய பல கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மானியத்தை பொறுத்த வரையில் எனக்கு மெத்த மகிழ்ச்சி அளிப்பதே தங்களுடைய தொகுதிக்கு குடிநீர் திட்டம் வேண்டும், இந்த ஊருக்கு குடிநீர் திட்டம் வேண்டும். வறட்சியாக இருக்கிறது. மழை பொழியவில்லை. இந்த நேரத்தில் அரசு துரிதமாக வேலை செய்யவேண்டும் என்று நல்ல பல ஆலோசனைகளைத் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கினார்கள், வேண்டுகோள் வைத்தார்கள். எனவே பாராட்டக்கூடிய அம்சம் என்ன என்றால் 2 ஆண்டுகளாக மழை பொழியவில்லை. மழை பொழியாத காரணத்தால் தண்ணீர் இல்லை. எனவே தண்ணீர் இல்லாத நேரத்தில் 'சர்பேஸ் வாட்டர்' பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை எடுத்து இந்த அரசு தரவேண்டும் என்று ஒரு வேண்டுகோளை வைத்தார்களே தவிர அரசு தவறிவிட்டது என்ற பெரிய குற்றச்சாட்டை யாரும் வைக்கவில்லை. எனவே இந்த அரசின் சார்பாக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், உண்மையை உணர்ந்ததற்காக. இங்கே உங்களுக்கு கொடுக்கப்பட்ட கொள்கை அறிக்கையை நன்றாக எல்லோரும் படித்து தான் அதன் மீது தாங்கள் எல்லோரும் பேசியிருக்கிறீர்கள். இதற்கு பின்னால் இந்த அரசு எடுத்து இருக்கிற நடவடிக்கையை நான் சொல்வதன் மூலமாக பரவாயில்லை, 'அட்வர்ஸ் கண்டிஷனிலேயும்' இந்த அரசு சிறப்பாக பணியாற்றி இருக்கிறது, பாராட்டலாம் என்று சொல்லி தாங்கள் எல்லோரும் சபை கலையும்போது இங்கேயிருந்து செல்வீர்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே குடிநீர் கொடுப்பதற்கு குடியிருப்புகளை 6 வகையாக பிரித்து இருப்பதை கொள்கை அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். அதிலே 6-வது வகை என்பது போதுமான அளவுக்கு நல்ல குடிநீர் இருக்கக்கூடிய கிராமங்கள் என்று பெயர், மாண்பு

மிகு உறுப்பினர்கள் பலர் 6-வது வகையில் இருப்பதை 3-வது வகையாக மாற்றவேண்டும். கணக்கு எடுத்தது சரியல்ல. குடிநீர் போதுமான அளவுக்கு இருக்கிறது, ஆண்டு பூராவும் இருக்கிறது என்று எந்த எந்த ஊர்களை நீங்கள் குறிப்பிட்டீர்களோ அவைகள் எல்லாம் அப்படி இல்லை என்று சொன்னதை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசு பிறர் சொல்வதற்கு மதிப்பு கொடுக்கக் கூடிய அரசு என்ற காரணத்தால் மறு பரிசீலனை செய்து 6-வது வகையில் இருக்கும் குடியிருப்புகளிலிருந்து 14,091 குடியிருப்புகளை வகை மாற்றம் செய்து இருக்கிறது. 6-வது நிலையில் இருந்து இருக்குமானால் இப்போது குடிநீர் கொடுப்பதற்குவேண்டிய எந்த நடவடிக்கையும் இந்தஅரசு எடுக்க வேண்டிய நிலையில் இருக்காது. ஏன் என்று சொன்னால் 6-வது வகை என்று சொன்னால் போதுமான அளவுக்கு தண்ணீர் ஆண்டு பூராவும் இருக்கிறது என்று பொருள். அப்படி இல்லை என்று நீங்கள் சொன்னவுடனே, இல்லை இல்லை நாங்கள் எடுத்த கணக்கு தான் சரி, நீங்கள் என்ன சொல்வது, நாங்கள் என்ன கேட்பது என்ற ஒரு மனப்போக்கில் எடுத்துக் கொள்ளாமல்

'In a most democratic way''

மிக ஜனநாயக முறையில் இந்த அரசு நீங்கள் சொன்னதை கவனித்து 14, 91 குடியிருப்புகளை வகை மாற்றம் செய்து அவைகளுக்கு எஸ்.எம். பி.லேயும் மற்ற வகையிலேயும் குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் காண மாண்புமிகு உறுப்பினர்கள் மெத்த மகிழ்ச்சி அடைவார்கள் என நான் கருதுகிகிறேன்.

(பிற்பகல் 12.40)

1,255 புது குடியிருப்புக்களையும் நாங்கள் சேர்த்து இருக்கிறோம். ஆறு வகையைப் பார்க்கிற போது எந்தெந்த வகை குடியிருப்புகள் விடப்பட்டிருக்கின்றன, இங்கே தண்ணீர் இருக்கிறது என்று சொல்கிறீர்கள், ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளே என்று சொல்கிறீர்கள், வெளியே தான் இருக்கிறது என்றெல்லாம் சொன்னதை மனத்திலே வைத்து 1,255 குடியிருப்புக்களைச் சேர்த்து இருக்கிறோம். நான் இதை சொல்வதற்குக் காரணம் இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினர்களும் மக்களும் சொல்லக்கூடிய முறையீடுகளுக்கு ஆலோசனைகளுக்கு எவ்வளவு மதிப்பு தருகிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் புள்ளி விவரத்தை எடுத்துச்சொன்னேன்.

கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்காக எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வது சரி என்று கருதுகிறேன். 1977-78 இல் 1,140 குடியிருப்புகளுக்கு 2.94 லட்



சம் மக்களுக்கு 715லட்ச ரூபாய் செலவு செய்து தண்ணீர் கொடுத்திருக்கிறோம். 1978-79 இல் 1404 குடியிருப்புகளுக்கு 7.44 லட்சம் மக்கள் பயன் அடையக்கூடிய வகையில் 860 லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறோம். 1979-80 இல் 921 குடியிருப்புகளில் வாழ்கிற 3.81 லட்சம் மக்களுக்கு 1,022.31 லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறோம். 1980-81 இல் 2,300 குடியிருப்புகளில் 11.49 லட்சம் மக்கள் பயன் அடையக் கூடிய அளவுக்கு 1,807 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். 1981-82 இல் 3,875 குடியிருப்புகளுக்கு 15.60 லட்ச மக்கள் பயன் அடைகிற முறையில் 3965.23 லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறோம். 1982—83 இல் 3,191 குடியிருப்புகளில் வாழக்கூடிய 9.57 லட்சம் மக்களுக்கு 1096.70 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். ஆகமொத்தம் 11,466.56 லட்சம் ரூபாய் இதற்காக செலவு செய்திருக்கிறோம். 114 கோடி ரூபாய். எவ்வளவு பெரிய தொகை என்பதை அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு குடிநீர் கொடுக்க இவ்வளவு செலவு செய்யப்பட்டு உள்ளது. 1981—82, 1982—83 இதைத்தவிர வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவைகளுக்குத் தனியாக குடிநீர் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மேலும் வறட்சி நிவாரணப் பணிக்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் அத்தனையும் குடிநீர் கொடுப்பதற்கே செலவு செய்யப்படும் என்பதையும் குடிநீர் கொடுப்பதற்காக இன்னும் தேவையென்று சொன்னால் அதைத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைபம்பு மின்விசை கருவிகள் இவைகளையெல்லாம் பராமரிப்பதற்கு பஞ்சாயத்து யூனியனுக்கு விடவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதற்கு ஏற்ப 23—7—81 உத்திரவுப்படி கை இறைப்பான் பராமரிப்புப் பணி அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 29—11—82 உத்திரவின்படி மின் இறைப்பான்கள் பராமரிப்புத் திட்டம் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திலே விடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் ஒரு உத்திரவு போட்டிருக்கிறோம் டுவாட்போர்டிலே உள்ள டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்டை சேர்ந்தவர்களும் ரெவின்யு டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து கை இறைப்பான் மின் இறைப்பான் ஆகியவற்றை உடனடியாகப் பழுதுபார்க்கவேண்டும். இந்த மேற்பார்வையை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறோம். இன்றைய தினம் அந்த உத்திரவு போகிறது. இதன் விளைவாக கை இறைப்பான் மின்இறைப்பான் இரண்டும் முழுமையாக பழுது

பார்க்கப்படவேண்டும். நீங்கள் குறை சொல்லவேண்டிய நிலை இருக்காது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உங்களுக்குக் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்புகளில் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகஸ்ட் மாதத்திலே அரசு போதுமான தண்ணீர் வசதியற்ற எல்லா குடியிருப்பு களையும் மூன்று ஆண்டுகளில் குடிதண்ணீர் வழங்கும் வேலை களை முடிக்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்து, போதுமான பணமும் ஒதுக்கியுள்ளது. முடிக்கப்படவேண்டிய குடியிருப்பு களின் எண்ணிக்கை பின்னாலே தரப்படுகிறது என்று சொல்லி 82—83-ல் 4,060 இதற்கு வேண்டியது ரூ. 40 கோடி. 83—84-ல் 6,000 குடியிருப்புகள். அதற்கு ரூ. 60 கோடி. 60 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை பட்ஜெட்டிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் படித்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். 84—85-ல் ரூ. 70 கோடி தேவை. ஆகவே ரூ. 170 கோடிக்கு செலவு செய்து எஞ்சியுள்ள 17 ஆயிரத்து 16 குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் கொடுத்துவிடுவதற்காக இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் மெத்த மகிழ்ச்சி யோடு சொல்லிக் கொள்கிறேன். அப்படிசொல்லும்போது மத்திய அரசிற்கு ஒரு கடமை இருக்கிறது. 170 கோடி ரூபாய் செலவு செய்வது என்பது சாமான்யமானது அல்ல. மத்தியஅரசு கொண்டு வந்திருக்கிற 20 அம்சத் திட்டத்தில் எட்டாவது அம்சம், Drinking Water should be supplied to all the problem villages in the State. மாநிலத்திலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல குடிதண்ணீர் இல்லாத எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கொடுத்து விட வேண்டுமென்று சொல்லிருக்கிறார்கள். அதற் காகத்தான் நாம் போட்டிருக்கிற திட்டத்திலே 170 கோடி ரூபாய் ஆகும், 55 கோடி ரூபாயை மத்திய அரசு தரவேண்டு மென்று கேட்டிருக்கிறோம், மத்திய அரசு தரும் என்று கருது கிறோம். இதைச் செய்யவேண்டும் அதைச் செய்யவேண்டும் என்று மத்திய அரசிலேயிருந்து சொல்வது நல்லது. நாங்கள் ஒத்துழைக்கிறோம் செய்யத் தயாராக இருக்கிறோம் நீங்கள் நினைப்பதை விட வேகமாகச் செய்கிறோம். ரெக்கார்ட்ஸ் வில் ப்ரூவ் இட் ஆகவே அந்தத்தொகையை மத்திய அரசு கொடுக்கும் என்று நம்புகிறோம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 25 கோடி ரூபாய் என்று சொல்வது போதாது.

மழை இல்லை எல்லோரும் ஒத்துக்கொள்கிறீர்கள். மெத்த மகிழ்ச்சி முன்பு சொன்னதைப்போல. ஆனால் இந்த மழை இல்லாத காலத்தில்கூட புரட்சித்தலைவருடைய ஆட்சி குடிதண்ணீர் கொடுப்



பதை, சென்னையில் எப்படி சமாளித்திருக்கிறது எப்படி சமாளிக் கப்போகிறோம் என்பதை நான் எடுத்துச்சொன்னதை மாண்புமிகு உறுப்பினர்கள் தைரியமாக எங்களைப் பாரட்டுவதற்கு முன் வரலாம்: பரவாயில்லை, மிக நிதானமாக By methodical way tehy have seen far beyond thei nose' மூக்கிற்கு அப்பால் வெகுதூரம் கணக்கு பார்த்து செய்திருக்கிறது இந்த அரசு என்பதை பாராட்டக்கூடிய வகையிலே தான் செய்திருக்கிறது. அதைப்போல 1974—ல் வறட்சி வந்தது. மழை இல்லை. அந்த 1974—ல் மழை இல்லாத போது ஆகஸ்ட் மாதம் முதல் தேதியிலிருந்து 15 ஆம் தேதி வரையில் 34·41 மில்லியன் கேலன் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதேகாலத்தில் 1982-ல் மழை இல்லாத போது நாங்கள் 44.60 மில்லியன் கேலன் கொடுத் திருக்கிறோம். ஏறத்தாழ 10 மில்லியன் கேலன் அதிகமாக கொடுத்திருக்கிறோம். ஆகஸ்ட் மாதத்தில் 16-ம் தேதியிலிருந்து 31—ம் தேதி வரையில் 31·64 மில்லியன் கேலன் தான் 1974-ல் கொடுக்கப்பட்டது. இந்த அரசு 1982-ல் 44·80 மில்லியன் கேலன் கொடுத்திருக்கிறது. செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து 23-ம் தேதி வரையில் 26.86 மில்லியன் கேலன் தான். 39 மில்லியன் கேலன் என்று முன்பு கொடுத்ததை விட இப்போது நாங்கள் அதிகமாக கொடுத்துக் கொண்டு வந்திருக் கிறோம் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) ஐயம் நாட் யீல்டிங். மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது கேட்க வேண்டுமென்றால் கடைசியில் கேளுங்க ஒரு அமைச்சர் பேசுகின்றபோது குறுக்கிட்டு பேசலாம்ள். என்று எந்த சட்டத்தில் இருக்கிறது என்று நானும் புத்த கத்தை புரட்டி, புரட்டி பார்த்தேன். ஆனால் கிடைக்கவில்லை: மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் 25 வருடங்களுக்கு முன்னாலிருந்து என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் நான் பேசி முடித்தபின் இருக்கிற தவறுகள் ஏதாவது இருந்தால் சொல்லலாம். என்னை பேசவிடுங்கள் 1974-லிலே முன்பிருந்த அரசு கொடுத்ததை விட நாங்கள் அதிகமாக கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். 1975-ஐ கவனிக்க வேண்டியது மிக முக்கியமானது. 1975-ல் பிப்ரவரி 16-லிருந்து 20-ம் தேதி வரையில் 30 மில்லியன் கேலன் ஒரு நாளைக்கு கொடுத் தார்கள். இந்த அரசு 33 மில்லியன் கேலன் கொடுத்திருக்கிறது. ஆனால் 21-ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் 30-ம் தேதி வரையில் 30 மில்லியன் காலன் ஆன் ஆல்ட்டர்நேட் டேஸ். இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கவேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு கடைசியில் கேள்வியை கேட்கலாம். 30 மில்லியன் கேலன் ஆன் ஆல்ட்டர்நேட் டேஸ் என்று 30.8.75-ல்—"

30 million gallons on alternate days,

From 21st February onwards and upto 30.8.75, 30 million gallons on alternate days. ஆனால் இந்த அரசு ஆல்ட்டர்நேட் டேஸ் கொடுக்கிறோம். 21-ம் தேதியில் சென்ற மாதம்; ஆனால் 45 மிலியன் கேலன் கொடுக்கிறோம். பாராட்டவேண்டாமா? 30 மில்லியன்கேலன் நீங்கள் ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுத்திருக்கிறபோது இந்த அரசு 45 மில்லியன் கேலன் ஒருநாள் விட்டு ஒரு நாள் கொடுத்திருக்கிறது என்றால், 15 மிலியன் கேலன் அதிகமாக கொடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகாலம் மழை இல்லை: இருந்தும் எப்படி முடிந்தது? அதைப் பின்னாலே படிக்கிறேன். எங்கெங்கிருந்தெல்லாம் தண்ணீரை எடுக்க முடியுமோ, எங்கெங்கிருந்தெல்லாம் தண்ணீரை கொண்டு வர முடியுமோ, எப்படியெல்லாம் தண்ணீரை சேமிக்க முடியுமோ, அப்படி Shrewd ஆக இந்த அரசு, புரட்சித் தலைவருடைய அரசு சேமித்து வைத்ததால் 50 per cent more than what you have given. நீங்கள் 30 மில்லியன் கேலன் கொடுத்தீர்கள். நாங்கள் 45 மில்லியன் கேலன் கொடுக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் போதும், போதும் என்கிற அளவில் ஏழு லாரிகளில் அனுப்பி, அதிலே ஐந்து முறை அனுப்பி தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இரண்டு ஆண்டு காலமாக தண்ணீர் இல்லை என்று இருந்தது. அதோடு வேறு ஒரு தகவலையும் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

(பிற்பகல் 12-50)

நான் பேசி முடித்தபிறகு பேசுங்களேன் பாலன். நான் மாட்டேன் என்றா சொல்கிறேன்.

My nice friend, please be seated.

திரு.சு. பாலன்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 7 லாரி அனுப்புவதாகச் சொல்கிறார்கள். பொதுமக்கள் கேட்டால் தவறாக நினைப்பார்கள். பொதுமக்களுக்கு என்ன செய்தோம் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 1975-ல் வறட்சி இருந்தபொழுது, ஆகஸ்ட் 1975-ல் 110 லாரிகள்தான் சென்னையிலே உபயோகப்படுத்தப்பட்டன. ஆனால், இந்த ஆட்சியில் 149 லாரிகளை உபயோகப்படுத்தியிருக்கிறோம். 1975-ல் வறட்சிக் காலத்தில், 128 வாட்டர் டாங்குகள்/உபயோகப்படுத்தப்பட்டன. இப்பொழுது, 1,629 டாங்குகள் உபயோகப்படுத்தப்பட்டன. இந்தப் புள்ளிவிவரங்



கள் எல்லாம் உங்களுக்குத் தெரியவேண்டும். அப்பொழுதிருந்தது 6,000 டியூப் வெல்கள். இப்பொழுது, 11,156.

What a fantastic figure?

திரு.ரா. உமாநாத்: 'fantastic figure' என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். தண்ணீர் இல்லை அவ்வளவுதானே விஷயம்.

திரு.நா. சுந்தரராஜ்: ஒரு மாலை வாங்கிவந்து போடுகிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மழை இல்லை வறட்சி; இருந்தாலும் இந்த அரசு முன்பிருந்த அரசு கொடுத்ததைவிட அதிகமாகத்தான் முன்பு 30 மில்லியன் காலன் இப்பொழுது 45 மில்லியன் ஆன் ஆல்டர்னேட் டேஸ் கொடுக்கிறோம். இப்பொழுது 11,156 டியூப்வெல்ஸ் வைத்திருக்கிறோம். இன்னும், புரட்சித் தலைவர், பணத்திற்காகப் பார்க்காதீர்கள், இன்னும் ஒரு ஆயிரம் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தேவைப்படுகிற பொழுது அதுவும் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பத்திரிகைகளில் சில செய்திகள் எல்லாம் வருகின்றன. தண்ணீர் சரியாக வருவதில்லை, டாங் புல்லாக இருப்பதில்லை. பாதியிலேயே, கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அங்கேயே யாராவது போக்கிரிகள் நின்றுகொண்டு பணம் வசூல் செய்கிறார்கள். ஆகவே, The good intentions of the Government have been spoiled by these anti-social elements' என்று எல்லா பத்திரிகைகளும் எழுதுகின்றன. பத்திரிகைகள் ஒரு ஜனநாயக நாட்டில் செய்யக்கூடிய சேவையைக் குறைத்து மதிப்பிடக்கூடிய ஆட்சி அல்ல இது. ஒரு ஜனநாயக நாட்டில் இந்த நாட்டினுடைய டெஸ்டினியையே ஷேப் செய்வது பத்திரிகைகள்தான். எனவே, பத்திரிகைகளில் வரக்கூடிய கமென்ட்ஸைக் கவனித்து, இப்பொழுது, 5,6 தினங்களுக்கு முன்னால், புரட்சித் தலைவர் என்னை அழைத்து சொன்னார்கள், எல்லா இடங்களுக்கும் ஒவ்வொரு போலீஸ்காரர் போட வேண்டும்; ஒவ்வொரு ஏரியாவிலும் எங்கே டாங்க் இருக்கிறதோ, அந்த டாங்க் இருக்கிற இடத்தில் ஒருவருக்கு வேலைகொடுக்கவேண்டும். அவருக்கு மாதம் ரூ. 100 டெம்ரரியாகக் கொடுக்கவேண்டும் என்று, அவர் இந்தத் தண்ணீர் ஒழுங்காக விநியோகிக்கப்படுகிறதா? பணம் வாங்காமல் விநியோகிக்கவேண்டுமென்று பார்த்துக்கொள்ள பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அது மட்டுமல்ல, அவர் இருக்கக்கூடிய ஏரியாவில், இருக்கிற பம்புகளில் பழுதானால், உடனே சொல்வதற்கும், அதைச் சீர் செய்வதற்கும் உள்ள நடவடிக்கைகளை அவரே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னதன் பேரில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்குப் புதிதாக வேலை கிடைக்கப்போகிறது.

போலீசும் ஒவ்வொரு லாரியிலேயும் டிராவல் செய்வார்கள். அந்தப்பாதுகாப்பு கிடைக்கும். ஆகவே, சென்னை நகர மக்களுக்கும், பெண்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். எந்தப் பயமும் வேண்டாம், உங்களுக்குக் கிடைக்கக் கூடிய தண்ணீர் கிடைக்கும். நீங்கள் தாராளமாகச் சென்று, யாருக்கும் பணம் கொடுக்காமல் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

நான் சொல்லும்பொழுது, முன்பு வறட்சி இருந்தாலும் அதிகமாகத் தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பது. பல திட்டங்களை நிறைவேற்றியதன் மூலமாக அப்படிச் செய்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியும், ஆலந்தூர், பல்லாவரம், சிட்லபாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய அந்த ஊர்களுக்கு ஒரு கூட்டுக் கூடிநீர்த் திட்டம் தயார் செய்து, அந்தத் திட்டம் 1975-ஆம் ஆண்டிலேயே முடிந்திருக்க வேண்டும். சுமார் 2 கோடி ரூபாய்தான் அதற்குச் செலவு. அப்படி அந்தத் திட்டம் இரண்டு கோடி ரூபாயிலே முடிந்திருந்தால் இப்பொழுது இந்த அரசுக்குள்ள பெரும்பகுதியான பொறுப்புகுறைந்திருக்கும். ஆனால் என்னவாயிற்று என்றால், எல்லா வேலைகளும் முடிந்து விட்டன; பழையசீவரத்தில்தான் ஹெட் ஓர்க், பாலாற்றில். அங்கிருந்து ஆலந்தூருக்கு பைப் வர வேண்டும். குழாய் போட்டிருக்கிறார்கள். 53 கிலோ மீட்டர் தூரம். எல்லா வேலைகளும் முடிந்து டெஸ்ட் செய்யும்பொழுது அந்தக் குழாய்கள் அத்தனையும் உபயோகமற்றவை, தண்ணீர் வெளியே வந்து கொண்டிருக்கிறது, எல்லாவற்றையும் மாற்றி யமைக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அந்தவேலையை இந்த அரசு எடுத்திருக்கிறது. சுமார் 200 இலட்சம்— 2 கோடி ரூபாயில் முடிய வேண்டியது, நான் இப்பொழுது வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன், 799 இலட்சம், ஏறக்குறைய 8 கோடி ரூபாயில் முடிகிறது. மே மாதம் ஆலந்தூர், பல்லாவரம் போன்றவைகளுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கப்பட்டுவிடும், இரண்டு மில்லியன் கேலன் கொடுக்கப்படும்.

அதற்குப் பின்னால் வாலாஜாபாத்தில் ஒரு ஹெட் ஓர்க் கட்ட வேண்டும். அவைகளையும் முடித்து அடுத்த ஆண்டு, 1984



செப்டம்பரில் அதையும் இணைத்துக் கொடுக்கும்பொழுது ஐந்து மில்லியன் கேலன் தண்ணீர் அந்த ஏரியாவுக்குக் கிடைக்கும். இப்பொழுது இரண்டு மில்லியன் கேலன் மே மாதத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. இதுவொரு சாதாரண அச்சீவ்மென்டா? ஏற்கனவே 1975 ஆம் ஆண்டில் முடிந்திருக்க வேண்டியது. ஆனால் அன்றைக்கு இந்தக் குழாய்களைப் பதித்ததில் தவறான குழாய்களைப் பதித்து விட்டார்கள், தண்ணீர் ஊற்றினால் நேராகக் குழாய்களில் அல்லவா போக வேண்டும், அவ்வாறு போகவில்லை. பக்கத்தில் உள்ள வயலுக்குப் போக ஆரம்பித்து விட்டது, இர்ரிகேஷன் பர்ப்பசுக்கு. ஆக, அவைகளை எடுத்து விட்டு வேறு குழாய்கள் போட்டு, 53 கிலோ மீட்டர் தூரத்திற்குப் போட்டு, ஆனால் இதற்கு முன்னால் போட்ட டிஸ்ட்ரிப்யுஷன் சிஸ்டம் இருக்கிறதே அது பழுது படாமல் இருக்கிறதா என்று அதையும் பார்த்து, ஓவர் ஹெட் டேங்க் கட்டியிருக்கிறோமே, அது ஓட்டையாகி விட்டதா என்று அதையும் பழுது பார்த்து, இவைகளையெல்லாம் சரியாகப் பார்த்துச் செய்வதற்கு 8 கோடி ரூபாய் செலவு செய்து இந்த அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. மே மாதத்திலே குடிநீர் கொடுக்கப்போகிறோம், அந்த ஏரியாவில் உள்ளவர்களுக்கெல்லாம். இது மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்களுக்கும்—அவர்கள் நேற்றுகூடப் பேசினார்கள்—அவர் களுக்கும், மற்றவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் பம்மல் நல்லதம்பி அவர்களுக்கும்–பம்மல் நல்லத்தம்பி அவர்களை இப்பொழுது இங்கே காணோம், நேரம் கழித்து வருவார்கள்— அவர்களுக்கும் இந்த செய்தி மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சரி, என்னென்ன காரியங்களை நீங்கள் செய்தீர்கள்? வாட் ஹேவ் யூ டன்? என்ன செய்து தண்ணீர் கொண்டு வர முடிந்தது உங்களால். இன்னும் சென்னையிலே என்னென்ன காரியங் களைச் செய்து வருகிறோம் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும்.

மணலியிலிருந்து குழாய்கள் மூலம் அண்ணா பூங்காவுக்கு நிலத்தடி நீரைக் கொண்டு வந்து வட சென்னைப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் சீர்படுத்தியது;

நகரில் பல்வேறு பகுதிகளில் துருப் பிடித்த குடிநீர் குழாய் களைப் புதுப்பித்து விநியோகக் குறைபாடுகளை அகற்றியது;

பல்வேறு குடிசைப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி அமைத்தது;

இந்தியாவிலேயே முதல் தடவையாக இந்தத் துறையில் உள்ள பணியாளர்களுக்கு ஒரு பயிற்சிக் கூடம் அமைத்தது. எப்படி எப்படியெல்லாம் தண்ணீர் இருக்கிறது. எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிப்பது, எப்படி ரெகுலேட் செய்வது என்பதற்கான ஒரு பயிற்சி.

இதுவன்றி வேறு பல திட்டங்களையும் இந்த வாரியம் செய்திருக்கிறது.

புழல் ஏரியில் இருந்து கீழ்ப்பாக்கத்துக்கு நீர் கொண்டு வருவதற்கு மூடிய கால்வாய் அமைத்தல்;

புதிதாகச் சேர்க்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்; திருவான்மியூர் திட்டம் முடிக்கப் பட்டுள்ளது;

குடிநீர்த் தரக்கட்டுப்பாடு அமைப்பை மேம்படுத்துதல்:

பொதுக் குழாய்களைச் சீர்படுத்தி பள்ளத்தில் உள்ளவை களுக்கு (பிட் டேப்ஸ்) கை பம்புகள் பொருத்துதல்;

திருவான்மியூருக்குத் தெற்கே உள்ள பகுதியில் இருந்து நிலத்தடி நீரை நகருக்குக் கொண்டு வருதல்.

ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்ட உதவியுடன் நிலத்தடி நீரையும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரையும் ஒருங்கிணைத்து நகருக்கு குடிநீர் வழங்குவதை அதிகரிப்பதற்கான திட்டம்.

நான் இங்கே கூறி உள்ளவைகள் சில திட்டங்களே ஆகும். இந்த வாரியம் சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள நிலத்தடி நீரை அதிக அளவு நகருக்குக் கொண்டுவரவும் கிடைக்கும் நீரை எல்லாப் பகுதிகளுக்கும் சீரான முறையில் விநியோகிக்கவும், தரக்கட்டுப்பாட்டைத் தீவிரமாக அமல்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது.

(பிற்பகல் 1-00)

அடுத்து கழிவுநீர் அகற்றுவது பற்றிய ஆக்கத் திட்டங்களைக் கூற விரும்புகிறேன்.





இந்த வாரியம் அமைந்த பிறகு உலக வங்கியின் கடன் உதவி யுடன் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதில் குறிப் பாக கூறவேண்டும் என்றால் 15 கழிவு நீரேற்று நிலையங்களை புதுப்பிப்பது ஆகும். இந்த வேலை முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது.

இதில் அதிக சக்தி வாய்ந்த நீரேற்றிகளும், தான் இயங்கி முறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கழிவுநீர் ஆறுகளில் கலப்பது பெரும்பாலும் தடுக்கப்படுவதற்கு சாத்தியமாகிறது.

நகரில் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் கழிவு அடைப்புகளை எடுப்பதற்கு நவீன இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு உபயோ கத்தில் உள்ளன. அவைகளை சென்னையிலே இருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள். இதனாலும் கழிவு நீர் தெருக்களில் வழிந்தோடி கால்வாய்களை அசுத்தப்படுத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடை இல்லாத சில பகுதிகளாக கிண்டி, வேளச் சேரி, அரும்பாக்கம்-அமைந்தகரை ஆகியவைகளுக்கு பாதாள சாக்கடை வசதி அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இவையன்றி புதிதாக திட்டங்கள் பல நடைமுறையில் உள் ளன. அவைகளில் சில:

1. ஜார்ஜ்டவுன் பகுதிகளில் கழிவுநீர் குழாய் புதுப்பித்தல்.
2. பாதாள சாக்கடை இல்லாத மேல்பட்டடை, பள்ளிப் பட்டு, திருவான்மியூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதி களுக்கு பாதாள சாக்கடை அமைத்தல்.
3. மாம்பலம் ஏரிக்கரை பகுதிக்கு பாதாள சாக்கடை அமைத்தல்.
4. கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து தொழில் நிறுவனங் களுக்கு பயன்படுத்துவதற்கு மாதிரி நிலையம் அமைத் தல்.

இந்த வாரியம் அமைந்த பிறகு குடிநீர், கழிவுநீர் ஆகிய ஆக்கப் பணிகளுக்காக உலக வங்கி உதவியுடனும், மாநில அரசு உதவியுடனும் கணிசமான தொகை நகர மக்களின் நல்வாழ் வுக்காக செலவழிக்கப்பட்டு உள்ளது.

1978–79-ல் ரூ. 152.80 இலட்சம்

1979–80-ல் ரூ. 298.95 இலட்சம்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1983 மார்ச் 22

1980-81-ல் ரூ. 605.60 இலட்சம்
1981-82-ல் ரூ. 800.17 இலட்சம்

செலவழித்திருக்கிறோம்.

அடுத்து இன்றைய வறட்சி நிலைமைக்கு வருவோம்.

சென்னை நகர் இதுவரை வரலாறு காணாத வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளாக பருவமழை தொடர்ந்து பொய்த்தது. 1981, 1982 ஆண்டுகளில் நீர்த் தேக்கங்களில் சுமார் பாதி அளவுதான் நீர் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே நீர்த்தேக்கங்களில் ஐந்தில் ஒரு பங்கு தான் இருந்தது.

ஆகவே இருக்கும் சிறிதளவு நீரை வைத்துக்கொண்டு நகருக்கு சீராக வழங்க பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவைகளில் சில :—

1. ஏரிகளில் உள்ள நீரை சிக்கனமாக பயன்படுத்துதல்;
2. தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் இருந்து நகருக்கு நீர் வழங்குதல்; அப்பகுதிகளில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல்;
3. சென்னை நகரில் உள்ள நிலத்தடி நீரை அதிக அளவு பயன்படுத்துதல்; இதைத்தான் முக்கியமாக கவனிக்க வேண்டும்.
4. குழாய் மூலம் குடிநீர் கிடைக்காத பகுதிகளுக்கு தொட்டிகள் அமைத்து லாரிகள் மூலம் வழங்குதல்.

இந்தச் சூழ்நிலையில் இன்றைய நிலைமையை இந்தப் பேரவைக்கு கூற விரும்புகின்றேன்.

பூண்டியில் உள்ள நீர் சோழவரத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சோழவரத்தில் உள்ள நீரை ராட்சத பம்புகள் மூலம் புழல் ஏரிக்குக் கொண்டுவரப்படுகிறது. இந்த மாத இறுதியில் புழலேரியில் ராட்சத பம்புகள் நிறுவப்படும்.

21-2-1983 முதல் நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கும் முறை அமல்படுத்தப்பட்டது. இதே போன்று 16-2-75 லிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் வழங்கும் முறையை அமல்படுத்தியதைவிட இப்பொழுது அதிகமாக நாங்கள் கொடுக்கிறோம் என்பதை ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன்.



1983 மார்ச் 22] [திரு. எஸ். இராகவானந்தம்]

இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முன்னரே நகரில் பல்வேறு பகுதிகளிலும் 11156 கை பம்புகள் நிறுவப்பட்டு உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இன்று நகரில் பல்வேறு பகுதிகளில் 1642 நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் 171 லாரிகள், டிராக்டர்கள், மூலம் அன்றாடம் நிரப்பப்படுகின்றன. இப்பொழுது சென்னை நகரில் எங்கு பார்த்தாலும் கை பம்புகள், தெருவெல்லாம் தொட்டிகள், சாலை எல்லாம் வாரியத்தின் குடிநீர் லாரிகள் என்ற நிலையிலிருப்பது நீங்கள் எல்லோரும் மகிழ்வீர்கள் என நான் கருதுகிறேன்.

இந்த நீர்த் தொட்டிகளில் நிரப்பப்படும் குடிநீரை சீராக வழங்க ஒவ்வொரு நீர்த் தொட்டிக்கும் ஒருவர் நியமிக்கப்பட உள்ளனர். இதற்கான அரசு ஆணையும் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

சென்னை நகரில் மக்கள் தொகை கணக்குப்படி 32 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் குடிசைப் பகுதிகளிலும் வசதி குறைந்த பகுதிகளிலும் வாழ்கிறார்கள். நகரில் குழாய்கள் மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கினாலும் வசதி குறைந்தவர்கள் வாழும் பகுதிகளுக்கு அன்றாடம் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப் படுவதை பலர் பாராட்டுகிறார்கள். மேற்கொண்டு ஒரு முக்கிய அம்சமாக நான் குறிப்பிட விரும்புவது இந்த வறட்சி நிலைமையில் தண்ணீர் பற்றாக்குறையால் எந்த ஒரு தொழிற்சாலையும் மூடப்பட வில்லை. அதனால் தொழிலாளர்கள் வேலை இழக்கும் சூழ்நிலையும் ஏற்படவில்லை. தொழிற்சாலைகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்து வருவது பாராட்டத்தக்கதாகும். (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன் : நீர் வறட்சியினாலே தொழிற்சாலைகள் மூடப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இந்த மின்சார வறட்சியினால் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கிற காரணத்தால் புதிதாக மூடுகிற அவசியம் வரவில்லையா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சொல்வதற்கு இன்னும் நிறைய இருக்கிறது. சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதுதான் மரபு. ஓர் அறிக்கையை அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். நாங்கள் முடிந்தவரை ஏற்கனவே படித்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். மறுபடியும் இன்னொரு படி படிக்கிறார்களே, அப்படி அறிக்கையை படிக்க அறிக்கையை வேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்
கள், மிகவும் கெட்டிக்காரர். எல்லோராலும் மிகவும் மதிக்கப்
படுபவர். ஏன், எங்களால் புரட்சித் தலைவர் உட்பட எல்லோ
ராலும் மதிக்கப்படுபவர். இந்த பாலிசி ஸ்டேட்மெண்டிலே இல்
லாத, நாங்கள் செய்திருக்க கூடியவற்றைச் சொல்ல வேண்டும்.
செய்திருக்கக் கூடியவைகளின் அளவு அதிகமாக இருப்பதாலே
நாங்கள் அப்படியே சொல்ல முடியாது. படித்துத்தான்
சொல்ல முடியும்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே,
இவ்வளவு செய்தவர்கள் இந்த அறிக்கையிலே இதைச் சேர்க்கத்
தவறிவிட்டார்களே, அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது பாலிசி ஸ்டேட்
மெண்ட்; சாதனைப் பட்டியலாக மாற்றிவிடக்கூடாது என்ற
காரணத்தாலே இதை இங்கே சொல்வதாக வைத்திருக்கிறோம்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, பெர்
பாமன்ஸ் பட்ஜெட் என்று ஒன்று தனியாக தருவது மரபு.
எனவே இதிலே சேர்க்கக்கூடாது என்பதல்ல. இதைக்கூட
சேர்க்க முடியவில்லை என்று பொருள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி அல்ல. அவ்
வப்போது ஏற்படுகிற மாற்றங்களைச் சொல்லவேண்டும். இப்
போதுகூட இரண்டு தொட்டிகள் அதிகமாக வைக்கிறோம். அதை
அன்றாடம் செய்துகொண்டு இருக்கிறோம். இப்போதுதிடீரென்று
போலீஸ்காரர்களை லாரியிலே அனுப்புவது அவசியம் என்று
நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். ஆகவே இவைகளை எல்
லாம் பாலிசி ஸ்டேட்மெண்டிலே சேர்க்க முடியாது. நீங்கள்
இதையெல்லாம் கவனித்துக் கொண்டு வந்த பிறகு உங்களுக்கு
ரொம்பவும் சாடிஸ்பேக்ஷன். கவர்மெண்ட் ஹோம் பெர்பார்ம்டு
வெல். ஆகவே தொழிற்சாலைகள் தண்ணீரை சிக்கனமாக பயன்
படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்துவருவதைப் பாராட்டுகிற
வகையிலே செய்திருக்கிறார்கள். பொதுமக்கள் இதுவரை அரசுக்கு
ஒத்துழைத்தது போல் மேலும் ஒத்துழைக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த மூன்று ஆண்டு காலத்
தில் வறட்சிப் பணிகளுக்காக 4-3/4 கோடி ரூபாய் செலவு செய்
திருக்கிறது. மேலும் செய்ய இருக்கிறது. எனவே இந்த ஆட்சி
செய்துள்ள இந்த நல்ல காரியங்களை பாராட்ட வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து மதுரை நகரைப் பற்றி நான் சொல்ல வேண்டும்.
ஏன் என்றால், நான் மதுரை சம்பந்தி என்றும், அதிகமாகச்
சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தச்சம்பட்டு என்னுமிடத்தில் வைகையாற்றில் போடப்
பட்டுள்ள வடிபடுகை இன்பில்ட்ரேசன் வெல்) கிணற்றிலிருந்து
சுமார் 3 லட்சம் காலன் நீர் பெறப்படும். இதற்காக குழாய்
பதிக்கும் வேலைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

வைகை ஆற்றில் மணலூர் அருகில் போடப்பட்டுள்ள
கலெக்டர் வெல் கிணற்றிலிருந்து சுமார் 2 முதல் 3 லட்சம்
காலன் நீர் பெறப்படும். இதற்காக 160 மில்லி மீட்டர் விட்ட
முள்ள பி.வி.சி. குழாய்கள் சுமார் 17 கிலோ மீட்டர் தூரத்திற்கு
பதிக்க வேண்டும். ஏற்கனவே 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு
குழாய்கள் பதிக்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து அந்த வேலை
கள் நடைபெற்று வருகின்றன.

திருப்பரங்குன்றம் குடிநீர் திட்டத்தில் உபரியாக உள்ள
சுமார் 3 லட்சம் காலன்கள் மதுரைக்குத் திருப்பிக் கொடுக்கப்
படும். அதைத்தான் நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.
திருப்பரங்குன்றத்தில் குடிநீர்த் திட்டத்தில் உபரியாக உள்ள
சுமார் 3 லட்சம் காலன் தண்ணீர் மதுரைக்குத் திருப்பி விடப்
படும்.

அடுத்து, ஒரு ஆழ் துளையிடும் கருவி (சி.பி. 700 ரிக்)
21-3-83 தேதியிலிருந்து வேலைசெய்ய துவங்கி உள்ளது. மேலும்
வேண்டிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க குடிநீர் வடிகால்
வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைகை அணை
யிலேயிருந்து நீர் திறந்து விட்டு. மேலக்கால் மற்றும் கோச்சடைத்
தலைமைப் பணியிடங்களில் (ஹெட் ஒர்க்ஸ்) நீர் மட்டத்தை
உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டெட்
ஸ்டோரேஜ் என்று சொல்வார்கள் அந்தத் தண்ணீரை.

பெரியார் நீர்த்தேக்கத்தில் உள்ள குறைந்த அளவு நீரையும்
பம்ப் செய்து வைகை அணைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து
வைகை ஆற்றில் திறந்து விடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு
உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.
மற்ற உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதியிலே உள்ள குறைபாடு
களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இவைகளை எல்லாம்
மனதிலே வைத்து எப்படியாவது அரசு ஸ்கீமிலேயாவது அல்லது
இந்த அரசினுடைய திட்டத்திலேயாவது வாட்டர் டீக்கேட் என்று

1990ல் முடிகிற அந்த டிக்கேட்டுக்குள் இந்தக் காரியங்களை செய்வதற்கு இந்த அரசு முனைப்பாக இருந்து சேவை செய்யும் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என். சங்கய்யா : துணைத் தலைவர் அவர்களே, மதுரையைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதும் அங்கே 5 நாளைக்கு 6 நாளைக்கு ஒரு தடவை தான் முனிசிபல் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அதிலே அந்த லாரிகளை எல்லாம் கொண்டுவருவதற்கு ஒரு சரியான ஏற்பாடு இல்லை. இடையிடையே சமூக விரோதிகள் தடுக்கிறார்கள். எனவே இவைகளை எல்லாம் ஒழுங்குபடுத்துவதற்கும் உடனடியாக நிவாரணம் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–10)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக நிவாரணம் கொடுக்கும் வகையில் திருப்பரங்குன்றத்திலிருந்து வரக்கூடிய தண்ணீர் பற்றிச் சொன்னேன். மற்ற இடங்களில் இருந்து ஒரு இரண்டு மில்லியன் காலன் தண்ணீர் கொண்டு வருவது பற்றிச் சொன்னேன். நீங்கள் ரௌடிகளைப் பற்றிச் சொன்னீர்கள். சென்னையில் இருப்பதுபோல் மதுரைக்கும் செய்வதற்கு மதுரை மேயர் மூலம் தெரிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் கலந்து அது பற்றி செய்யப்படும்.

THIRU K. S. G. HAJA SHAREEF : Mr Dep ty Speaker Sir, I have been hearing the r ply of the Hon. Minister very carefully. It is like saying that he oper tion is very s ccessf l but the patient is dead. He says that he has been ab e to manage the supply of water to the City people, by various schemes. I would like to know or would like to reques the Hono able Minis er whether he can take the City MLAs and show them al the schemes which he has adop ed to tackle this water problem, and can i form the people that they need not have a y fear as pro ised by the Hono able Minis er and that the wa er problem to some extent will be solved.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் முன் வரிசையில் இருக்கும் தலைவர்கள் என்றைய தினம் தங்களுக்குச் சௌகர்யம் என்று சொல்கிறார்களோ அன்றைய தினம் அவர்களை அழைத்துச் சென்று காண்பிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை நகரத்திலே இருக்கின்ற இந்தக் குடிநீர் பஞ்சத்திற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை பற்றிச் சொன்னார்கள். இப்போதுள்ள வறட்சியை வரலாறு காணாத வறட்சி என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட வரலாறு காணாத வறட்சி என்று சொல்கிறபோது, 1974–75ல் ஏற்பட்ட வறட்சி சாதாரண வறட்சிதானே, அதை எப்படி இதோடு ஒப்பிட்டுச் சொல்கிறார்கள் என்பதை அந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் பர்பார்மென்ஸ் அரசு சரியாகப் பணியாற்றியுள்ளதா என்பதைப் பற்றி மக்கள் முடிவு செய்ய வேண்டிய ஒன்று. இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள், மக்கள் முடிவு எடுக்கிறார்கள். சமயம் வருகிறபோது தீர்ப்பளிக்கிறார்கள். நாங்கள் செய்ததை எடுத்துச் சொல்லியிருக்கிறோம், நாங்கள் செய்தது சரியா இல்லையா என்பதை டிசைட் செய்வது யார்? மக்கள் அவர்கள் சரியான தீர்ப்பைக் கொடுப்பார்கள்: (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவோ கிரிடிசைஸ் செய்தீர்கள்? நான் குறுக்கிடவே இல்லை. நேற்றுக் காலையில் இருந்து

I was sitting quietly 'un-Raghavanandam' like. Let he people draw their own conclusions.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில் செய்துள்ள ஏற்பாடுகளை பற்றிச் சொன்னார்கள். மதுரை நகரில் 7 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு 14 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படுகிறது. இன்றைக்கு அவர்களுக்கு பாதியளவு கூட அளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு மதுரை நகரில் மிகப் பெரிய கடுமையான வறட்சி ஏற்பட்டு இருக்கிறது'
(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது கிளாரிபிகேஷன் மட்டும் தான் கேட்கலாம். இந்தத் தண்ணீர் பிரச்னை பற்றி பேசிக்கொண்டு இருக்க முடியாது, நானே கூட என்னுடைய தொகுதியில் இரண்டு ஊர்களில்—பத்தமடை—மேலச்சேவல்—உள்ள நிலைமைகளைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி இருக்கிறேன். ஆகவே, எல்லாயிடங்களிலும் இருக்கின்றன.

திரு. ப. நெடுமாறன்: சென்னை நகரத்திற்குச் செய்து இருப்பதுபோல் ஒரு வட்டத்திற்கு ஒரு டாங்க், ஒரு வட்டத்திற்கு

இரண்டு லாரிகள் என்று ஒதுக்கிக் கொடுத்து இருப்பதுபோல் மதுரை நகரத்திற்கும் இரண்டு வார்டுகளுக்கு ஒரு லாரி என்றும், மதுரை நகரில சேரிப்பகுதிகளாக இருக்கும் இடங்களில் டாங்குகளை நிரந்தரமாக வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து அதற்கு வேண்டிய முடிவுகள் எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி பல உறுப்பினர்கள் எழுந்து நிற்பது சரியல்ல. இது கேள்வி நேரம் அல்ல. மானியக்கோரிக்கை விவாதத்தில் எல்லோரும் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். இந்தக்குறைபாடு எல்லா இடங்களிலும் இருக்கிறது. அமைச்சரிடத்தில் என் தொகுதியில் உள்ள இரண்டு நகர பஞ்சாயத்துகள் பற்றி சொல்லியிருக்கிறேன். அவர் எல்லாவற்றையும் பார்த்துச் செய்வார். ஆகவே, தற்போது அனைவரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு நாளை காலை பதில் அளிப்பார்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 23-3-1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

203. 1949-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக வனங்கள் மற்றும் மீனளத்துறையின் 19-11-1981-ஆம் நாளிட்ட 1345-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1949-ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1949) 12-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

101. கோரிக்கை எண். 19-க்கான துணைக்குறிப்பு-கழிவுநீர் அகற்றுதல் மற்றும் குடிநீர் வழங்கல், 1983-84-(தமிழ், ஆங்கிலம்).



136010 சென்னை-600 008.
V211,31 N83
N83-46-2;1

(375ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 505க்கான விடையைக் காண்க.)

(அ) இல்லை.

(ஆ) 1982 மார்ச் மாதம் முதல் சிமெண்ட்டின் மீதான கட்டுப்பாடு ஓரளவு மத்திய அரசினரால் தளர்த்தப்பட்டது. அதைப் பின்பற்றி இவ்வரசு தமிழ்நாடு லெவி சிமிண்ட் விநியோகம் (உ மற்றும் ஒ) ஆணை 1982 என்ற ஆணையை பிறப்பித்தது. மேற்கூறிய ஆணையின்படி கீழ்க்கண்ட இனங்களில் குறிப்பிடப்பட்டவர்கள் லெவி சிமெண்ட் பெறத்தகுதியுள்ளவராவர்.

அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள், சிறுதொழில்களின் தொழிற்சாலை கட்டிடம் கட்டவும், சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்ட சிறு தொழில்களுக்கும், சமூக நலத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கும், நகரங்களில் 100 சதுர மீட்டருக்கு அதிகப்படாமல் வீடுகள் கட்டும் தனிநபருக்கோ, கூட்டு நிறுவனத்திற்கோ, கிராமப்புறங்களில் 120 சதுர மீட்டருக்கு அதிகப்படாமல் வீடு கட்டுவோருக்கும், மேலும் வீடுகளை பழுது பார்ப்பதற்கும் அரசினால் குறிப்பிடப்படும் வேறு இனங்களும் இதில் அடங்கும்.

எந்த ஒரு நபருக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ 20 மூட்டைக்குத் தேவைப்படும் சிமெண்ட்டிற்கு வீட்டுவரி அல்லது நிலவரி கட்டியதற்காக ரசீதுகளை சான்றாக காண்பித்து அனுமதிச் சீட்டுக்கள் பெறலாம். 20 மூட்டைக்கு மேல் சிமெண்ட் தேவை உள்ளவர்கள் வேலையை பற்றிய முழுவிவரம் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர்/டிப்ளமோ பொறியாளர் (சிவில்)யாராவது ஒருவரிடம் பெற்ற சான்றிதழ், ஏற்பளித்த கட்டிட வரைபடம், தேவைப்படும் சிமெண்ட்டிற்கான மதிப்பீடு போன்ற விபரங்களுடன் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களுக்கும் சிமெண்ட் அனுமதி வழங்கப்படுகிறது.

(இ) மேலே வினா (ஆ) விற்கு பதிலளிக்கையில் கூறியது போல் கிராம கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் மூலம் கடன் பெற்று வீடுகட்டுபவர்கள் தேவையான சிமெண்ட் பர்மிட் பெற தக்க விவரங்களுடன் தங்களுடைய மனுக்களை கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், கோட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது சென்னையில் உள்ள மாவட்ட ஆட்சித்தலைவருடைய நேர்முக உதவியாளர் ஆகியோருக்கு அனுப்ப வேண்டும். வீடுகட்டும் சங்கத்தின் அத்தாட்சியின் பேரில் சிமெண்ட் பர்மிட் வழங்கப்படமாட்டாது.